
janasakthi.in | janasakthieditor@gmail.com info.janasakthi@gmail.com | janasakthitholaikatchi | www.facebook.com/Newsjanasakthi | janasakthitholaikatchi



புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வாரஇதழ்

நிறுவனர்: ப. ஜீவானந்தம்

மலர் 86 | 2023 நவம்பர் 05 - நவம்பர் 11 | விலை: ரூ.15 | 16 பக்கங்கள் | இதழ் 31




## உளவு பாக்கப்படும் எதிர்க்கட்சிகளின் செல்போன்கள்

# ஆப்பிள் நிறுவனம் எச்சரிக்கை!

**சென்ற திங்கள்கிழமை 30.10.2023 இந்தியாவில் உள்ள எதிர்க்கட்சித் தலைவர்கள், ஊடகவியலாளர்கள் சிலருக்கு அவர்கள் வைத்திருக்கும் ஐபோனில், ஆப்பிள் நிறுவனம் ஒரு எச்சரிக்கை அறிவிப்பை வெளியிட்டது.**




“உங்களிடம் உள்ள ஆப்பிள் ஐபோனை தொலைவில் இருந்து இயக்குவதற்கு (ரிமோட் கண்ட்ரோல்) அரசு ஆதரவுள்ள நபர்கள் முயற்சி செய்கிறார்கள்” என்பதே அந்த எச்சரிக்கை.

### எதற்காக இந்த குறி!

நீங்கள் யார் அல்லது நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்பதன் காரணமாக இந்தத் நபர்கள் உங்களைத் தனித்தனியாகக் குறி வைத்திருக்கலாம். அந்தத் தாக்குதலில் அவர்கள் வெற்றி பெறுவார்களேயானால், உங்கள் முக்கியமான தரவுகள், தகவல் தொடர்புகள் அல்லது கேமரா மற்றும் மைக்ரோஃபோனையும் தொலைவிலிருந்தே அவர்கள் கைப்பற்றவும், இயக்கவும் இயலும். இது தவறான எச்சரிக்கையாகவும் இருக்கலாம். தயவுசெய்து இந்த எச்சரிக்கையை தீவிரமாக எடுத்துக் கொள்ளுங்கள்” என்றும் அது தெரிவித்திருந்தது.

ஆனால் தாக்குபவர்கள் யார், அவர்களுக்கு எந்த அரசு ஆதரவு தருகிறது என்ற விவரம் வெளியிடப்படவில்லை.

### பெகாசஸ்தானா அது?

அவர்கள் சொல்லும் விவரங்களோடு ஒப்பிட்டால் இஸ்ரேல் நாட்டு நிறுவனம் தயாரித்த பெகாசஸ் எனும் உளவறியும் மென்பொருளோடு ஒத்துப் போகிறது. இதனைப் பயன்படுத்தி ஒருவரின் அலைபேசிக்கு ஒரு குறுஞ்செய்தியை அனுப்பலாம். அதை அவர் பார்க்கவோ அல்லது பதிலளிக்கவோ தேவையில்லை. செய்தி அலைபேசிக்குச் சென்ற உடனேயே, அதில் உள்ள அத்தனை தரவுகளும் சென்று சேர்ந்து விடும்.

ஆப்பிள் நிறுவனமோ, இதை நாங்கள் எவ்வாறு கண்டறிந்தோம் என்பதை விளக்கவில்லை. அவ்வாறு விளக்கி விட்டால், இந்த அரசு சார்ந்த தாக்குபவர்கள், அதையும் சமாளிப்பது எப்படி என அடுத்த கட்டத்திற்கு சென்று விடுவார்கள் என்று பதில் சொன்னது.



இந்த பெக்காஸஸ் என்பது, ஒரு நாட்டில் உள்ள பயங்கரவாதிகள் கட்டமைக்கப்பட்ட குற்றவாளி குழுக்கள் ஆகியோரை குறி வைத்து தரவுகளை திரட்டும் நோக்கத்தோடு அரசாங்கத்திற்கு தயாரித்து தரப்பட்டது. ஆனால் 2017ல் இருந்தே, இது உலகெங்கும் அரசியல்வாதிகள் பத்திரிக்கையாளர்கள் மனித உரிமை செயல்பாட்டாளர்கள் ஆகியோருக்கு எதிராக பயன்படுத்தப்பட்டு வருகிறது.

### அரசின் அவதூறு மழை!

அரசு சார்ந்தவர்கள் தாக்குதல் தொடுக்கிறார்கள் என்று இந்தியர்களுக்கு செய்தி வந்தால், இந்திய அரசு பதிலளிப்பது அவசியம். ஆனால் இந்திய அரசு எதையும் பேசாமல் மௌனமாக இருந்தது. செய்தி பரபரப்பானவுடன் நாங்கள் இதைப் பற்றி ஏற்கனவே விசாரித்துக் கொண்டிருக்கிறோம் என்று எலக்ட்ரானிக் மற்றும் தகவல் தொடர்பு துறையின் அமைச்சரான அஸ்வினி வைஷ்ணவி வாய் மலர்ந்தார்.

தற்காப்பை விட தாக்குதலே சிறந்தது என்பதில் எப்போதும் நம்பிக்கை கொண்டது பாஜக. எனவே இது பற்றி விசாரணை நடத்த வேண்டும் என்று கேட்டவர்களை, இந்திய ஜனநாயகத்தை சீர்குலைக்க முயற்சிக்கிறார்கள் என்று அவதூறு பொழிய தொடங்கிவிட்டது.

### புதிதல்ல!

சமூக ஊடகங்களை தனது கட்டுக்குள் வைத்திருக்க மோடி அரசு முயல்வது ஒன்றும் புதிது அல்ல.

**டிவிட்டர்:** ஏற்கனவே ட்விட்டர் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அலுவலரான ஜாக் டோர்சே, டுவிட்டரில் வெளியிடப்பட்டு வரும் சில பதிவுகளை வெளியிடக்கூடாது என இந்திய அரசு அழுத்தம் தந்தது என்று பகிரங்கமாக கூறியிருக்கிறார்.

**யாகூ:** யாகூ நிறுவனம் 2019 நவம்பர் வெளியிட்ட ஒரு அறிவிப்பு, அரசு ஆதரவு பெற்ற தாக்குபவர்கள் உங்களுடைய கணக்கின் மீது கட்டுப்பாடு ஏற்படுத்தி தகவல்களை பெற முயற்சிகளை எடுப்பதாக நாங்கள் நம்புகிறோம் என அறிவித்தது.

**கூகுள்:** கூகுள் நிறுவனமும் அரசு சார்ந்த தாக்குவோர்கள் உங்களை குறிவைத்து உங்கள் அலைபேசிக்குள் ஊடுருவ முயற்சிக்கிறார்கள் என 500க்கு மேற்பட்ட இந்தியர்களுக்கு எச்சரிக்கை விடுத்திருந்தது

எனவே இதைப் பற்றி பேசினால் ஜனநாயகத்திற்கு ஆபத்து என்று ஒன்றிய அமைச்சர்கள் பூச்சாண்டி காட்டுவதை யாரும் நம்ப போவதில்லை.

### எதற்காக இந்த உளவுப்பொருள்?

உளவு மென்பொருள்களை தயாரிப்பது என்பது உலகத்தில் லாபகரமான தொழில்களில் ஒன்று ஆகும். ஒரு டசனுக்கு மேற்பட்ட நாடுகள் இதில் பெரும் ஆர்வம் காட்டுகின்றன. தங்கள் நாட்டின் அரசியல், சட்டம், மற்றும் நெறிமுறை ஆகியவற்றை தம்மால் மட்டுமே காப்பாற்ற முடியும் என்று இந்த நாடுகளின் ஆளும் கட்சிகள் மக்களை நம்ப வைக்க முயல்கின்றன.

எதிர் குரல் எழுப்புவோர் அனைவரது அந்தரங்கங்கள், தொடர்புகள், செயல்பாடுகள் அனைத்தையும் அறிந்து வைத்திருப்பது அவற்றுக்கு அவசியமாகிறது. எப்படியாவது ஆட்சியில் நீடிக்க வேண்டும் என்பதற்காக மனித உரிமைகள் அனைத்தையும் காலில் போட்டு மிதிக்க இந்த கட்சிகள் தயங்குவதே இல்லை.

2021ல் பெகாசஸ் ஆயிரத்துக்கு மேற்பட்ட அடையாளம் தெரியாத அரசு சார்ந்த முகமைகளை தனது வாடிக்கையாளர்களாக கொண்டிருந்தது. 140க்கு மேற்பட்ட இந்தியர்கள் இதனால் குறிவைக்கப்பட்டார்கள். சில டஜன் இந்தியர்களின் அலைபேசியில் இவை செயல்பட்டு வருவது கண்டறியப்பட்டது.

### இதற்கு ஆகும் செலவு!

அப்படியானால் இந்திய அரசும் இந்த

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்




கிராமப்புற பாட்டாளிகள் திரளட்டும் பாட்னா திணறட்டும்

இந்திய விவசாய தொழிலாளர் சங்கத்தின்

15 வது அகில இந்திய மாநாடு

நாள்; நவம்பர் 2 முதல் 5 வரை / இடம்: பாட்னா, பிஹார்

கட்சிக் கடிதம்

# அச்சுறுத்தல் யாருக்கு?



போர்க்குணம் மிக்க தோழர்களே!

**உடல் நலம் தேறி வருகின்றது. வீட்டில் ஓய்வு எடுத்துக் கொள்ள வேண்டிய நிலை; இன்னும் சில நாட்களுக்கு இது தொடரும்; மற்றபடி வேறொன்றும் இல்லை. விரைவில் உங்களோடு இணைந்து களப் பணியாற்றிட உடல் ஒத்துழைக்கும் என்ற நம்பிக்கை உள்ளது.**

டெல்லி மகாராஜா மூலம் தமிழ்நாட்டுக்கு அனுப்பப்பட்ட அடியாள்; தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கு எதிராக போட்டி அரசாங்கம் நடத்த அனுப்பப்பட்ட அடியாள் அன்றாடம் சர்ச்சைக்குரிய கருத்துக்களைத் தெரிவிப்பது; அரசியல் அமைப்பு சட்டத்திற்குப் புறம்பாக செயல்படுவது; மதிப்புமிக்க அறிஞர்கள், தலைவர்களை அவமதித்துப் பேசுவது; சட்டப்பேரவை நிறைவேற்றிய மசோதாக்களை கிடப்பில் போடுவது; தேர்வாணையம் உள்ளிட்ட பல்வேறு துறைகளை செயல்படாமல் செய்வது; அமைச்சரவைக் கூட்ட முடிவுகளை அவமதிப்பது போன்ற அனைத்து வகை மக்கள் விரோத செயல்களை, குறிப்பாக தமிழ்நாட்டிற்கும், தமிழ்நாட்டு மக்களுக்கும் எதிராக செயல்படுவதையே தனது கொள்கையாகக் கொண்டு செயல்பட்டு வரும் ஒன்றிய மகாராஜாக்களின் அடியாளின் செயல்பாடாகும்.

ஒன்றிய மகாராஜாக்களும், அவர்களின் பிரதி நிதியுமான தமிழக அடியாளும் எதிர்பார்ப்பது தமிழ்நாடு கலவர பூமியாக மாற வேண்டும், அக்கலவரத்தின் மூலம் அரசியல் ஆதாயம் பெற வேண்டும் என்பது அவர்களின் குறிக்கோள்.

தமிழக அடியாள் அவ்வப்போது சர்ச்சைக்குரிய கருத்துக்களைத் தெரிவிப்பார். அதன் விளைவாக பல்வேறு அரசியல் கட்சிகள் மற்றும் அமைப்புகளின் கடும் எதிர்ப்புக்கும் கண்டனத்திற்கும் உள்ளாவார்.

இவை நடைபெற்றவுடன் அவசரமாக டெல்லி செல்வார். அங்கு சில நாட்கள் தங்கி, அங்குள்ள மகாராஜாக்களிடம் தான் மேற்கொண்ட நடவடிக்கைகளும், அதற்காக மூட்டை மூட்டையாக வாங்கி கட்டிக் கொண்டதையும் எடுத்துக் கூறுவார். அவர், இவர் என ஒவ்வொருவராக பார்த்து, பார்த்துப் பேசி அடுத்த ஆலோசனைகளையும் பெற்று சென்னை திரும்புவார்.

மீண்டும் சர்ச்சை பேச்சுக்களை கூறுவார். பலமாக வாங்கிக் கட்டிக்கொண்டு டெல்லிக்கு ஓடுவார். திரும்ப வருவார்; திரும்பச் செல்வார். இதுவே வாடிக்கை.

தமிழக அடியாள் வாரம் இரண்டு முறை டெல்லிக்கு விமானத்தில் செல்வதும்; திரும்பி வருவதும் தமிழ்நாடு அரசின் பணம் என்பதனை மறந்திடலாகாது.

"ஊரான் வீட்டு நெய்யே
என் பெண்டாட்டி கையே"

என்று ஒரு பழமொழி உண்டு.

தமிழக அடியாள் தமிழ்நாடு முழுவதும் வான் வழியாகவும், தரை மார்க்கமாகவும் சுற்றிச் சுற்றி வருவார். இவை அனைத்துக்குமான செலவு தமிழ்நாடு அரசினுடையது.

அடியாள் பயணம் செய்தால் அடியாளுக்கு முழுப் பாதுகாப்பு அளித்திடல் வேண்டும். தங்கும் வசதி, சாப்பாடு என அனைத்தும் தமிழ்நாடு அரசின் செலவாகும்.

நாள்தோறும் சர்ச்சைக்குரிய கருத்துக்களைத் தெரிவித்து, ஏதேனும் ஒரு வகையில் கலவரச் சூழல் ஏற்படாதா என எதிர்பார்த்தவர்களுக்கு ஏமாற்றமே மிச்சம்.

ஒரு பக்கம் தமிழக அடியாள்; மறுபக்கம் தமிழக பாஜகவின் நியமனத் தலைவர் அண்ணாமலை என இருவருமாகச் சேர்ந்து கலவரத்தின் மூலம் கால் பதிக்க நினைக்கின்றனர்.

குஜராத்தில் ருசி கண்ட பூனைகள் அல்லவா. தீப்பிடித்து எரிந்தால் நாம் பெரும் இழப்பு என்போம். ஆனால் அவர்களுக்கோ அதுதான் பிழைப்பு!

நேற்று குஜராத் கலவரம், இன்று மணிப்பூர் பற்றி எரிகின்றது அணைப்பதற்கு மாறாக மேலும் மேலும் பெட்ரோலை ஊற்றிக் கொண்டுள்ளனர். அது எரிந்து கொண்டிருக்கிற நிலையில் வேறொரு மாநிலம் கிடைக்காதா? என்று தவித்த நிலையில்; தென் மாநிலங்கள் எங்கும் காலூன்ற முடியாத நிலையில்; இருந்த ஒரு இடமான கர்நாடகா மக்களும் கைவிட்ட நிலையில்; தமிழ்நாட்டை பதம் பார்க்கலாமா என்கிற ஆசையல்ல, பேராசை!

அத்தகைய ஆசையை, பேராசையை தமிழக அடியாள் மூலம் நிறைவேற்றிக் கொள்ளலாம் என்கிற நப்பாசை.

தலைநகர் சென்னையில் மிக முக்கியமான இடங்களில் ஒன்று கிண்டியில் அமைந்துள்ள ராஜ்பவன். வெள்ளையர் ஆட்சிக் காலம் தொட்டு இயங்கி வருகின்ற இடம். பிரம்மாண்டமான, 156.4 ஏக்கரில் உள்ள பெரிய இடம். இங்கே அமைந்துள்ள மாளிகை தான் ஆளுநர் மாளிகை.



புல்வெளிகளும், அழகிய செடி கொடிகளும், வண்ண வண்ணப் பூக்களும், பல வண்ண குரோட்டான்ஸ் செடிகளும், கொடிகளும் மரங்களும் நிறைந்து கண்களுக்கு இனிதாய் காட்சியளிக்கும் இடம். புள்ளி மான்களும் கொம்பு மான்களும் சுற்றித் திரியும்.

இவற்றைப் பராமரிக்க, பங்களாவைப் பராமரிக்க நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் பணியாற்றி வருகின்றனர். மாளிகையில் தங்கியுள்ளவர்களுக்கும்; வரும் போகும் விருந்தினர்களுக்கும் விரும்பிய, வேண்டிய உணவு வகைகளைத் தயாரித்து அன்புடன் பரிமாற சமையல் கலைஞர்களும் உண்டு.

குடியரசு தலைவர் மட்டுமல்ல, ஒன்றிய மகாராஜாக்கள் வந்தாலும் இங்கே தான் தங்குவார்கள்; ஓய்வெடுப்பார்கள்; விருந்து உண்பார்கள்.

இங்கே விருந்து உண்பவர்கள் மட்டும் மொய் எழுதிட வேண்டிய அவசியமில்லை. அனைத்து மொய்யையும் தமிழ்நாடு அரசே ஏற்றுக்கொள்ளும்.

சகல வசதிகளும் நிறைந்திட்ட மாளிகை, சர்தார் பட்டேல் சாலையில் அமைந்துள்ளது. இது தடை செய்யப்பட்ட சாலை அல்ல. போக்குவரத்து நிறைந்திட்ட சாலையாகும். இந்தச் சாலையில் இருந்து உள்ளே நீண்ட தூரம் சென்றால் தான் ஆளுநர் மாளிகை கண்களுக்குத் தெரியும்.

சாலையில் இருந்து பிரிந்து செல்லும் சாலை முகப்பில் போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. இரண்டு அடுக்குப் பாதுகாப்பு. இவர்களை மீறி உள்ளே யாரும் சென்று விட முடியாது.

ஆளுநரை சந்திக்க வேண்டும் என முன் அனுமதி பெற்றவர்களையும், முன் கேட்டில் உள்ள போலீசார் சோதனை போட்டுத்தான் உள்ளே அனுப்புவார்கள்.

கடந்த அக்டோபர் 25ஆம் தேதி 14 வழக்குகளுக்கு உரிய ரவுடி கருக்கா வினோத் என்பவன், பெட்ரோல் நிரம்பிய பாட்டில்களுடன் பட்டேல் சாலையில் நின்று கொண்டிருக்க; இதனைப் பார்த்து சந்தேகமடைந்த போலீசார், அவனை பிடித்துக் கொண்டிருந்தபோது கையில் வைத்திருந்த பாட்டிலை வீசி விட்டான். அது கீழே விழுந்து உடைந்து விட்டது. இதனால் எந்த சேதமும் எந்த அதிர்ச்சியும் எவருக்கும் ஏற்படவில்லை.

அவனைப் பிடித்து காவல் நிலையம் கொண்டு சென்று வழக்குகளும் பதிவு செய்து, நீதிமன்றக் காவலில் மீண்டும் சிறையில் அடைக்கப்பட்டான்.

இந்த சம்பவத்தை யாரும் ஆதரிக்கவில்லை. ஆதரிக்க வேண்டிய அவசியமும் இல்லை. அனைவரும் கண்டித்துள்ளனர். காவல்துறை தனது கடமையை மிக கவனமாகவும் சரியாகவும் நிறைவேற்றியுள்ளது என்பதனை மறுக்கவோ மறைக்கவோ இயலாது.

இந்நிலையில், ஆளுநர் மாளிகையில் பணியாற்றும் ஆளுநரின் துணைச் செயலாளர் செங்கோட்டையன், ஆளுநரின் ஆணையை ஏற்று சென்னை பெருநகர காவல் ஆணையருக்கு புகார் ஒன்று கொடுத்துள்ளார்.

இவர் புகார் கொடுக்க வேண்டிய அவசியமோ தேவையோ ஏற்படவில்லை. சம்பவம் நடைபெற்றது பட்டேல் சாலையில், அங்கு பாதுகாப்புப் பணியில் இருந்த காவலர்கள் நடவடிக்கை எடுத்திட்ட நிலையில், மாளிகை சார்பில் புகார் அளித்திட வேண்டிய அவசியமில்லை. ஆனாலும் புகார் கொடுத்தார்கள்.

அப்புகாரில், ஆளுநரின் உயிருக்கு கடந்த பல மாதங்களாகவே திமுக மற்றும் கூட்டணிக் கட்சிகளால் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

பிரதான வாயிலில் சில விஷமிகள் பெட்ரோல் குண்டுகளை வீசி, குண்டு வெடிப்பு சப்தம் அப்பகுதி முழுவதும் எதிரொலித்தது. மற்றொரு குண்டு கேட்டை சேதப்படுத்தியது என்று புகார் கொடுக்கப்பட்டுள்ளது.

அனைவராலும் மதிக்கப்படக் கூடிய ஓர் உயர்ந்தபட்ச, கௌரவம் மிக்க இடத்தில் இருக்கும். இருக்கக் கூடியவர்கள் இப்படி சின்னத்தனமாக நடந்து கொள்ளலாமா?

இதன் மூலம் அவர்களின் விருப்பம் என்னவென்று தெரிகின்றது. தாங்கள் மேற்கொண்ட முயற்சிகள் அனைத்தும் படுதோல்வி கண்ட நிலையில், தற்போது உயிருக்கு அச்சுறுத்தல் என்ற ஆயுதத்தை பயன்படுத்தி அரசுக்கு நெருக்கடி கொடுக்க முடியுமா? என்ற அற்பத்தனமான செயலில் ஈடுபட்டுள்ளனர்.

தன் உயிருக்கு அச்சுறுத்தல் என்று கூறுபவரால், எப்படி தமிழ்நாடு முழுவதும் மிகுந்த பாதுகாப்போடு சென்று வர முடிகின்றது?

உண்மை என்னவெனில் பெட்ரோல் ஊற்றிய கண்ணாடி பாட்டில் ஒன்று, சாலையில் இருந்த பேரிகாட் எனப்படும் தடுப்பு சட்டத்தில் மோதி உடைந்தது அவ்வளவுதான். அங்கு தீ எதுவும் இல்லை. எந்தச் சேதமும் இல்லை.

ஏதாவது ஒரு வகையில் கலகத்தை உருவாக்கி, குஜராத், உத்தரபிரதேசத்தைப் போன்று, அரசியல் லாபம் பெறலாம் என்று கனவில் மிதக்கும் டெல்லி மகாராஜாக்களுக்கும் தமிழக அடியாளுக்கும் தக்க பாடம் புகட்ட ஆயத்தமாவோம்.

தனது உயிருக்கு அச்சுறுத்தல் என்று கூறி, தமிழ்நாட்டுக்கு அச்சுறுத்தலை உருவாக்க துடியாய் துடிக்கும் கும்பலுக்கு தக்க பாடம் கற்பிக்க ஆயத்தமாவீர். தோழர்களே!

மீண்டும் சந்திப்போம்.

வணக்கம் .


தோழமைமிக்க,

(இரா.முத்தரசன்)
மாநிலச் செயலாளர்

# நவம்பர் 1: புதிய தமிழ்நாடு மலர்ந்த நாள்

# ஜீவாவின் பேரின்ப முழக்கம்!

**தமிழகம் பிறந்ததைக் கொண்டாடி 1111956 ல் ஜனசக்தி வெளியிட்ட 'புதிய தமிழக மலர்' சிறப்பிதழில், தேசீயப் பெருநாள் என்ற தலைப்பில் பேராசான் ஜீவா எழுதிய கட்டுரை**



**ஊதுமினோ சங்கம்!**
**ஒலிமினோ வாழ்த்தொலிகள்!**
**ஓதுமினோ வெற்றி!**
**ஓங்குமினோ ஓங்குமினோ! – பாரதி**

இன்று புதிய தமிழகம் பிறக்கிறது. ஆந்திரப்பிரதேசம், கன்னடம், கேரளம் போன்ற புதிய ராஜ்யங்கள் மலர்கின்றன. பாரத நாட்டுப் படம் திருத்தி எழுதப்படுகிறது: பி' பிரிவு ராஜ் யங்கள் ஒழிக்கப்பட்டு, பல ராஜ்யங்களின் எல்லைகள் சீரமைக்கப்படுகின்றன. இராஜப் பிரமுகர்கள் மறைகிறார்கள்.

நவம்பர் முதல்நாள், தமிழ்ப் பெருமக்களின் நீண்ட நாட்பட்ட, நியாயமான, சரித்திர பூர்வமான, மொழிவழி ராஜ்யக் கோரிக்கையான, புதிய தமிழகம் மலர்கிற நாள் தமிழனின் வரலாற்றில் முதல்பெரும் முக்கியத்துவம் வாய்ந்த நாள்.

இந்தியா விடுதலை பெற்ற பிறகு, சமஸ்தான ஒழிப்பு என்ற பெரிய நிகழ்ச்சிக்குப் பின்னர், மிகப் பெரிய நிகழ்ச்சி, இந்த ராஜ்யச் சீரமைப்பு நிகழ்ச்சிதான்.

தமிழ் மக்கள், இந்தியாவின் பல்வேறு மொழி மக்களோடு, ஜனநாயக, சமதர்ம, சமாதான வாழ்வை நோக்கிக் கம்பீரமாக முன்னேறுவது மகத்தான வாய்ப்பைத் திறந்துவிடுகிற நாள், நவம்பர் முதல்நாள்.

ஆகவே, இந்நாள், தமிழ்ப் பெருமக்களுக்குத் திருநாள் பெருநாளாகும். இன்று கம்யூனிஸ்டுக் கட்சி வெற்றி சூடி எக்களிக்கும் 3 கோடி தமிழ் மக்களையும் பெருமிதத்துடன் வாழ்த்துகிறது. அவர்களோடு, இந்தத் திருவிழா பெரு விழாவில் மகிழ்ச்சியுடன் பங்குகொள்கிறது.

இந்த ஜனசக்தியின் வெற்றி வெள்ளப் பெருக்கு, தொடர்ந்து பாய்ந்து, சம்யுக்த மகாராஷ்டிரத்தையும், மகா குஜராத்தையும் அந்த இரு பெருமக்களும் அடையச் செய்வர் என்பது உறுதி,

எல்லைப் பிரச்சினைகள் வடக்கெல்லையும் சரி, தேவிகுளம் பீர்மேடும் சரி இதர எல்லைகளும் சரி இந்த ராஜ்யத்திலும் சரி இதர ராஜ்யங்களிலும் சரி இன்னும் தீர்க்கப்படவில்லை. இன்றைய மக்கள் வெற்றி தொடர்ந்து பேச்சு வார்த்தை முறைகளில் இவற்றிற்குத் தீர்வு காணும் என்பது திண்ணம்.

சென்னை ராஜ்யத்திற்கு மக்கள் விருப்பப் படி, தமிழ்நாடு என்று பெயர் சூட்ட ஆட்சியாளர்கள் இதுவரை ஒருப்படவில்லை.

தமிழே, தமிழ் ராஜ்யத்தின் ஆட்சி மொழி என்பது இன்னும் சட்டத்திலும் நடப்பிலும் ம் பெறவில்லை.

இந்த மக்கள் கோரிக்கைகள் விரைவில் வெற்றி பெறப்போவதை எந்தச் சக்தியாலும் தடுத்து நிறுத்த முடியாது.

மக்களின்ஜனநாயகச்சக்திஜயந்திரிபுக்கு இடமின்றி வெற்றி பெற்றிருப்பது மெய் ஆயினும், பிரிட்டிஷ் படைப்பான பிரி வினையும், சரித்திரத் தன்மையுற்ற செயற்கைப் படைப்பான எல்லைகளும், இந்திய ஒற்றுமைக்கு அபாயம்விளைக்கும் என்பதைவிட ஆற்றல் அளிக்கும் என்று காங்கிரஸ் தலைமை கருதுகிறது. அமிர்தசரஸ் காங்கிரஸ் தீர்மானத்தையும், நேருஜியின் கூற்றுகளையும் கவனித்தால் காங்கிரஸ் தலைமையின் மொழி ராஜ்யங்களை நோக்கத்தான் தேசத்தை இழுத்துக்கொண் டிருக்கிறது என்பது தெள்ளத் தெளிவாகும். எனவே கிடைத்த மகத்தான வெற்றியை



விழிப்போடிருந்து காக்கவேண்டும்.

இந்தச் சரித்திர ரீதியான புதிய வாய்ப்பு, தமிழ் மக்களை நிலச்சீர்திருத்தத்தில் கவனத்தை ஊன்றவும், தமிழ்த் தேசிய முதலாளிகள், அந்நிய ஏகபோக மூலதனத் திலிருந்து தங்களைப் பிரித்துக் காட்டி, தேசப் பொருளாதார முன்னேற்றத்திற்காக வாய்ப்புகளைப் பெறவும் அதிக வாய்ப்பு அளிக்கும்.

பொருளாதாரச் சீரமைப்பாலும் கலாசார மறுமலர்ச்சியாலும், தமிழ்த் தாயகத்தைச் சீரமைப்பதும், தமிழ்ப் பெருமக்கள் உயர் வாழ்வு பெறச்செய்வதும் தான், இன்று சகல ஜனநாயகச் சக்திகளின் முன்பும் நிற்கும் முதற் பெரும் போராட்டம்.

இந்தப் புனிதப் பொன்னாளில், நீலகிரிவாழ் தொதுவர், ஏலகிரி, ஜவ்வாது மலைகளில் வாழும் மலைவாசிகள் போன்ற மலைவாழ் மக்களும் நம்மோடு, வெகு விரைவில், ஈடுசோடாக முன்னேற, சகோதர உணர்ச்சியுடன் உதவ, நினைவு கூர்வோமாக!.

இந்தத் திருநாளில் சீரமைப்பால் ஒன்றுபட்ட புதிய ராஜ்யங்கள் மூலம் மேலும் மிக வலுப்பெறும் இந்திய ஒற்றுமையை, கண்ணின் கருவிழிபோல் காப்போமாக!

இந்தத் திருநாளில் சம்யுக்த மகாராஷ்டிரமும் மகா குஜராத்தும் உருவாக மொழிவழி ராஜ்ய வெற்றி பெற்ற சகோதர மக்களோடு நாமும் அணிவகுத்து நின்று ஒற்றுமை முழக்கம் செய்வோமாக!

இந்த நன்னாளில் ஏற்படுகிற மகத்தான வெற்றியைத் தொடர்ந்து புதிய வெற்றிகளை நோக்கி முன்னேறுவோமாக!

வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழ்! வாழிய பாரத மணித்திருநாடு!

**ஜனசக்தி, 1.11.956**

---

1 ஆம் பக்கத் தொடர்ச்சி

நிறுவனத்தின் வாடிக்கையாளர் தானே! பத்து அலைபேசிகளில் இந்த உளவுப் பொருளை நுழைக்க 11 லட்சத்து 50 ஆயிரம் அமெரிக்க டாலர்கள் ஆகும் என்று சொல்கிறார்கள். குத்து மதிப்பாக ஒரு அலைபேசிக்கு ஒரு கோடி ரூபாய் செலவாகும். எனவே இதைச் சாதாரணமானவர்கள் யாரும் பயன்படுத்தி விட முடியாது.

எனவே இந்தியர்களுக்கு இந்தச் செய்தி வந்ததால், சந்தேகத்தின் முள் மோடி அரசையே காண்பிக்கிறது!

ஜனநாயக விரோதிகள் என்று ஒரு பக்கம் தாக்கிக் கொண்டிருந்தாலும், மறுபக்கத்தில் தனக்குத் தெரிந்த ஊடகங்கள் வழியாக நிலைமையை சமாளிக்க மோடி அரசு முயன்றது.

### சமாளிக்கும் முயற்சி

இது தவறாக வெளியிடப்பட்ட செய்தி என்றும் இது பற்றி விரைவில் ஆப்பிள் நிறுவனம் தகவல் சொல்லும் என்றும் மோடிக்கு கட்டுப்பட்ட தொலைக்காட்சிகள் அலறின. அல்காரிதத்தில் (படிமுறை தீர்வு அல்லது கணிப்பு நெறி) ஏற்பட்ட குளறுபடியே காரணம் என்றன.

ஆப்பிளோடு தொடர்புடைய மூத்த ஒன்றிய அமைச்சர் ஒருவர் அதனோடு பேச்சுவார்த்தை நடத்தினார். எனவே எந்த ஒரு குறிப்பிட்ட அரசையும் அச்சுறுத்துவதற்கான நோக்கம் எமக்கு இல்லை. இந்தியாவில் மட்டுமல்ல 150 நாடுகளுக்கு இந்த எச்சரிக்கை போய் இருக்கிறது என்று ஆப்பிள் ஒரு தகவலை வெளியிட்டது.

அதே நேரத்தில் அல்காரிதம் பற்றி கேட்டபோது அது உண்மை அல்ல எங்கிருந்து அந்த கதை வெளிவந்தது என்று தெரியாது என்று மறுத்தது.

### என்னவெல்லாம் செய்யலாம்?

ஸ்டேன் சாமி அவர்களின் கதை நமக்கு நினைவிருக்கும். அவரது கம்ப்யூட்டரில் மாவோயிஸ்டுகளுக்கு எழுதிய கடிதம் இருந்தது என்றுதான் அவரை கைது செய்தார்கள். ஆனால் பின்னர் ஆய்வு செய்தபோது, நெட் ஒயர் என்ற உளவு மென்பொருள் அவரது கணினியில் செலுத்தப்பட்டிருந்ததையும், அவரது 24 ஆயிரத்துக்கு மேற்பட்ட கோப்புகளை நகலெடுத்ததோடு, அவரை குற்றவாளி ஆக்குவதற்காக சில ஆவணங்கள் வெளி யிலிருந்து உள்நுழைக்கப்பட்டதையும் அந்த ஆய்வுகள் வெளிப்படுத்தின.

பார்க்கின்ஸன் நோயால் கையில் எடுத்து சாப்பிட முடியாத நிலையில் இருந்த அந்த முதியவருக்கு ஒரு உறிஞ்சும் குழல் கொடுக்க சிறை விதிகள் இடம் தரவில்லை என்று கூறி மறுக்கப்பட்டதையும், நீதிமன்றமும் இது தலையிட மறுத்ததையும், பிறகு அவர் மரணம் அடைந்ததையும் நாம் மறந்து இருக்க முடியாது.

இந்த உளவு மென்பொருள் மூலம் எந்த அலைபேசியிலும் இந்த தகிடுதத்தங்களைச் செய்ய முடியும். அவர்களை தேச விரோதிகளாக சித்தரித்து சிறையில் அடைக்கவும், கொல்லவும் கூட இயலும்.

ஆப்பிள் நிறுவனம் பேசுவதில் இருந்து, வெளிப்படுத்தி இருப்பதை விட அதிக விவரங்கள் அதற்குத் தெரியும் என்பது புலப்படுகிறது.

அவற்றை அது வெளியிடாது. அதை வெளியிட வேண்டும் என்று மோடி அரசும் கேட்காது. அதிக அழுத்தம் தந்து உண்மை வெளிவந்தால் பாதிக்கப்பட போவது யார்? சொந்தக் காசில் யாரேனும் சூனியம் வைத்துக் கொள்வார்களா!

**– டி.எம்.மூர்த்தி**

---

## வினாடி - வினா

1 ஆதிச்சநல்லூரில் தொல்லியல் ஆய்வில்கிடைத்தநெல்மணிகளின் காலம்?

2 தமிழ்நாட்டில் கண்டுபிடிக்கப்பட்ட தொல் பழங்கற்காலத்தைச் சேர்ந்த கற்கோடாரிகளின் காலம்?


3 ஐ.நா.சபையில் இருந்து முதன்முதலாக வெளியேற்றப்பட்ட நாடு எது?

4 ஜெர்மன் கம்யூனிஸ்ட் தலைவர் கார்ல் லீப்னெக்ட் எப்படி இறந்தார்?

5 மற்ற விலங்குகளை தங்களின் உணவுக்காக மட்டும் உண்ணும் விலங்குகளின் பெயர் என்ன?

6 நம் சூரிய குடும்பத்தில் உள்ள மிகப்பெரிய கோள் எது?

**விடைகள் 12 ஆம் பக்கம்**



தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

ஜனசக்தி

மலர் 86 இதழ் 31

## குற்றவாளிகளே நீதிபதிகளாகும்போது..

ஆந்திராவில் நடைபெற்ற ரயில் விபத்தில் 14 பயணிகள் கொல்லப்பட்டு, 50க்கும் அதிகமானோர் படு காயங்களுக்கு உள்ளாகி இருக்கிறார்கள்.

ரயில் ஓட்டுநரும் அவரது உதவியாளரும் தான் இந்த விபத்துக்கு காரணம். சரிவர இயங்காத சிக்னல்களைப் பார்த்து ரயிலை இயக்க அவர்கள் தவறி விட்டார்கள் என்று ஒன்றிய அரசு கை கழுவப் பார்க்கிறது. அவர்கள் இருவருமே இவற்றில் இறந்து விட்டதால் பதில் சொல்ல ஆளில்லை.

ரயில் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு 2017ல் ‘ராஷ்ட்ரிய ரயில் சன்ரக்ஷ கோஷ்’ என்ற பெயரில் தனி நிதி ஒன்றை ஒன்றிய அரசு உருவாக்கியது.

ரயில்கள் ஒன்றோடு ஒன்று மோதாமல் தடுக்கவும், சூழலுக்கு ஏற்ப ஓட்டுநர் செயல்படவில்லை என்றால் தானாகவே பிரேக் சிஸ்டத்தை இயக்கி ரயிலை நிறுத்தவும் ‘கவச்’ என்ற மோதல் தடுப்பு தானியங்கி பாதுகாப்பு கருவி உள்ளது. இது பத்து ஆண்டுகளுக்கு முன்பு அறிமுகப்படுத்தப்பட்டு விட்டது. அப்போது ஜூலை 2020க்குள் 35,000 கி.மீ. நீளமுள்ள ரயில் பாதைகளில் இந்த மோதல் தடுப்பு கருவி பொருத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

ஆனால் இதுவரை 1455 கிலோமீட்டர் நீளமுள்ள ரயில் பாதைகளில்தான் இது பொருத்தப்பட்டுள்ளது.

இது சரியாக பொருத்தப்பட்டு இருக்குமேயானால் ஒரிசாவிலும் ஆந்திராவிலும் மட்டுமல்ல ஒருபோதும் ரயில் விபத்து நடப்பதற்கே வாய்ப்பு இல்லை

இந்த நிதியின் கீழ் 20 ஆயிரம் கோடி ரூபாய் சேர்ந்து இருக்க வேண்டும். ஆனால் 4225 கோடி மட்டுமே வந்துள்ளது. ஒன்றிய அரசு ரூ.1775 கோடி பங்களிப்பை செலுத்தவில்லை என 2022 சிஏஜி அறிக்கை வெளிப்படுத்தி இருந்தது

அந்த நிதியிலும் கூட, ரயில் பாதுகாப்போடு எந்த சம்பந்தமும் இல்லாத, பீங்கான் பாத்திரங்கள், கால்மிதி, மின்சார பொருட்கள், மேசை நாற்காலி, குளிர் கால ஜாக்கெட்டுகள், கம்ப்யூட்டர்கள், நகரும் படிகள் ஆகியவற்றை வாங்கியதோடு தோட்டங்கள் வளர்க்கவும், கழிவறைகள் கட்டவும், ரயில் நிலையங்கள் முன்பு கொடிமரம் நடவும், போனஸ் மற்றும் சம்பளம் வழங்கவும் இந்த பாதுகாப்பு நிதி தவறாகப் பயன்படுத்தப் படுவதை சிஏஜி சுட்டி காட்டியுள்ளது.

மோடி அரசின் அலட்சியப் போக்கே இந்த படுகொலைகளுக்கு காரணம். அரியலூர் ரயில் விபத்துக்கு பொறுப்பேற்று லால்பகதூர் சாஸ்திரியும், அசாமில் நடந்த ரயிலா விபத்துக்கு பொறுப்பேற்று நிதீஷ் குமாரும் ரயில்வே அமைச்சர் பொறுப்பில் இருந்து விலகினர். ஆனால் பாஜகவின் ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவிடமிருந்து இத்தகைய நேர்மையான, நாணயச் செயல்பாட்டை நாடு எதிர்பார்க்க முடியாது.

ஆனால் இந்த படுபாதகத்தை மறைத்து விட்டு,

கேரளாவில் நடந்த குண்டு வெடிப்பை பற்றி ஒன்றிய அமைச்சர்கள் பேசிக் கொண்டிருக்கின்றனர்.

அந்தக் குண்டுவெடிப்புக்கு காரணமானவர்கள் கைது செய்யப்பட்டு இருக்கிறார்கள். விசாரணைகளும் நடந்து கொண்டிருக்கின்றன. ஆனால் இந்த பழியை ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் மீது சுமத்துவதிலேயே பிஜேபியின் ஒன்றிய அரசும் குறியாக இருக்கின்றன.

கேரளா அரசு இஸ்ரேலை எதிர்ப்பதாகவும், பாலஸ்தீனத்தை ஆதரிப்பதாகவும், பாலஸ்தீனத்தின் பயங்கரவாத கும்பல் தான் இந்த குண்டு வெடிப்புக்கு காரணம் என்பதாகவும் ஒன்றிய அமைச்சர் ராஜீவ் சந்திரசேகர் தனது ட்விட்டர் பக்கத்தில் கூறியிருக்கிறார்.

ஒரு அமைச்சருக்கு இந்த நாட்டின் விசாரணை அமைப்புகள் மீது குறைந்தபட்ச மதிப்பு கூட இல்லை. இவரே முடிவை அறிவிக்கிறார்.

இரண்டு பேர் கொல்லப்பட்டுள்ள ஒரு குண்டு வெடிப்புக்கு, உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கும் போதே, ஆளாளுக்கு சலங்கை கட்டி ஆடும் இந்த அமைச்சர்கள், ஆறு மாதமாக படுகொலைகள் நடந்து கொண்டே இருக்கும் மணிப்பூரை பற்றி வாய் திறந்ததில்லை.

தோல்வி பயம் பாஜகவை ஆட்டிப் படைக்கிறது. மனிதர்களை பிளவு படுத்தி, கலவரங்களை மூட்டுவதால் தான் தேர்தல் லாபம் காண முடியும் என்பது ஆர்எஸ்எஸ்ஸின் அனுபவம். எனவேதான், இல்லாத வாய்ப்புகளை எல்லாம் உருவாக்கிக் கொண்டு, சிறுபான்மையினரையும் மதச்சார்பற்ற முற்போக்கு சக்திகளையும் வாய்க்கு வந்தபடி தகுதியற்ற அருவருக்கத் தக்க சொற்களால் வசைவாடித் திரிகின்றனர்.

இது அவர்களது தகுதியின்மையை வெளிப்படுத்துமே தவிர, மக்களின் ஆதரவை திரட்டி தரப் போவதில்லை.

### அரசின் தலைமையிலான

# கோயில் சீர்திருத்தங்களே சமூக நீதியை வழங்கின


மனுராஜ் சண்முகசுந்தரம்

இந்தியாவில் அரசின் கட்டுப்பாட்டில் கோவில்கள் இருப்பதற்கு ஒரு வரலாற்று அடிப்படை உள்ளது. கோவில் சொத்துக்களை புறக்கணிப்பிலிருந்தும் தவறான நிர்வாகத்திலிருந்தும் தடுப்பதற்கு அரசின் கட்டுப்பாடு அவசியம் ஆகும்.

”கோயில்களின் மீதான அரசின் கட்டுப்பாடு காலவரையற்ற அநீதி” என்ற தலைப்பில் திரு.சி.ஆர்.கேசவன் அவர்கள் எழுதி அக்டோபர் 15ல் வெளிவந்த கட்டுரையில், கோயில்களின் மீதான அரசின் கட்டுப்பாட்டிற்கு எதிராக வாதிட்டுள்ளார்.

”கோவில் மீட்பு” என்ற முன்மொழிவில் உள்ள அனுமானத்தின் அடிப்படையே பொருண்மைத் தவறும் தர்க்க ரீதியான குறைபாடும் உடையது ஆகும். இத்தகைய ஆதாரமற்ற குற்றச்சாட்டின் மூலம், இந்து சமூகத்துக்குள் நிகழ்ந்த குறிப்பிடத்தக்க சமூகச் சீர்திருத்த இயக்கத்தை இந்த வலதுசாரி சமூக குழுக்கள் மூடி மறைக்கப் பார்க்கிறது.

பிற அதிகார வரம்புகளைப் போலன்றி, இந்தியாவில் அரசுக்கும் கோயிலுக்கும் இடையே தெளிவான பிரிவினை இல்லை.

தற்போது எஞ்சியிருக்கும் மிகப் பழமையான கோயில்களிலிருந்து இங்குள்ள வழிபாட்டுத் தலங்கள் அனைத்தும் மன்னர்களால் பொது நிதியில் கட்டப்பட்டது ஆகும். எனவே, கோயில்கள் எப்போதும் சமூகத்தில் உள்ள அனைவருக்கும் தடையின்றி சென்று வரக் கூடிய பொது இடங்களாகவே கருதப்படுகின்றன.



எனவே, கோயில்களுக்குள் சென்று வருவதில் கட்டுப்பாடுகள் மற்றும் அர்ச்சகர்கள் நியமனத்தில் தடை விதிக்கப்படுவது பாரம்பரியமான சமய நடைமுறைக்கு மாறானதாக மட்டுமே கருதப்படும். கோவில்களில் சமத்துவமான அணுகுமுறையை உறுதி செய்வது மதத்தை ஜனநாயகப்படுத்தியுள்ளது.

பழைய திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் அமைந்துள்ள வைக்கத்தில் உள்ளூர் கோயிலின் அருகிலுள்ள தெருவில் பிற்படுத்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த மக்கள் பயன்படுத்துவதற்கு தடை செய்யப்பட்டதை எதிர்த்து பெரியார் ஈ.வே. ராமசாமி மற்றும் திரு. நாராயண குரு ஆகியோர் தலைமையில் நடத்திய போராட்டமானது கோயில் சீர்திருத்த இயக்கத்தின் துவக்கமாகும்

இது கோயிலுக்குள் சென்று வரும் உரிமை மீட்பிற்கான பிரகடனம் மற்றும் அதற்கு இசைவான சட்டமியற்றலுக்கும் வழி வகுத்தது.

இத்தகைய சீர்திருத்தங்களைச் செயல்படுத்த, அன்றைய சென்னை மாகாண அரசு, கோயில் சொத்துக்களைக் கண்காணிப்பதற்கும், பாதுகாக்கவும் கோயில்களுக்குள் தங்கு தடையின்றி சென்று வருவதற்கும் முதன் முதலில் 1927ல் இந்து சமய மற்றும் அறநிலைய அறக்கட்டளைச் சட்டம் எனும் ஒரு விரிவான சட்டத்தை இயற்றியது.

இச்சட்டமானது அதன் அடிப்படையை சிதைக்கும் சட்ட மற்றும் சட்டமன்ற முயற்சிகளை எதிர் கொண்டது. மிகவும் பிரபலமான ஷிரூர் மடம் வழக்கில் இந்திய உச்ச நீதிமன்றம், இச்சட்டத்தின் அரசியலமைப்புச் சட்ட செல்லும் தன்மையை ஏற்றுக் கொண்ட போதிலும் பல பிரிவுகளை செல்லாது என அறிவித்தது.

1960 ஆம் ஆண்டு சி.பி.ராமசுவாமி ஐயர் தலைமையில் இந்திய அரசு இந்து சமய அறநிலையத்துறை ஆணையத்தை அமைத்தபோது, சட்டமியற்றும் பணிக்கான தேவை மேலும் வலுப்பெற்றது. அந்த ஆணையம் தாக்கல் செய்த அறிக்கையில், கோவில் சொத்துக்களை பாதுகாக்கவும், முறைகேடுகளிலிருந்தும் தவறான நிர்வாகத்திலிருந்தும் தடுப்பதற்கும் கோயில்களில் அரசின் கட்டுப்பாடு அவசியம் என்று மீண்டும் வலியுறுத்தப்பட்டது.

பல தசாப்தங்களாக, கோவில்களின் மீதான அரசின் கட்டுப்பாட்டிற்கு எதிராக 1972ம் ஆண்டில் சேஷம்மாள் எதிர் தமிழ்நாடு மாநிலம் வழக்கு தொடங்கி 2016ல் ஆதி சைவ சிவாச்சாரியார்கள் நல சங்கம் எதிர் தமிழ்நாடு அரசு வரை பல்வேறு சவால்கள் வந்த போதிலும், உச்ச நீதிமன்றத்தின் அரசியலமைப்புச் சட்ட நீதிமன்றங்களால் அவை நிராகரிக்கப்பட்டுள்ளன.

சமீபத்திய சபரிமலை தீர்ப்பில் காணப்படுவது போல், பல ஆண்டுகளாக, நீதிமன்றங்கள் அரசியலமைப்பு நெறிமுறையைச் சுற்றி வளர்ந்து வரும் நீதித்துறைக்கு ஏற்ப கோயில்களின் செயல்பாட்டை ஜனநாயகப்படுத்த வேண்டியதன் அவசியத்தை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளன.

பாரதிய ஜனதா கட்சியும் மற்றும் அதன் ஆதரவாளர்களும் “இந்து கோவில்களை விடுவிக்க வேண்டும்“ என்று தொடர்ச்சியாக பரப்புரை செய்து வந்த போதிலும், கோயில்களின் நலனுக்காக இந்த விஷயத்தில் அவர்கள் எப்போதும் எதையும் செய்ததில்லை.

பாஜகவால் ஆளப்படும் மாநில அரசு எதுவும் தங்களின் அரசின் கட்டுப் பாட்டிலிருக்கும் கோயில்கள் எதையும் விட்டுக் கொடுத்ததில்லை.

ஆகவே இவர்களின் பரப்புரையின் பின்னணியில் மக்களுக்கான நலனோ தேவையோ, சட்டத் தெளிவோ இல்லை என்பது தெளிவாகிறது. அரசிடமிருக்கும் கோயில்களையும் அதன் சொத்துக்களையும், யாரிடம் ஒப்படைப்பது அதனை நிர்வகிக்கப் போவது யார், தனி நபரா இல்லை யார்? என்ற எந்த திட்டவட்டமான பதிலும் அவர்களிடம் இல்லை.

மாறாக, மசூதிகள் ஏன் அரசின் கட்டுப்பாட்டுக்குள் இல்லை? ஏன் சட்டம் இயற்றப்படவில்லை? என்று வினவுவதில் மட்டுமே குறியாக இருக்கின்றனர். இது அபத்தமானது, தவறானது.

வக்ஃபுக்குச் சொந்தமான சொத்துக்கள் அனைத்தும் 1954ம் ஆண்டைய மாநில வக்ஃப் வாரியம் மற்றும் மத்திய வக்ஃப் சட்டம், ஆகியவற்றின் வரம்பிற்குள் உள்ளன. உள்ளபடியே, வக்ஃப் வாரியச் சொத்துக்களை பொது வளாகச் சொத்தின் வரையறையின் கீழ் ”பொது வளாகம்” என்று கொண்டு வரும் பொருட்டு 2010ல் தமிழ்நாடு பொது வளாகச் சட்டத்தில் ஒரு சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட்டது.

அந்தந்த சமய அறக்கட்டளைகளுக்குச் சொந்தமான சொத்துக்கள் அனைத்தும் அந்தந்த சமய நிறுவனங்களில் பொது நம்பிக்கையைப் பாதுகாக்கும் பொருட்டு போதுமான மேற்பார்வையுடன் நிர்வகிக்கப்பட வேண்டும் என்பதையே இது காட்டுகிறது.

2021 ஆம் ஆண்டு, திராவிட முன்னேற்றக் கழக அரசு அமைந்த பிறகு மட்டும் பிற்படுத்தப்பட்ட சமூகங்களைச் சேர்ந்த சுமார் 100 அர்ச்சகர்களை கோயில்களில் பூசாரிகளாக நியமித்துள்ளது. இந்த அர்ச்சகர்களுக்கு இந்து சமய சடங்குகளில் பயிற்சி அளிக்கப்பட்டு, தகுதி வாய்ந்த சமய பெரியோர்களால் சான்றும் அளிக்கப்படுகிறது.

சமீபத்தில் மூன்று பெண்களும் கோயில் அர்ச்சகர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். இதனை ”சமத்தும் மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய புதிய சகாப்தம்” என்று தமிழ் நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் கூறினார்.

திராவிட இயக்கமானது தமிழ் நாட்டில் பாலின நீதியினை நோக்கி தன் திசை வழி காட்டியினை மாற்றிச் சென்று கொண்டிருக்கும் இவ்வேளையில், கோயில்களின் அரசின் கட்டுப்பாட்டிற்கு எதிரான பா.ஜ.க பரப்புரை செய்து கொண்டிருப்பது, அக்கட்சியானது தற்போதைய நவீன இந்திய சமூகத்துக்கு தொடர்பற்று முற்றிலும் வெகு தூரத்தில் இருக்கிறது என்பதையே காட்டுகிறது.

**சென்னை உயர் நீதிமன்ற வழக்கறிஞர்**

**(தமிழில் ப.பாலதண்டாயுதம் வழக்கறிஞர்)**



த.லெனின்

# கசக்கும் அமிர்த காலம்! பசப்பும் மோடியின் ஜாலம்!

**இந்திய விடுதலைப் போராட்டத்தில் எந்த பங்களிப்பும் செய்யாத ஆர்.எஸ்.எஸ்.சும் – பாஜகவும் இன்று இந்திய விடுதலையை கொண்டாடி வருகின்றனர். அத்தோடு நமக்கும் தேச பக்தி குறித்த பாடத்தையும் நடத்தி வருகின்றனர் என்பதுதான் பெரும் கேடு!**

இங்கிலாந்தின் காலனி ஆதிக்கத்திற்கு உட்பட்ட இந்தியாவில் வளர்ச்சி குன்றி வறுமையை வளர்த்தது. இதனை குறை வளர்ச்சியின் வளர்ச்சி என அறிஞர் ஏ.குண்டர் பிராங்க் கூறுகிறார்.

கிராமப்புற சிறு குறுந்தொழில்கள் அழிக்கப்பட்டன. விவசாயம் முற்றாக புறக்கணிக்கப்பட்டது. இதன் காரணமாக வறுமையும் பஞ்சமும் தலைவிரித்தாடும் நாடாக இந்தியா மாறிப்போனது. எனவே விடுதலைக்கு போரிட்ட நமது தலைவர்கள் இந்தியா விடுதலை பெற்ற பிறகு என்ன மாதிரியான வளர்ச்சியை நாட வேண்டும் என்பதற்காக 1938 லேயே திட்ட குழு உருவாக்கப்பட்டது. நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் தலைமையில் இது செயல்பட்ட வரலாறும் உண்டு. சொந்த காலில் இந்திய பொருளாதாரம் முன்னேற வேண்டும் என்பதுதான் 1950 களில் நேருவிய பொருளாதார கொள்கையாக இருந்தது.

இப்படிப்பட்ட காலத்தில்தான் இந்திய பெரும் முதலாளிகள் ஜே. ஆர். டி. டாட்டா, ஜி. டி. பிர்லா, லாலா ஸ்ரீராம், புருஷோத்தமதாஸ், தாக்கூர் தாஸ் உள்ளிட்ட தேசிய முதலாளிகள் ஒன்று சேர்ந்து இந்திய வளர்ச்சிக்கான முதலாளிகளுக்கு சாதகமான ஒரு திட்டத்தை அளித்தனர். இதற்கு பம்பாய் திட்டம் என்ற மறு பெயர் உண்டு.

இந்த இரண்டு திட்டங்களிலும் உள்ள சிறந்த கூறுகளை எடுத்து இந்தியாவிற்கான கலப்பு பொருளாதாரக் கொள்கையை உருவாக்கி அதில் பயணித்தனர். 1950களில் இருந்து 1980 வரை இந்திய பொருளாதார வளர்ச்சி 3.5% ஆகவும், 1980 லிருந்து 2000 வரை 5.5% ஆகவும், 2000 லிருந்து 2012 வரை 7% ஆகவும் இருந்த பொருளாதார வளர்ச்சி தற்போது 5.5% லிருந்து 6.5% வரை குறைந்து இருக்கக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஆனால் இந்தியாவின் பழைய வளர்ச்சியின் தொடர்ச்சியாக வேண்டுமானால் 8% க்கும் மேல் வளர்ச்சி தேவையாக இருக்கும். அதற்கான முதலீடுகள் இலக்குகள் ஏற்றுமதி ஊக்குவிப்புகள் ஆகியவற்றோடு கல்வி மற்றும் சுகாதாரத்திற்கான முதலீடுகளையும் நகர்புற வளர்ச்சிக்கான முதலீடுகளையும் அதிகரிக்க வைப்பது என்பது மிக அவசியமானது ஆகும். ஆனால் இன்று பெரும் பிரச்சனையாக உருவெடுத்து இருப்பது ஏழை பணக்காரர் இடைவெளி என்பதுதான். இதை இட்டு நிரப்புவதற்கான எந்த உத்தரவாதமும் இல்லாத நிலையில்தான் இந்த அரசு தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

### பஞ்ச பிரான் அல்லது அமிர்த காலம்!

இந்தியாவின் 75வது சுதந்திர தினத்தன்று பிரதமர் நரேந்திர மோடி அம்ரித் கால் அல்லது 'அமுதத்தின் சகாப்தம்' என்ற கருத்தை ஒட்டுமொத்த தேசத்திற்கும் அறிமுகப்படுத்தினார். அம்ரித் கால் என்பது 2047 ஆம் ஆண்டுக்கான பிரதமரின் தொலைநோக்கு பார்வையான 'புதிய இந்தியா', நாட்டின் எதிர்கால நம்பிக்கைகளை நிறைவேற்றும் வாய்ப்பைக் கொண்டு வரும் புதிய விடியலாகுமாம்.

விரைவான இலாபகரமான வளர்ச்சி, அனைவருக்கும் சிறந்த வாழ்க்கை நிலைமைகள், உள்கட்டமைப்பு மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றங்கள் மற்றும் இந்தியாவின் மீதான உலகின் நம்பிக்கையை மீண்டும் எழுப்புதல் ஆகியவற்றின் மூலம் இந்தியப் பொருளாதாரத்தின் அனைத்தையும் மறுசீரமைக்க வரவிருக்கும் 25 ஆண்டுகளில் இதை நிறைவேற்றப்படும் என்றார். பஞ்ச பிரான் அல்லது அமிர்த காலின் 5 அடிப்படைகளில் இந்தியாவை மேம்படுத்துதல், காலனித்துவ மனப்பான்மையின் எந்த தடயத்தையும் அகற்றுதல், நமது வேர்களில் மரியாதை மற்றும் பெருமிதம், ஒற்றுமையின் வளர்ச்சி மற்றும் குடிமக்களிடையே கடமை உணர்வு ஆகியவை அடங்கும்.

### அம்ரித் காலின் முதல் பட்ஜெட்

நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் 2023 – 24 ஆம் ஆண்டிற்கான யூனியன் பட்ஜெட், அமிர்த காலின் முதல் பட்ஜெட்டில் அதிகாரம் பெற்ற மற்றும் உள்ளடக்கிய பொருளாதாரத்திற்கான முன்னோக்கிய வழி என்று அறிவித்தார். புதிய இந்தியாவுக்கான தொழில்நுட்பம் சார்ந்த மற்றும் அறிவு சாந்த பொருளாதாரத்தை உள்ளடக்கியதன் மூலம் பெண்களுக்கு அதிகாரமளிக்கும் வகையில், மேக்ரோ பொருளாதார நிலையான, வலுவான அடித்தளத்தை நிறுவுவதை பட்ஜெட் நோக்கமாகக் கொண்டுள்ளது.

பசுமையான மற்றும் எதிர்காலம் சார்ந்த தொழில்நுட்பத்தால் இயக்கப்படும் முறைகள் மூலம் நிலையான வளர்ச்சியை மேம்படுத்துவதற்கான வரைபடத்தை இது வழங்குகிறது என்றார். வரவிருக்கும் 25 ஆண்டுகளுக்கான முதன்மைக் கொள்கைகளை 7 இணை சார்ந்த துறைகளாகப் பிரிப்பதும், சப்தரிஷிகள் அல்லது 7 முனிவர்கள் என அழைக்கப்படும் என்றெல்லாம் வானுக்கும் பூமிக்கும் அளந்துவிட்டார். ஆனால்



ஏழைகள் மீது விதிக்கப்படும் மறைமுக வரி தொடர்ந்து அதிகரித்து அவர்களுக்கு பெரும் சுமையையும் பெரும் நிறுவனங்களுக்கான வரியை தொடர்ந்து குறைத்ததோடு இல்லாமல், அவர்கள் வாங்கிய இதுவரை கட்டாத வங்கிக் கடன்களில் 25 லட்சம் கோடியை தள்ளுபடி செய்ததும், இந்திய பொருளாதாரம் மீண்டும் காலனிய முறைக்கு செல்வதை உறுதிப்படுத்துகிறது.

### வேடிக்கை என்னவெனில்..

இந்த அமிர்த காலத்திற்கு இந்தியாவை அழைத்து போவதற்கான கொள்கைகளையும் திட்டங்களையும் செயல்படுத்துவதற்கும், ஆய்வு செய்வதற்கும் பன்னாட்டு கார்ப்பொரேட்டு கம்பெனியான போஸ்டன் கன்சல்டிங் குரூப் (BCG) உதவியுடன்தான் இதற்கான திட்ட வரைபடத்தை உருவாக்கி இருக்கிறார்கள் என்றால் இதைவிட வெட்கக்கேடு வேறு என்ன?

காலனியாதிக்கத்தின் நிழல் கூட படியக் கூடாதாம் ஆனால் அதன் நேரடி எஜமானர்களிடமிருந்து திட்ட அறிக்கை பெறுவார்களாம்! இதுவே பிரதமரின் அமிர்தகால முழக்கத்திற்கு நேர் எதிரானதாக அமைந்து விட்டது. அந்நிய தர்பார் ஆத்ம நிர்பாரக மாறிவிட்டது.

ஏற்கனவே நமது நாட்டில் கார்ப்பரேட்டுகளுக்கு ஆதரவான நிர்வாகத் துறை அத்தோடு நமது நிர்வாக துறையை உளவு பார்த்து எண்ணை, எரிவாயு, நிலக்கரி, எரிசக்தி துறை, பாதுகாப்புத் துறை ஏன் நிதிநிலை அறிக்கை தாள்கள் கூட கசியும் அளவிற்கு கார்ப்பரேட் நிறுவனங்கள் நமது அதிகார வர்க்கத்தை ஊடுருவி உளவு பார்க்கும் வேலைகளிலும் ஈடுபடுவது நிரூபணமாகிவிட்டது. நிலைமை இப்படி இருக்க இதனை முழுக்க முழுக்க அந்நிய நிறுவனங்களிடமே விடுவது எதை காட்டுகிறது?

கடந்த 9 ஆண்டு கால நிதி ஆயோக்கின் செயல்பாடுகளில் பல விமர்சனங்கள் உண்டு. பெரும் நிறுவனங்களின் பாய்ச்சல் வேக முன்னேற்றத்திற்கு இதுவே காரணம் என்றும் சொல்லப்படுகிறது.

இதன் துணைத் தலைவர்களாக அதிக ஊதியத்தில் மூன்று பெரும் பொருளாதார நிபுணர்களும், இதன் தலைவராக இரண்டு பெரும் அதிகாரிகளும் இருந்து செயல்பட்டு வருகின்றனர். ஆனாலும் நாட்டின் சுதந்திரத்தை கொண்டாடும் அமிர்தக்காலம் திட்டத்தை அந்நிய நிறுவனத்திடம் ஒப்படைத்தது என்ன நியாயம்?

கடந்த காலங்களில் திட்டக்குழு கூட பல நேரங்களில் இது போன்ற நிறுவனங்களிடம் ஆலோசனைகள் பெற்றது உண்டு. ஆனால் ஒரே அடியாக அனைத்திற்காகவும் அதனிடம் தெண்டனிட்டதில்லை.

உலகமய, தனியார் மய, பொருளாதார முறையை ஏற்றுக்கொண்டு வளர்ச்சி குறித்து வாதிட்டு வந்த ஆந்திரத்தின் அப்போதைய முதல்வராக இருந்த சந்திரபாபு நாயுடு கூட 'ஆந்திர பிரதேஷ் 2020!' என்ற திட்டத்திற்காக மேக் கன்சி அண்ட் கோ என்ற நிறுவனத்திடம் அதற்கான வளர்ச்சித் திட்டங்களுக்கான வரைவை கோரிப்பெற்றது. ஆனால் இந்த திட்டத்தை அமுலாக்கிய போது தெலுங்கானா பகுதி தொடர்ந்து புறக்கணிக்கப்படுவதாக ஒரு பெரும் குற்றச்சாட்டு எழுந்து, இறுதியில் ஆந்திரா, தெலுங்கானா என்ற இரண்டு மாநிலங்களாக பிரிந்த வரலாற்றை நாம் மறந்துவிடலாகாது. எனவே பல ஏற்றத்தாழ்வுகளை கொண்ட இந்தியாவில் இதுபோல அந்நிய நிறுவனங்களை வைத்து பொருளாதார வளர்ச்சிக்கான திட்டம் தீட்டுவது இந்த அரசின் காலனி ஆதிக்க மன போக்கைத் தவிர வேறு என்ன?

வெறும் பேச்சில்தான் மோடியும் பாஜகவினரும் தொடர்ந்து தேசபக்தியை பற்றி பரப்புரை செய்கின்றனர். ஆனால் மிக முக்கிய திட்டங்களில் அது வல்லபாய் பட்டேலுக்கு எழுப்பப்பட்ட பெரும் சிலையானாலும் சரி, வேறு பல புதிய திட்டங்கள் ஆனாலும் சரி அவற்றிற்கெல்லாம் அந்நிய உதவியை தான் இன்றும் கோரி பெற்று வருகிறது மோடி அரசு.

தேசத்திற்கு உதவிய பொதுத்துறை நிறுவனங்களை எல்லாம் அடிமாட்டு விலைக்கு அன்னியருக்கு பெரும் நிறுவனங்களுக்கும் தாரை வார்த்தாயிற்று. 140 கோடிக்கு மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட நாட்டில் ஒரு சொந்த விமான நிறுவனம் கூட இல்லை. துறைமுகங்கள், ராணுவ உடை தயாரிப்பில் இருந்து அதன் படை கருவிகளை தயாரிக்கும் முறை வரை அனைத்திலும் தனியார் மயம் தலை விரித்து ஆடுகிறது என்றால் காலப்போக்கில் அவை அனைத்தும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கார்ப்பரேட்டுகளின் கைகளுக்கு சென்று விடும். நாட்டின் உயர் ராணுவ ரகசியங்கள் கூட இனிமேல் விற்பனைக்கு என்பதாக அமைந்துவிடும்.

எனவே அனைவருக்குமான நிலையான மற்றும் உள்ளடக்கிய வளர்ச்சி என்பது அவசியமாகும். அனைவருக்கும் கல்வி அனைவருக்கும் தரமான மருத்துவம், சிறந்த வாழ்க்கை வசதி, அனைவருக்கும் உணவு, அனைவருக்கும் வீடு அனைவருக்கும் வேலை, பாலின சமத்துவம், விஞ்ஞான தொழில்நுட்ப முறையில் புதிய விவசாயம், விவசாயத் தொழிலில் அதிக லாபம் போன்ற விடுதலை இயக்க முழக்கங்களை நிறைவேற்றாது, இந்து – இஸ்லாமியர் என்ற பிரித்தாலும் காலனி ஆதிக்க முழக்கத்தை மட்டுமே முன் வைப்பது விடுதலையை போற்றுவது அல்ல, மாறாக அதனை தூற்றுவதாகும்.

எனவே விடுதலை போராளிகளின் அந்த தன்னலமற்ற தியாகத்தை நெஞ்சில் சுமந்து இந்தியாவிற்கான புதிய நூற்றாண்டை படைப்பது மிகவும் அவசியம். இதனை சாதிக்க இன்றைய உலகமய சூழ்ச்சிகள் அனைத்தையும் முறியடிப்பதன் மூலம்தான் இதனை இந்தியா சாதிக்க முடியும். வெறும் தேசபக்தி, தேசபக்தி என்று பல வேசம் கட்டி பசப்பும் பாஜகவாலும், மோடியாலும் இதனை சாதிக்க முடியாது என்பது மட்டும் திண்ணம்.

தொடர்புக்கு: 9444481703

# ஆளுநரின் சர்ச்சைப் பேச்சுகளும் ஆர்.எஸ்.எஸ். அரசியலும்!



வ.மணிமாறன்

**ஆர்.என்.ரவி தமிழ்நாட்டின் ஆளுநராகப் பொறுப்பேற்ற இந்த இரண்டு ஆண்டுகளில் பேசியிருக்கும் சர்சை கருத்துக்கள் ஏராளம். அவை அனைத்தும் அரசியல் சட்டப்பணிகள் தொடர்பானவை அல்ல. அந்தப் பேச்சுகளுக்கும் ஆளுநர் ஆற்ற வேண்டிய பணிகளுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. மாறாக ஆர்.எஸ்.எஸ் அரசியலை, ஆர்.எஸ்.எஸ் புகுத்த நினைக்கும் பாசிச சித்தாந்தங்களையே அவர் பேசி வருகிறார்.**

சென்னை கிண்டியில் உள்ள ஆளுநர் மாளிகை முன்பு, 25.10.2023 அன்று கருக்கா வினோத் என்ற நபர் பெட்ரோல் குண்டு (பெட்ரோல் நிரப்பிய பாட்டில்) வீசினார். இது ஆளுநர் மாளிகையின் முன்புறத்தில் உள்ள சாலையில் விழுந்து வெடித்தது. ஆளுநர் மாளிகையின் முன்பு பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த காவல்துறையினர் அவரை மடக்கிப் பிடித்தனர். இது குறித்து கிண்டி காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டு, அந்த நபரை நீதித்துறை நடுவர் முன்பு நேர்நிறுத்தி புழல் சிறையில் அடைத்தனர்.

இந்த விவகாரம் பெரும் அரசியல் சர்ச்சையாக உருவெடுத்தது. இது குறித்து அறிக்கை வெளியிட்ட ஆளுநர் மாளிகை, "ஆளுநர் மாளிகை மீது இன்று பிற்பகலில் (25.10.2023) தாக்குதல் நடத்தப்பட்டது. வெடிகுண்டுகளை ஏந்திய விஷமிகள் பிரதான வாயில் வழியாக உள்ளே நுழைய முயன்றனர். எனினும் உஷாராக இருந்த காவலர்கள் தடுத்ததால், இரண்டு




பெட்ரோல் குண்டுகளை ராஜ்பவனுக்குள் வீசி விட்டு தாக்குதல் நடத்தியவர்கள் தப்பினர்" என்று மிகவும் மிகைப்படுத்தி கூறியது.

அடுத்த நாள், மற்றொரு அறிக்கை வெளியிட்ட ஆளுநர் மாளிகை, ஆளுநர் மீது தொடர் தாக்குதல்கள் நடத்தப்படுவதாகவும்; அவற்றின் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படுவதில்லை என்றும் குற்றம்சாட்டியது.

அடுத்து டுவிட்டரில் மீண்டும் பதிவிட்ட ஆளுநர் மாளிகை, "அவசர கதியில் கைது மேற்கொள்ளப்பட்டு, மாஜிஸ்ட்ரேட்டை நள்ளிரவில் எழுப்பி குற்றம்சாட்டப்பட்டவர் சிறையில் அடைக்கப்பட்டுவிட்டதால், பின்னணியில் உள்ளவர்களை அம்பலப்படுத்தக்கூடிய விரிவான விசாரணை தவிர்க்கப்பட்டுள்ளது. நியாயமான விசாரணை தொடங்கும் முன்பே கொல்லப்படுகிறது" என்று சாடியது.

இதனையடுத்து காவல்துறை சார்பில் வெளியிடப்பட்ட விரிவான விளக்க அறிக்கையும் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியும் ஆளுநர் மாளிகை அடுத்தடுத்து வெளியிட்ட அறிக்கைகளில் உள்ள அபத்தங்களையும் பொய்களையும் அம்பலப்படுத்தின.

பெட்ரோல் குண்டு வீசப்பட்டது தொடர்பாக சென்னை காவல் ஆணையர் அலுவலகத்தில், ஆளுநர் மாளிகை சார்பாக ஆளுநரின் துணைச்செயலாளர் டி.செங்கோட்டையன் புகார் மனு ஒன்றை கொடுத்துள்ளார்.

அதில், "கடந்த பல மாதங்களாக ஆளுநர் மீது அநாகரிகமான வார்த்தைகளைப் பயன்படுத்தியும், அவருடைய உயிருக்கு அச்சுறுத்தல் விடுக்கும் வகையிலும் தொடர்ந்து வாய்மொழி தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இந்த வாய்மொழி தாக்குதல்கள் மற்றும் அச்சுறுத்தல்கள் பெரும்பாலும் தி.மு.க. மற்றும் அதன் கூட்டணி கட்சிகளின் தலைவர்கள் மற்றும் தொண்டர்களால் பொதுக் கூட்டங்களிலும், அவர்களுடைய சமூக ஊடகங்களிலும் முன்வைக்கப்படுகின்றன. இந்த அச்சுறுத்தல்கள் ஆளுநரின் அரசியலமைப்பு சட்டப் பணிகளை செய்யவிடாமல் அவரை கட்டுப்படுத்தும் நோக்கத்தில் இருக்கின்றன" என்று தமிழ்நாட்டில் செயல்பட்டு வரும் அரசியல் கட்சிகள், அரசியல் விமர்சகர்கள், செயல்பாட்டாளர்கள் மீதும் தமிழ்நாடு அரசு மீதும் ஆளுநர் மாளிகை குற்றம் சாட்டியிருக்கிறது.

ஆர்.என்.ரவி தமிழ்நாட்டின் ஆளுநராகப் பொறுப்பேற்ற இந்த இரண்டு ஆண்டுகளில் பேசியிருக்கும் சர்சை கருத்துக்கள்

தொடர்ச்சி 10ஆம் பக்கம்

## ஆளுநர் மாளிகையின் புளுகு மூட்டைகள்

## ஆளுநர் மாளிகை இருக்கும் சாலையில் நடந்தது என்ன?









**ஆளுநர் மாளிகை** : ராஜ்பவன் பிரதான நுழைவாயில் எண்1 வழியாக பெட்ரோல் குண்டுகளை ஏந்திய மர்ம நபர்கள் சிலர் உள்ளே நுழைய முயன்றனர்.

**காவல்துறை விளக்கம்**: குண்டுகளை ஏந்திய மர்ம நபர்கள் சிலர் அப்படி யாரும் வரவில்லை. கருக்கா வினோத் என்ற ஒரேயொரு நபர் மட்டும்தான் வந்தார். அவரும் சாலையின் அந்தப் பக்கம் இருந்து வாசலை நோக் கித்தான் பெட்ரோல் குண்டுகளை வீசினாரே தவிர, உள்ளே நுழைய முயற்சிக்கவில்லை. இதற்கான வீடியோ காட்சி வெளியிடப்பட்டுள்ளது.

**ஆளுநர் மாளிகை**: பாதுகாப்புப் பணியாளர்கள் தாக்குதலைக் கட்டுப்படுத்த முயன்றபோது, மற்றொரு பெட்ரோல் குண்டு வீசப்பட்டது. இதனால் பிரதான நுழைவாயிலுக்கு பலத்த சேதம் ஏற்படுத்தப்பட்டது.

**காவல்துறை விளக்கம்**: பிரதான நுழைவாயிலுக்கு சிறு சேதமும் ஏற்படவில்லை. பிரதான வாயிலில் இருந்து 30 மீட்டர் தொலைவில்தான் பெட்ரோல் நிரப்பிய பாட்டில் வீசப்பட்டது. அது தடுப்பரண்களைத் தாண்டி சாலையில்தான் விழுந்தது. இதனால் நுழைவாயிலில் எந்த சிறு சேதமும் கிடையாது.

**ஆளுநர் மாளிகை**: பெட்ரோல் குண்டு வீசிய நபரை தப்பிக்க விட்டு விட்டார்கள். அவர் மீது வழக்குப் பதியவே இல்லை.

**காவல்துறை விளக்கம்**: சம்பவ இடத்திலேயே கருக்கா வினோத் கைது செய்யப் பட்டார். அவர் மீது கிண்டி காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டு, புலன் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. உடனடியாக அவர் பெருநகர குற்றவியல் நடுவர் முன்பு நேர்நிறுத்தப்பட்டு, 09.11.2023 வரை சிறையில் வைக்கப்பட்டார்.

**ஆளுநர் மாளிகை**: ஏப்ரல் 19, 2022 அன்று மயிலாடுதுறை சென்ற போது ஆளுநரின் வாகனம் தாக்கப்பட்டது. இது சம்பந்தமாக காவல்துறையில் புகார் தெரிவிக்கப்பட்டும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை.

**காவல்துறை விளக்கம்**: ஆளுநரின் வாகனம் மற்றும் கான்வாய் அப்பகுதியை கடந்து சென்ற பின்னர் அங்கு கூடியிருந்த வர்களில் சிலர் கருப்புக்கொடிகளை சாலையில் வீசினர். அக்கொடிகள் ஆளுநரின் வாகனம் மற்றும் கான்வாய் முழுமையாக சென்ற பின்னர் வந்த வாகனங்கள் மீது விழுந்தன. இச்சம்பவம் தொடர்பாக மயிலாடுதுறை காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டு 73 பேர் கைது செய்யப்பட்டனர். ஆளுநரின் கான்வாய் மீது கற்கள் மற்றும் கட்டைகள் வீசப்பட்டன என்பது முற்றிலும் உண்மைக்கு புறம்பானதாகும்.

**ஆளுநர் மாளிகை**: ஆளுநர் மாளிகை நுழைவாயிலில் உள்ள நபர்கள் அவரை மடக்கி பிடித்ததாக ஆளுநர் மாளிகை புகாரில் உள்ளது.

**காவல்துறை விளக்கம்**: அப்படி எதுவும் நடைபெறவில்லை. காவல்துறை சார்பில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த ஐந்து காவலர்கள் மட்டுமே தடுத்து, அந்த நபரிடம் இருந்து பெட்ரோல் பாட்டிலை பிடுங்கினர். உடனடியாக சுற்றுக்காவல் போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு, அந்த நபரை காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்று விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

**ஆளுநர் மாளிகை**: ஆளுநருக்கு வரும் கடுமையான அச்சுறுத்தலை காவல்துறை அலட்சியப்படுத்தியது.


**காவல்துறை விளக்கம்**: ஆளுநர் மாளிகைக்கு இரண்டடுக்கு பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. உள்பகுதியில் மத்திய பாதுகாப்புப் படையினரும், வெளிப்பகுதியில் தமிழக காவல் துறையினரும் பாதுகாப்புப் பணியில் உள்ளனர். ஆளுநர் வெளியில் செல்லும் இடங்களுக்கும் உரிய பாதுகாப்பு அளிக்கப்படுகிறது. இவ்வளவு பாதுகாப்பு வேறு எங்கும் இல்லை.

ஆளுநர் மாளிகையின் புளுகுகள் அனைத்தும் பெட்ரோல் பாட்டில்களை விடப் பெரிய புளுகு பாட்டில்களாக இருக்கின்றன.



# இஸ்ரேலின் சியோனிசத்தை ஆதரிக்கும் ஆர்எஸ்எஸ்-சின் இந்துத்துவம்

அருண் நெடுஞ்செழியன்







**ஐ.நா.வில் போர் நிறுத்தம் கோரும் தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பில், ஆதரவாக வாக்களிக்காமல் இந்தியா வெளிநடப்பு செய்கிறது. அதாவது அரசாங்கம் என்ற வகையில் பாலஸ்தீன ஆதரவு நிலைப்பாட்டையும் ஆர்.எஸ். எஸ் – பாஜக சித்தாந்தத்தின் அடிப்படையில் இஸ்ரேலிய ஆதரவு நிலைப்பாட்டையும் எடுக்கிறது. இஸ்ரேல் பாலஸ்தீனம் தொடர்பான இந்தியாவின் இந்த முரண்பட்ட நிலைப்பாடு அவமானத்திற்கும் கண்டனத்திற்கும் உரியது.**

யோம் கிப்பூர், அக்டோபர் போரின் ஐம்பதாவது நினைவு நாளான அக்டோபர் 7 ஆம் தேதியன்று இஸ்ரேல் மீது வரலாறு காணாத வகையில் ஹமாஸ் அமைப்பு தாக்குதல் நடத்தியது. இதில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டனர், இருநூறுக்கும் மேற்பட்டோர் பிணைக்கைதிகளாக பிடிக்கப்பட்டனர். ஹமாஸ் அமைப்பின் இந்தத் தாக்குதலுக்கு பதிலடி கொடுப்பதாக கூறிக்கொண்டு, காசாவில் கொத்துக் கொத்தாக ஒரு பெரும் இன அழிப்பையே இஸ்ரேல் அரசு நடத்திக் கொண்டிருக்கிறது. இந்தக் கொடூரமான ஒருதலைபட்ச போரை மனிதநேயத்தை விரும்புகிற யாரும் ஏற்றுக் கொள்ள இயலாத, மாபெரும் மானுடத் துயர் ஆகும்.

தீவிரவாதத்திற்கு எதிரான போர் என்ற பெயரில் கடந்து மூன்று வாரங்களாக இரவு பகல் பாராமல் பாலஸ்தீனம் மீது மிகப்பெரிய இன அழிப்புப் போரை இஸ்ரேல் நடத்தி வருகிறது. அமெரிக்கா மற்றும் மேற்கு ஐரோப்பிய நாடுகளின் ஆதரவுடன் காசாவில் நடத்தப்படும் இந்தக் கொடூரமான ஆக்கிரமிப்பு போரானது நாகரிக சமூகத்திற்கு பொருத்தமற்ற வகையில், ஈவிரக்கமின்றி நடத்தப்படுவதை உலகம் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறது. இரவு பகலாக காசாவின் மீது வீசப்படும் குண்டு மழையில் இருந்து தப்பிக்க பாதுகாப்பான ஒரு இடம் கூட அங்கு இல்லை. அச்சத்துடன் வீடுகளில் பதுங்கியுள்ள சாமானிய மக்கள் மீது இஸ்ரேல் நடத்தி வரும் இந்த காட்டுமிராண்டித்தனமான தாக்குதல்களுக்கு பெண்களும் குழந்தைகளுமே முதன்மை இலக்காக உள்ளனர். பச்சிளம் குழந்தைகளின் பால் வடியும் முகத்தில் வழிந்தோடும் ரத்தத்தின் சூடு தனிவதற்குள் மருத்துவமனைகளில் குண்டு வீசப்பட்டு பிஞ்சு உயிர்கள் கொத்து கொத்தாக கொல்லப்படுகின்றன. இவற்றை சமூக ஊடகங்களிலும் தொலைக்காட்சிகளிலும் பார்க்கும்போது பதறாத நெஞ்சம்தான் இருக்க முடியுமா?

காசா ஒரு திறந்தவெளி சிறைக்கூடமாக மாற்றப்பட்டுள்ளது. (கடந்த இரு தசாப்த காலமாகவே 'காசா'' திறந்தவெளி சிறையாகத்தான் இருந்து வருகிறது) ஒவ்வொரு நாளும் காசா மீதான இஸ்ரேலின் முற்றுகை இறுகி வருகிறது. சொந்த நாட்டிலே பாலஸ்தீனர்கள் அகதிகள் முகாமில் தஞ்சம் அடைந்து வருகின்றனர். தற்போது காசாவில் வசிக்கிற சுமார் 23 லட்சம் மக்களுக்கு குடிநீர் மற்றும் மருத்துவ உதவிகள் கிடைக்காமல் இஸ்ரேல் தடுத்து நிறுத்தியுள்ளது. மேற்குக்கரை மற்றும் ஜெருசலேமில் குடியேறிய இஸ்ரேலியர்கள், ஹமாஸின் தாக்குதலை காரணம் காட்டி, மண்ணின் மைந்தர்களான பாலஸ்தீனர்களை வெளியேற்றி இரு அரசு கொள்கைத் தீர்வை ஒன்றுமில்லாமல் ஆக்க முயற்சிக்கிறார்கள்.

### சியோனிசத்தை ஆதரிக்கும் இந்துத்துவம்

இஸ்ரேல்பாலஸ்தீன விவகாரத்தை சமாதானப் பேச்சுவார்த்தை மூலமாக தீர்ப்பதையும், இரு நாட்டு கொள்கைத் தீர்வையும் இந்தியா நீண்ட காலமாக ஆதரித்து வந்தது. இந்த நிலைப்பாட்டின் அடிப்படையிலேயே இந்திய தேசிய காங்கிரசும் காசா மீதான இஸ்ரேலின் மனிதநேயமற்ற போரை கண்டித்துத்துள்ளது. மாறாக இந்தியாவை ஆட்சிசெய்கிற ஆர்.எஸ். எஸ் – பாஜகவோ இஸ்ரேலின் ஆக்கிரமிப்பு போரை எந்தக் கண்டனமும் இல்லாமல் ஆதரிக்கிறது. ஹமாஸ் மீதான இஸ்ரேலின் தாக்குதலை பாலஸ்தீனர்கள் மீதான தாக்குதலாக இஸ்ரேல் மாற்றிவருவதை சீனா, ரஷ்யா, ஈரான் உள்ளிட்ட நாடுகள் பகிரங்கமாக கண்டித்து வருகையில், இஸ்ரேலின் வலது சியோனிசத்தை தூக்கிப் பிடிக்கிற இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகுவின் இயற்கை கூட்டாளியாக இந்தியாவின் ஆர்.எஸ். எஸ் பாஜக தன்னை காட்டிக் கொள்கிறது.

ஆர்.எஸ்.எஸ் பாஜகவின் இந்த கொள்கை நிலைப்பாடு தற்போது இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை நிலைப்பாடாக மாற்றப்பட்டுவிட்டது.

வரலாற்று ரீதியாக இஸ்ரேல்பாலஸ்தீனம் தொடர்பான இந்தியாவின் நிலைப்பாடானது, இந்துத்துவ ஆட்சியாளர்களால் தலைகீழாக மாற்றப்பட்டுவிட்டது. இந்த நிலைப்பாடு மாற்றத்தை வெளிப்படுத்தும் விதமாக அண்மையில் காசாவின் மீதான இஸ்ரேலின் போரை நிறுத்தக் கோரி ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையில் ஜோர்டான் அரசு கொண்டு வந்த தீர்மானத்தை இந்தியா புறக்கணித்தது. பாலஸ்தீன மற்றும் இஸ்ரேலிய மக்களுக்கு எதிரான வன்முறைகளை இந்தத் தீர்மானம் கண்டித்தது. பொதுமக்களின் பாதுகாப்பு கருதியும் மனிதாபிமான நடவடிக்கைகள் தொடர்வதற்காகவும் உடனடியாகப் போரை நிறுத்த வேண்டும் என்று தீர்மானம் கோரியது. இந்த தீர்மானத்திற்கு ஆதரவாக ரஷ்யா, சீனா, பாகிஸ்தான், கத்தார், எகிப்து, இந்தோனேசியா, பஹ்ரைன், ஐக்கிய அரபு எமிரேட்ஸ், வங்கதேசம், சௌதி அரேபியா, குவைத், மலேசியா, மாலத்தீவு உட்பட 120 நாடுகள் வாக்களித்தன. தீர்மானத்திற்கு எதிராக இஸ்ரேல், அமெரிக்கா, ஆஸ்திரியா, ஹங்கேரி உட்பட 14 நாடுகள் வாக்களித்தன. அதிர்ச்சிகரமான வகையில் இந்த தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பில் பங்கேற்காமல் இந்தியா வெளிநடப்பு செய்தது. இந்தியாவுடன் ஜப்பான் உள்ளிட்ட 45 நாடுகள் வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை. பாஜக அரசின் இந்த மோசமான நிலைப்பாட்டை காங்கிரஸ் மற்றும் கம்யூனிஸ்ட் கட்சிகள் கண்டனம் செய்துள்ளன.

### மோடி அரசின் இரட்டை நிலைப்பாடு:

பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழன் என நம்மூரில் ஒரு பழமொழி உண்டு. அது போல பிரதமர் மோடி, ஒருபக்கம் காசா மீதான இஸ்ரேலின் தாக்குதலால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு நிவாரண உதவி வழங்குவதாகவும் மருத்துவமனைகளில் கொல்லப்பட்ட மக்களுக்கு வருத்தம் தெரிவிப்பதாகவும் பாலஸ்தீன அதிபர் முகமது அப்பாசை தொலைபேசியில் அழைத்து ஆறுதல் கூறுகிறார். மறுபுறம் போர் நிறுத்தம் கோருகிற ஐநாவின் பொதுவாக்கெடுப்பு தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களிக்காமல் இந்தியா வெளிநடப்பு செய்கிறது. அதாவது அரசாங்கம் என்ற வகையில் பாலஸ்தீன ஆதரவு நிலைப்பாட்டையும் ஆர்.எஸ்.எஸ் – பாஜக சித்தாந்தத்தின் அடிப்படையில் இஸ்ரேலிய ஆதரவு நிலைப்பாட்டையும் எடுக்கிறது. இஸ்ரேல் பாலஸ்தீனம் மீதான இந்தியாவின் இந்த முரண்பட்ட நிலைப்பாடு அவமானத்திற்கும் கடும் கண்டனத்திற்கும் உரியது.

மோடி அரசானது 'அரசாங்கம்' என்ற வகையில், நாட்டின் பாரம்பரிய வெளியுறவுக் கொள்கையை, சியோனிச பாசிச இன அழிப்புக்குத் துணை போகிற வகையிலும் இந்துத்துவ பாசிச நலனுக்கு உகந்ததாகவும் மாற்றுவதையே இது வெளிப்படுத்துகிறது.

பாலஸ்தீனம் மீதான இந்தியாவின் கொள்கைக்கும் நிலைப்பாட்டிற்கும் நீண்ட பாரம்பரியம் உண்டு. பாலஸ்தீனம் மீதான இஸ்ரேலின் ஆக்கிரமிப்பை எதிர்க்கிற பாலஸ்தீன விடுதலை

தொடர்ச்சி 9ஆம் பக்கம்


REUTERS

### முக்கிய அறிவிப்பு

ஜனசக்திக்கு எழுதும் கட்டுரைகள் 500 வார்த்தைகளுக்கு மிகாமல் டைப் செய்து வேர்டு பைலில் இமெயிலில் அனுப்ப வேண்டும் வாரம் தோறும் திங்கள்கிழமைக்குள் கிடைக்க வேண்டும்.

இயக்கச் செய்திகளை டைப் செய்து, செவ்வாய்க்கிழமை பகல் 1 மணிக்குள் ஜனசக்திக்கு கிடைக்கும் வகையில் janasakthieditor@gmail.com இமெயிலுக்கு மட்டும் அனுப்ப வேண்டும். யாருடைய வாட்ஸ்அப் எண்ணுக்கும் அனுப்பக் கூடாது.

பிரச்சார நோட்டீஸ், மனுக்கள் போன்றவற்றை அப்படியே அனுப்பக் கூடாது. அவற்றை செய்தி வடிவில் சுருக்கி அனுப்ப வேண்டும்.

ஜனசக்தி உள்ளடக்கம் குறித்த தொடர்புக்கு:
**டி.எம்.மூர்த்தி**, ஆசிரியர்: 9444360869
**த.லெனின்**: 9444481703

ஜனசக்தி சமூக ஊடகங்கள் தொடர்புக்கு:
**வ.மணிமாறன்**: 9500001224

இயக்கச் செய்திகள் குறித்த தொடர்புக்கு:
**பிரதாப் சந்திரன்**: 9382679798

ஜனசக்தி விநியோகம், சந்தா குறித்த தொடர்புக்கு:
**கே.கணேசன்**: 9444331138

ஜனசக்தி பணம் செலுத்துதல் சம்பந்தமான தொடர்புக்கு:
**இளசை கணேசன்**: 8220468816

**ஆசிரியர் குழு, ஜனசக்தி**

வேண்டுமென்றே கிடப்பில் போடப்பட்ட
20க்கும் மேற்பட்ட மசோதாக்கள்

## ஆர்.என்.ரவிக்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் வழக்கு

### தமிழ்நாடு அரசு தொடர்ந்தது




**தமிழ்நாடு சட்டமன்றத்தால் நிறை வேற்றப்பட்ட 20க்கும் மேற்பட்ட மசோ தாக்களுக்கு ஒப்புதல் அளிக்காமல் ஆளுநர் ஆர்.என். ரவி வேண்டு மென்றே காலதாமதம் செய்துவரும் நிலையில் தமிழ்நாடு அரசு தற்போது உச்சநீதிமன்றத்தில் ரிட் மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளது.**



அதில், "தமிழ்நாடு சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட முக்கியமான மசோதாக்களை தாமதப்படுத்துவது, பரிசீலிக்காமல், ஒப்புதல் அளிக்காமல் இருப்பது போன்ற போன்ற நட வடிக்கைகளில் ஆளுநர் ஈடுபடுகிறார். மாநில ஆளுநர், சட்டப்பூர்வமாக தேர்ந் தெடுக்கப்பட்ட அரசாங்கத்திற்கு ஒரு அரசியல் போட்டியாளராக தன்னை நிலைநிறுத்திக் கொண்டுள்ளார். சட்ட மன்றம் நிறைவேற்றிய மசோதாக்களை பரிசீலிப்பதில் அநியாயமாகவும் மிகையாகவும் தாமதப்படுத்துவதன் மூலம் சட்டமன்ற கடமைகளோடு விளையாடிக் கொண்டிருக்கிறார்.

அரசியல் உள்நோக்கத்துடன் நடந்து கொள்கிறார். அரசியலமைப்பின் அடிப்படையில் செயல்படாமல், குடி மக்களின் ஆணையை அவர் தூக்கி எறிகிறார்" என்று குற்றம்சாட்டியுள்ளது. மேலும், "அரசியலமைப்புச் சட்டம் 123, 213, 311(2) விதிகள் (உ) 317, 352(1), 356 மற்றும் 360 குறிப்பிடும் ஆளுநர் அல்லது குடியரசுத் தலைவரின் திருப்தி என்பது, அவர்களின் தனிப்பட்ட விருப்பத்தின் அடிப்படையில் செயல் படக்கூடியது அல்ல.

மாறாக, குடியரசுத் தலைவர் அல்லது ஆளுநர் பொதுவாக அவர்களது அனைத்து அதிகாரங்களையும் செயல்பாடுகளையும் யாருடைய உதவி மற்றும் ஆலோசனையின் பேரில் செயல்படுத்துகிறார்களோ, அந்த அமைச்சர்கள் குழுவின் திருப்தியையே குறிப்பதாகும்.

அதன்படி அமைச்சரவைக் குழுவின் உதவி மற்றும் ஆலோசனையின் அடிப்படையில் மட்டுமே அவர்களின் செயல் இருக்க வேண்டும். அமைச்சர் குழுவின் உதவி மற்றும் ஆலோசனையின் பேரில் செயல்பட மறுப்பது அரசியலமைப் பின் அடிப்படை கட்டமைப்பையும் மீறுவதாகும்" என்று குறிப்பிட்டுள்ள தமிழ்நாடு அரசு, "ஆளுநர் மாநில நிர் வாகத்தின் தலைவர் பதவியை வகித்தாலும், அவர் ஒரு பெயரளவு தலைவரே. நடைமுறையில் ஒவ்வொரு மாநிலத்திலும் உள்ள அமைச்சர்கள் குழுதான் நிர்வாக அரசாங்கத்தை நடத்துகிறது. அவ்வா றிருக்கையில் ஆளுநரின் நடவடிக்கை கள் சட்டமன்றத்தின் உரிமைகளை அப கரிப்பதாக உள்ளது" என்று தெரி வித்துள்ளது.

"அரசியலமைப்பின் 200ஆவது பிரிவு, ஆளுநர்கள் ஒப்புதல் வழங்கு வதற்கும் அல்லது நிறுத்துவதற்கும் அதிகாரம் அளிப்பதுடன், அவ்வாறு ஒப்புதல் அளிப்பதற்கும், நிறுத்து வதற்கும் காலக்கெடு எதையும் குறிப் பாக நிர்ணயிக்கவில்லை. அதேநேரம் கூடிய விரைவில் ("as soon as possible") முடிவெடுக்க வேண்டும் என் பதைக் குறிப்பிட்டுள்ளது.

ஆகவே, தமிழ்நாடு ஆளுநரின் செயலற்ற தன்மை, புறக்கணிப்பு, தாமதம் மற்றும் ஒப்புதல் அளிக்கத் தவறியது ஆகிய தன்னிச்சையான செயல்கள் சட்டத்துக்குப் புறம்பானது என்று அறிவிப்பதுடன் ஆளுநர் ஆர்.என். ரவி, நிலுவையில் வைத்துள்ள மசோதாக்கள் மற்றும் அரசாங்க உத்தரவுகளை பரிசீலிக்க உச்சநீதிமன்றம் கால வரம்பு நிர்ண யித்து உத்தரவிட வேண்டும்" என்றும் வலியுறுத்தியுள்ளது. இந்த மனு வெள்ளிக்கிழமையன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் படும் என்று தெரிகிறது.

# ஆன்மீகப் புரட்சிய



இளசை கணேசன்

**ஆதிபராசக்தியின் அருள் வடிவானவர் என்று கூறப்படுபவர் பங்காரு அடிகளார். இவர் தனது 82 வது வயதில் , மேல்மருவத்தூரில் கடந்த மாதம் 19 ஆம் தேதி மாரடைப்பால் சிகிச்சை பலனின்றி அகால மரணம் அடைந்தார்.**

இந்திய பிரதமர் மோடி முதல், பல்வேறு அரசியல் கட்சிகள் மற்றும் அரசு சார்பில் இறப்புக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டது. இது குறித்து பெரிய அளவில் எதிர்ப்புகள் எழவில்லை..

ஆனால் பங்காரு அடிகளாரின் உடல் அரசு மரியாதையுடன் அடக்கம் செய்யப்பட்டது குறித்து விமர்சனங்கள் எழுந்துள்ளன .ஆதரவு கருத்துக்களும் எதிர்ப்பு கருத்துக்களும் வந்துள்ளன.

- பங்காரு அடிகளார் " ஆன்மீகத்தில் புரட்சி செய்து உள்ளார்."
- சாதி வேறுபாடு இன்றி பெண்களை கோவில் கருவறையில் பூஜை செய்ய அனுமதித்தார்.
- பெண்களின் மாதவிலக்கு நாட்களிலும் கூட தீட்டு என்று ஒதுக்காமல் பெண்கள் கோவில் கருவறையில் பூஜை செய்யும் அனுமதி வழங்கினார்.

இது ஆன்மீகப் புரட்சி அல்லவா?

* 2019 ஆம் ஆண்டு பங்காரு அடிகளாருக்கு பத்மஸ்ரீ பட்டம் வழங்கப்பட்டுள்ளது. பத்மஸ்ரீ வழங்கப்பட்டவர்களுக்கு அரசு மரியாதையுடன் அடக்கம் செய்யப்படுவது வழக்கத்தில் உள்ளது என்று பங்காரு அடிகளாருக்கு ஆதரவு கருத்துக்கள் தெரிவிக்கப் படுகின்றன.

மாதவிலக்கு நாட்களிலும் பெண்களுக்கு கருவறையில் பூஜை செய்யும் உரிமை வழங்கியது எந்த நோக்கத்தில்? என்பதில் விமர்சனம் இருக்கிறது.

இருப்பினும் இது முக்கியமான, முன்னேற்றகரமான, துணிச்சலான நடவடிக்கைதான் ! என்பதை யாராலும் மறுக்க முடியாது.

ஆன்மீகப் புரட்சி என்று பேசுபவர்களுக்கு ஆன்மீகம் என்றால் என்ன? என்பது பற்றி தெரியுமா?

ஆன்மீகம் குறித்து தெரியாமல் ஆன்மீகப் புரட்சி" என்ற அளவுக்கு உயர்த்திக் கூறக்கூடாது. ஆன்மீகத்தையும் , புரட்சி என்பதையும் மலிவாக மதிப்பிட்டு விடக்கூடாது.

ஆன்மா+ இகம் = ஆன்மீகம்.

'ஆன்மா' என்பது :மனம்' சம்பந்தமான ஒரு வித நம்பிக்கை என்பதாகும். 'இகம்' என்பது "இம்மை' அதாவது இவ்வுலக வாழ்வு என்பதை குறிக்கும்.

அதாவது "ஆன்மா என்பது அறிய முடியாத ஏதோ ஒரு அப்பாற்பட்ட சக்தி குறித்து மனதில் ஏற்படும் ஒரு வித நம்பிக்கையாகும்".

ஆன்மா, ஆத்மா இரண்டும் ஒன்றல்ல. இதை குழப்பிக் கொள்ளக் கூடாது. ஆன்மா என்றால் மனம். ஆத்மா என்றால் உயிர் என்பதாகும்.

மனம் என்பது எது? உடலின் பகுதியா? அல்லது ஏதாவது உடல் உறுப்பின் விளைவா? என்று ஆன்மீகம் பேசுவோர் யாரும் விளக்கவில்லை. பொதுவாக 'சிந்தனை' என்பதைத்தான் 'மனம்' என்று பொருள் கொள்ளப்படுகிறது.

அறிவியல் வளராத சூழலில் ஆதி மனிதன் இயற்கை சக்திகளை கண்டு பயந்தான். எனவே இயற்கை சக்திகளை வழிபடத் தொடங்கினான்.

பொருள்களின் படைப்புக்கும் செயல்பாட்டுக்கும் ஆன்மா என்கிற அபூர்வ சக்தி தான் காரணம் என்று மனதில் நம்பினான்

ஆன்மாவைக் கொண்டு பொருளின் படைப்பை செயல்பாட்டை விளக்குவது. இயற்கையை வழிபடுவதன் மூலம் ஆன்ம சக்தியை மனிதனுக்கு பயன்படுத்த முயற்சிப்பது என்பதே ஆன்மீகத்தின் நோக்கம் ஆகும்.

ஆன்மா தான் பொருளை படைத்தது. பொருளை இயக்குகிறது என்று வாதிடுபவர்கள் ஆன்மீகவாதிகள்.

ஆன்மீகம், ஆன்மீகவாதம் என்ற சொற்கள் ஆரம்பத்தில் இப்படித்தான் அர்த்தப்படுத்தப்பட்டது.

ஆரம்பத்தில் உருவான ஆன்மீக நம்பிக்கையின் போது கடவுள் நம்பிக்கை என்று உருவாகவில்லை.

பின்னர் இது வளர்ந்து மதங்களின் மூலம் உருமாற்றப்பட்டு கடவுள்தான் ஆன்மா என்று மாற்றப்பட்டது.

அறிய முடியாத ஏதோ ஒரு அப்பாற்பட்ட சக்தி என்ற ஆன்மீக நம்பிக்கை கடவுளின் சக்தி', கடவுள் நம்பிக்கை என்று கட்டமைக்கப்பட்டது. படைப்பு, இயக்கம் என்பது கடவுளின் சக்தி என்று கற்பிக்கப்பட்டது.

அடுத்த கட்டத்தில் ஆன்மீகத்தோடு கடவுள் என்பதும்,கடவுள் வழிபாடு என்பதும் மதங்கள் மூலம் திணிக்கப்பட்டது.

பெரும்பாலான மதங்கள் கடவுளை அடையாளப் படுத்துகின்றன ஆதர்சமாக கொள்கின்றன. ஆனால் எந்தக் கடவுளும் மதத்தை படைக்கவில்லை. மனிதன்தான் மதத்தை படைத்தான்.

ஆன்மீகம், கடவுள் மற்றும் மதம் போன்றவற்றிற்கு தொடர்பு ஏற்படுத்தியதும் மனிதன்தான்.

அதற்கு அறிவியல் வளராத அந்தக் காலகட்ட சமூக வாழ்க்கை சூழ்நிலைகளும் காரணமாக அமைந்தது.

- மதம் என்பது மறுதலை ( தலைகீழ் கருத்து) என்பதாகும்
- ஆயினும் ஆன்மா, மதம், கடவுள் என்பது ஆத்மார்த்தமான உணர்வு ஆகும்.
- ஆன்மீகவாதம் அறிவியலுக்கு ஏற்புடையது அல்ல என்பது மட்டுமல்ல அறிவியலுக்கு புறம்பான ஒன்றாகும்.
- என்றாலும் சமுதாய வாழ்நிலையில் துன்ப துயரங்களுக்கு மாற்று கிடைக்காத சமயத்தில் ஆன்மா என்பது ஒரு பொது மன அங்கீகாரம் !
- இந்த பொது அங்கீகாரம் துன்ப துயரங்களில் இருந்து விடுவிக்கும் என்ற நம்பிக்கையாக கருதப்பட்டது.



இவைகளே ஆன்மீகம், கடவுள், மதம் ஆகியவற்றை ஒன்றுபட்டதாக கருதுவதற்கும். இவற்றின் மீது ஆத்மார்த்தமான உணர்வு ஏற்படவதற்கும் காரணம்.

மதம் பற்றி மாக்ஸ் கூறும் போது...

**"மதம் ஒடுக்கப்பட்ட மக்களின் ஏக்கப்பெரு மூச்சாகாவும், இதயமற்ற உலகின் இதயமாகவும், ஆன்மா இல்லா ஆன்மாவாகவும் உள்ளது. எனவே மதம் மக்களுக்கு அபின்." என்று குறிப்பிட்டார் மார்க்ஸ்.**

மதம் ஒரு அபின் என்பதை மட்டும் எடுத்துக் கொண்டு மற்றவைகளை ஒதுக்கி விடக்கூடாது.

கம்யூனிஸ்டுகள் தவிர்த்து ஒதுக்கிய ஆன்மீகத்தை மதவாதிகள் கையில் எடுத்துக் கொண்டனர். ஆன்மீகம் என்பதை கடவுள் வழிபாடு என்று சுருக்கி விடக்கூடாது.

நெற்றியில் பட்டை, கழுத்தில் உத்திராட்சக் கொட்டை, மார்பில் சந்தனம் , இடுப்பில் காவி வேட்டி போன்ற அடையாளத்துடன் கடவுளிடம் வழிபடுதல் என்பது ஆன்மீகம் அல்ல. இந்த அடையாளங்கள் பிற்காலத்தில் திணிக்கப்பட்டவை.

தீய எண்ணங்கள், ஏமாற்றுதல், பணம் குவித்தல் போன்றவை மனதில் தோன்றுவதற்கு ஆன்மீகம் இடமளித்ததில்லை. ஆன்மீகத்தில் அரசியலுக்கு இடமில்லை.

ஆன்மீகத்தின் பண்புகளுக்கும் பங்காரு அடிகளுக்கும் ஏதாவது சம்பந்தம் உண்டா?

ஆன்மீகத்திற்கு சம்பந்தமே இல்லாதவர் ஆன்மீகப் புரட்சியை எப்படி நடத்த முடியும்?

- கடவுளின் பெயரால் மூடநம்பிக்கைகளை பொய்களை கட்டவிழ்த்து விடுதல்,
- மக்களின் பக்தியை, கடவுள் நம்பிக்கையை சாதகமாக்கி, அதற்கு நம்பிக்கை துரோகம் செய்தல்,
- பக்தர்களை ஏமாற்றி சொத்துக் குவித்தல்,

# பாளரா பங்காரு அடிகளார்?

வருமான வரியை செலுத்தாமல் ஏமாற்றுதல்,


- சமூக விரோத மற்றும் மர்ம மரணங்கள் உள்ளிட்ட குற்ற நடவடிக்கைகளில் ஈடுபடுதல்,
- கார்ப்பரேட் சாமியாராக உருமாறுதல்,
- அத்து மீறிய, அடாவடி சமூக விரோத செயல்களின் பாதுகாப்பிற்கு அரசியல் ஆதாயம் தேடுதல்.

போன்றவற்றிற்கும் ஆன்மீகத்திற்கும் எந்தவித சம்பந்தமும் கிடையாது !. மேற்கூறப்பட்ட நடவடிக்கைகள் அனைத்தும் பங்காரு அடிகளாரின் பிரிக்க முடியாத பகுதியாக இருந்திருக்கிறது !

இவைகள் தான் பங்காரு அடிகளாரின் ஆன்மீகப் புரட்சியா?

- சமுதாயத்தில் அடக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு மிகவும் கடுமையாக பாதிக்கப்பட்டவர்கள் பெண்கள்.
- தங்களின் துன்ப துயரங்களை கோவிலுக்குச் சென்று கடவுளிடம் கொட்டி தீர்ப்பது ஒன்றே பெண்களுக்கு இருக்கும் ஒரே ஆறுதல்.
- கடவுள் பெயரில் எதைச் சொன்னாலும் எதிர்க் கேள்வி எதுவும் கேட்காமல் பெண்கள் எளிதாக நம்பி விடுவார்கள்.
- பாதிக்கப்பட்ட உரிமை மறுக்கப்பட்ட பெண்களுக்கு வழிபாட்டில் சம உரிமையும் கருவறையில் பூசை செய்யும் உரிமையும் வழங்கப்படுவதின் மூலம் பெண்களை தனக்கு சாதகமாக எளிதாக திருப்ப முடியும்..

பொதுக் கோவில்கள், கருவறையில் பார்ப்பன ஆதிக்கம் உள்ள கோவில்கள் போன்றவற்றை



இவரால் பயன்படுத்த முடியாது. கடும் எதிர்ப்புக்களை சந்திக்க நேரிடும்.

எனவே தனது ஆதிக்கத்தில் தனக்ென்று ஒரு கோவில்! அதில் சக்தி மிகுந்த கடவுள்! ஏமாறும் பக்தர்கள், குறிப்பாக பெண்கள், கிடைத்ததை சுருட்டுதல்... என்றவாறு மிகச் சரியாகவே பங்காரு அடிகள் திட்டம் தீட்டியிருக்கிறார்!

மேல்மருவத்தூரில் அதிசயம் நிகழப்போகிறது!

வேப்ப மரத்தில் பால்வடிகிறது! இது எல்லா வகை நோய்களையும் குணமாக்கும் வல்லமை கொண்டது!

வேப்ப மரத்தின் கீழ் ஆதிபராசக்தி சுயம்புவாக தோன்றுவாள்.

அன்னை ஆதிபராசக்தி என் உடலுக்குள் புகுந்து இருக்கிறாள்!

அம்மா என் மூலம் பக்தர்களுக்கு அருள் வாக்கு சொல்ல பணித்திருக்கிறாள்!

இவ்வாறு பங்காரு அடிகளாரின் துவக்கமே கடவுளின் பெயரால் பொய்யும் புனை சுருட்டுகளையும் கட்டவிழ்த்து விடுவதாக அமைந்துள்ளது.

பங்காரு அடிகளாரின் திட்டம் எதிர்பார்த்ததை விட பல மடங்கு சாதகமான விளைவுகளை தந்திருக்கிறது..

பணம் சேர்த்தல் என்ற நிலையிலிருந்து மாறி எல்லா உத்திகளையும் பயன்படுத்தி பணம் குவித்தல் என்ற நிலைக்கு உயர்ந்துள்ளார்.

பெண்களுக்கு கருவறையில் பூஜை செய்யும் உரிமை வழங்கியதன் மூலம் பங்காரு அடிகள் முன்னோக்கி அடி எடுத்து வைக்கிறார் என்ற தோற்றம் உருவானது.

- ஆதிபராசக்தியின் அருள் பெற்றவர் என்பதால் என்னை 'அம்மா' என்று அழைக்க வேண்டும்.
- தனது கால்களை தாம்பாளத் தட்டில் வைத்து பெண்கள் கழுவி விட வேண்டும். அதற்கு கட்டண தொகைக்கு ஏற்ப வரிசையில் இடம் கிடைக்கும்.

இப்படிப்பட்ட பிற்போக்குத்தனமான, அவமானகரமான செயலை நடைமுறைப்படுத்துவதன் மூலம் பங்காரு அடிகளார் பல மடங்கு பின் நோக்கி அடிகளை எடுத்து வைத்துவிட்டார்.

பங்காரு எடுத்து வைத்த அடிகள் ஒவ்வொன்றும் பக்தர்களை ஏமாற்றி பணம் பறிப்பதாகவும் கார்ப்பரேட் சாமியாராக உயர்வதாகவுமே அமைந்துவிட்டது.

மேல்மருவத்தூர் கிராமம் பெரிதாக உருவெடுத்து பங்காரு அடிகளாரின் குடும்பத்தின் சுயாட்சி பிரதேசமாக மாறிவிட்டது.

மேல்மருவத்தூரில் நிலங்கள் வாங்க, விற்க, கல்வி நிறுவனங்கள் மருத்துவ நிறுவனங்கள் வியாபாரக் கடைகள் நடத்த வெளியில் இருந்து வேறு யாரும் தொடங்கிவிட முடியாது.

மருத்துவக் கல்லூரி தொடங்குவதற்கு மருத்துவக் கவுன்சிலின் உரிய அனுமதி பெறுவதற்கு என்னென்ன தில்லுமுல்லுகள் செய்யப்பட்டது என்பது ஊருக்கே தெரியும்.

அனைத்தும் பங்காரு அடிகளாரின் சொத்துக்களாகவும், அவரது ஆதிக்கத்தின் கீழும் இருக்கின்றன.

ஒரு காலத்தில் பேருந்துகளே நிற்காத அந்த ஊரில் இன்று ரயில்கள் அனைத்தும் நின்று செல்கின்றன.

2019 ஆம் ஆண்டு பங்காரு அடிகளாரின் வீட்டில் அவருக்கு சொந்தமான 50 இடங்களில் வருமான வரித்துறை ரெய்டு நடத்திய போது இவரது படுக்கை அறையில் மட்டும் ஒன்பது கோடிக்கு மேல் ரொக்கமாக கைப்பற்றப்பட்டது.

வருமான வரித்துறையின் ரெய்டுக்கு எதிராக "ஆதிபராசக்தி அம்மா வீட்டில் சோதனையா?" என்று பக்தர்களை உணர்ச்சியூட்டி தூண்டிவிட்டார்.

பங்காரு அடிகளாரின் அறக்கட்டளை சார்பில் நடத்தப்படும் கல்வி மற்றும் மருத்துவ நிறுவனங்களில் ஏழை, எளியவர்களுக்கு எந்தவித சலுகையும் கிடையாது.

கொரோனா தொற்று பாதிப்பு காலத்திலும் கூட இவரது மருத்துவமனைகளில் இலவசமாகவோ சலுகைகள் மூலமோ யாருக்கும் மருத்துவம் பார்க்கப்படவில்லை.

மேல்மருவத்தூர் ஊராட்சி மன்றத்திற்கு பங்காரு அடிகளாரின் மனைவியை எதிர்த்து யாரும் போட்டி யிட முடியாது.

2019 ல் மோடியின் ஒன்றிய அரசு சார்பில் பங்காரு அடிகளாருக்கு பத்மஸ்ரீ பட்டம் வழங்கப்பட்டது. அப்போதே அதற்கு எதிர்ப்புகளும் கிளம்பின.

" முறையாக ,நேர்மையாக சொத்து சேர்க்காமல் ஏமாற்றிகுவிக்கப்பட்ட சொத்துக்குவரி செலுத்தாமலும் வருமானவரித்துறை சோதனையின் போது கையும் களவுமாக பிடிபட்டவருக்கு பத்மஸ்ரீ பட்டம் வழங்குவது ஏற்புடையதல்ல"

என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் அன்றைய தேசிய செயலாளர் டி. ராஜா தனது எதிர்ப்பை பதிவு செய்திருந்தார்.

- கருவறையில் பெண்கள் பூஜை என்ற வழிபாடு அவரது கோயிலில் மட்டுமே சாத்தியமானது. வேறு எங்கும் நடத்த முயலவில்லை. பெண்களை கவர்வதற்கான உத்தியாக அதை செயல்படுத்தினார். எனவே அதை ஆன்மீகம் புரட்சி என்பது ஏற்புடையது அல்ல.
- பங்காரு அடிகளாருக்கு பத்மஸ்ரீ பட்டம் விமர்சனத்திற்கு உரியது.

பங்காரு அடிகளார் இயற்கை மரணம் எய்த வில்லை இருதய நோயால் மாரடைப்பு ஏற்பட்டு சிகிச்சை பலனின்றி இறந்துள்ளார்

பக்தருக்கு குறி சொல்பவரால் தனக்கு மாரடைப்பு வரும் என்பதை கண்டுபிடிக்க முடியவில்லை.

அனைத்து நோயையும் போக்கும் அபூர்வ சக்தி உள்ள பாலை வேப்ப மரத்தில் சுரக்கச் செய்த ஆதிபராசக்தியால், பங்காருக்கு அத்தகைய பாலை சுரக்கச் செய்து நோயிலிருந்து காப்பாற்ற முடியவில்லை.

பங்காருவின் உடலில் ஆதிபரா சக்தியின் அருள் புகுந்துள்ளது என்றால் அந்த அம்மாவுக்கே மாரடைப்பு என்று தானே பொருள்.

ஆதிபராசக்தியின் அருளாலும், மருத்துவ சக்தியாலும் பங்காரு அடிகளாரின் மாரடைப்பை குணப்படுத்த முடியவில்லை.

சுப்பிரமணியன் (பங்காரு அடிகளார்) என்ற மனிதனை மாரடைப்பு என்ற நோய் வென்றுவிட்டது!

இதில் அருளும் இல்லை! மருளும் இல்லை!

தொடர்புக்கு: 8220468816

7 ஆம் பக்கத் தொடர்ச்சி




அமைப்பை அங்கீகரித்த முதல் அரபு அல்லாத நாடு இந்தியா ஆகும். 1947ல் இந்தியா சுதந்திரம் அடைந்த காலகட்டத்தில் பாலஸ்தீனத்தை மத அடிப்படையில் இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீனம் என இரண்டாக பிரிப்பதை எதிர்ப்பதில் அன்றைய பிரதமர் நேருவும் மகாத்மா காந்தியும் ஒத்துப் போயினர். ஏனெனில் இந்தியாவின் சுதந்திர காலகட்டத்தில், பாகிஸ்தான் இந்தியா என மத அடிப்படையில் இரு நாடாக துண்டாடப்பட்ட நிகழ்வானது நேருவையும் காந்தியையும் ஆழமாகப் பாதித்திருந்தது. சொந்த நாட்டு அனுபவத்தில் இஸ்ரேல் பாலஸ்தீனம் என்ற பிரிவினையை எதிர்த்தும் அரபு நாடுகளோடு ஆதரவாகவும் இந்தியா இருந்தது. பின்னர், தனி நாடாக இஸ்ரேல் அறிவிக்கப்பட்ட பிறகு, மிகுந்த தயக்கத்திற்குப் பின் 1950 செப்டம்பர் 17 அன்று இஸ்ரேலை இந்தியா அங்கீகரித்தது. தனி இஸ்ரேல் நாட்டின் உருவாக்கம் மற்றும் பாலஸ்தீனர்கள் மீதான இஸ்ரேலின் ஆக்கிரமிப்புக்கு எதிராக 1960களில் யாசர் அராபத்தின் தலைமையின் கீழ் பாலஸ்தீன விடுதலை அமைப்பு (PLO) உருவானது. பாலஸ்தீன விடுதலை அமைப்போடு இந்தியா நெருங்கிய உறவை வளர்த்துக் கொண்டது. இந்தியாவின் பிரதமராக இந்திரா காந்தி ஆட்சிக்கு வந்த பின்னர், இந்த உறவில் பெரும் முன்னேற்றம் ஏற்பட்டு, இந்தியாவின் அரசியல் விருந்தினராக யாசர் அராபத் அடிக்கடி இந்தியா வந்து சென்றார்.

இந்திரா காந்தி படுகொலை செய்யப்பட்டபோது இறுதிச் சடங்கில் கலந்துகொண்ட யாசர் அராபத், துக்கத்தை அடக்க இயலாமல் பொதுவெளியில் கதறி அழுதார். அந்தளவிற்கு இந்திராகாந்தி காலத்தில் யாசர் அரபாத்துக்கும் இந்தியாவிற்கும் ஒரு நெருங்கிய நட்பு உருவாகியிருந்தது. பாலஸ்தீனம் மீதான இந்தியாவின் நிலைப்பாடானது இந்திரா காந்திக்கு பிறகு அதே நிலையில் ராஜீவ் காந்தி காலத்தில் தொடரப்பட்டது. பின்னர் வந்த நரசிம்மராவ் காலத்திலும் இந்த உறவு தொடர்ந்தது. ஆனால், பாஜக ஆட்சிக்கு வந்தபோதெல்லாம் இஸ்ரேலுடனான தமது உறவை வளர்க்கத் தவறவில்லை. வாஜ்பாய் ஆட்சிக்கு வந்தபோது அப்போதைய உள்துறை அமைச்சர் எல்.கே. அத்வானி இஸ்ரேலுக்கு பயணம் மேற்கொண்டார். தற்போது மோடியும் இஸ்ரேல் பயணத்தை தொடர்கிறார்.

இந்நிலையில் இஸ்ரேல் மீது அண்மையில் ஹமாஸ் அமைப்பு நடத்திய தாக்குதலுக்குப் பிறகு, ஆர்.எஸ்.எஸ் பூனைக்குட்டி அப்பட்டமாக வெளியே வந்தது. இஸ்ரேல் மீதான ஹமாஸின் தாக்குதலை கண்டித்த பிரதமர் மோடி, இந்த கடினமான காலத்தில் இஸ்ரேலுடன் ஒருமைப்பாட்டு உணர்வோடு நிற்பதாக கூறினார். இந்த ஆதரவை ஐநாவிலும் பாஜக அரசு தொடர்ந்தது. போர் நிறுத்தம் மீதான வாக்கெடுப்பை இந்தியா புறக்கணித்தது குறித்து ஐ.நா பொதுச் சபைக்கான இந்தியாவின் துணை நிரந்தரப் பிரதிநிதி யோஜனா படேல் விளக்கம் அளித்துள்ளார். அதில், "பயங்கரவாதம் வேகமாகப் பரவக் கூடியது. அதற்கு எல்லைகள் இல்லை. தேச பேதங்கள் இல்லை. இன வேறுபாடுகள் இல்லை. ஆகையால் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு உலகம் எந்தவித நியாயங்களையும் கற்பிக்கக் கூடாது. வேற்றுமைகளை விலக்கி வைப்போம். ஒன்றுபட்டு பயங்கரவாதத்துக்கு எதிரான முறைகளைக் கையாள்வோம்" என்றார்.

'பயங்கரவாதம்' 'தீவிரவாதி' என்ற பெயரில் ஹமாஸை எதிர்ப்பதாகச் சொல்லி, பாலஸ்தீன மக்களின் தார்மீக அரசியல் உரிமையை நசுக்கி வரும் இஸ்ரேலை பகிரங்கமாக ஆதரிக்கும் இந்தியாவின் நிலைப்பாட்டை, காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் சோனியா காந்தி கண்டனம் செய்து கட்டுரை எழுதியிருந்தார். பாஜகவின் கொள்கையை விமர்சித்திருந்த இந்த கட்டுரைக்கு மறுப்புத் தெரிவித்த பாஜக செய்தி தொடர்பாளர் திரிவேதி, "பயங்கரவாதம் எந்த வகையில் தலைதூக்கினாலும் அதை ஒழிக்க வேண்டும் என்பதுதான் இந்தியாவின் நிலைப்பாடு" என்றார்.

மோடி அரசைப் பொறுத்தவரை, ஹமாஸின் தீவிரவாத நடவடிக்கைகளுக்கு எதிராக இஸ்ரேலுக்கு முழு ஒத்துழைப்பு, காசா மீதான இஸ்ரேலின் தாக்குதல்கள் அனைத்தும் தீவிரவாதத்திற்கு எதிரான போரின் ஓர் அங்கமாக இஸ்ரேல் நியாயப்படுத்துவதை ஏற்றுக் கொள்வது ஆகும். மறுபக்கம் பாலஸ்தீனர்களின் உரிமை பற்றி ஒரு வார்த்தைகூட பேசாமல் கள்ள மௌனம் காப்பது.

இந்த மோசமான அரசியல் அணுகுமுறையானது, பாலஸ்தீனம் இந்தியாவின் நீடித்த அரசியல் உறவில், ஆர்.எஸ்.எஸ் பாஜகவின் சிந்தாந்தமும் ஒன்று கலந்திருப்பதை வெளிப்படுத்தி இருக்கிறது. இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை தற்போது குரங்கு கையில் சிக்கிய பூமாலையாகி விட்டது.

தொடர்புக்கு: 9842391963

# கட்டடத் தொழிலாளர் சங்கம் அஞ்சல் அட்டை அனுப்பும் போராட்டம்

கட்டுமான தொழிலாளர்களுக்கு வாரிய கூட்டத்தில் முடிவு செய்தபடி ரூபாய் 2000 ஓய்வூதியத்தை உடனே வழங்க வேண்டும்

புதுச்சேரி மாநிலத்தை போல் தீபாவளி போனஸ் ரூபாய் 5000 வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி, ஏஐடியுசி 104 வது அமைப்பு தினத்தில் தமிழகம் முழுவதும் முதலமைச்சருக்கு கோரிக்கை அஞ்சல் அட்டை அனுப்பப்பட்டது.

**திருச்செங்கோடு:** திருச்செங்கோடு சூரியம்பாளையம் தலைமை தபால் நிலையம் முன்பு தமிழ்நாடு ஏஐடியுசி கட்டடத் தொழிலாளர் சங்கத்தின் சார்பில், மாவட்ட செயலாளர் ஏ.குமார் தலைமையில் நடைபெற்றது. இதில் ஏஐடியுசி மாநில தலைவர் எஸ்.காசிவிஸ்வநாதன், ஏஐடியுசி மாநில செயலாளர் எஸ்.சின்னச்சாமி, சிபிஐ மாவட்ட செயலாளர் கே.அன்புமணி, ஏஐடியுசி மாவட்ட பொதுச் செயலாளர் பி.தனசேகரன், ஏஐடியுசி மாவட்ட செயலாளர் எஸ்.ராமகிருஷ்ணன்,சிபிஐ நகர செயலாளர் எஸ்.சுகுமார் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**கள்ளக்குறிச்சி:** கள்ளக்குறிச்சி மாவட்டம், ரிஷிவந்தியம் அடுத்த அரியலூர் துணை அஞ்சலகத்திலிருந்து மாவட்ட தலைவர் கோவிந்தராஜ் தலைமையில் மாவட்ட செயலாளர் அருண், நிர்வாகிகள் பகண்டை கூட்டு சாலை இனியவன், குளத்து மேடு மணிகண்டன், ஏந்தல் தீனா, வாணாபுரம் பிரபு, சேரந்தாங்கல் சிவகாமி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**திருச்சி:** திருச்சி மாவட்டம், மணிகண்டம் ஒன்றியம் இனாம்குளத்தூரில் பி. கலைச்செல்வன் தலைமையில், மாவட்ட செயலாளர் சி. செல்வகுமார் சங்க கொடியினை ஏற்றி வைத்தார். சோமரசம்பேட்டையில் ஜெ.நதியா தலைமையில் சங்க கொடியினை கட்டட சங்க மாவட்ட தலைவர் எம்.ஆர்.முருகன் கொடியினை ஏற்றி வைத்தார். தாயனூரில் எஸ். லெட்சுமிபிரபா தலைமையில், மாவட்ட தலைவர் எம்.ஆர். முருகன் கொடியினை ஏற்றி வைத்தார். சோமரசம்பேட்டையில் எம். மருதாம்பாள் தலைமையில் ஏஐடியுசி கொடியை மாவட்ட பொருளாளர் ஜி. ராமராஜ் ஏற்றி வைத்தார். மணிகண்டம் ஒன்றிய அலுவலகத்தில் எம். மருதாம்பாள் கொடியினை ஏற்றி வைத்தார். இரட்டைவாய்க்கால் தரைக்கடை சங்க கொடியினை சிபிஐ ஒன்றிய துணைச் செயலாளர் எஸ். முத்தழகு ஏற்றி வைத்தார். அல்லித்துறையில் எஸ். முத்துலெட்சுமி ஏற்றி வைத்தார். பாரதிநகரில் டி. நிர்மலா ஏற்றி வைத்தார். சபரி நகரில் என். பாஸ்கரன் ஏற்றி வைத்தார். நாடார் சத்திரத்தில் பி .வித்யா ஏற்றி வைத்தார். நாச்சிகுறிச்சியில் பி.குமரேசன் ஏற்றி வைத்தார். அதவத்தூரில் டி.சந்திரா ஏற்றி வைத்தார். வாசன் சிட்டி ஆட்டோ சங்க கொடியினை தலைவர் எஸ்.ஆறுமுகம் ஏற்றி வைத்தார். பஞ் சாயத்து அலுவலகம் ஆட்டோ ஸ்டாண்ட் கொடியினை எம். ரஷ்யாபேகம் ஏற்றி வைத்தார்.




அஞ்சல் அட்டை அனுப்பும் போராட்டம் சோமரசம்பேட்டை நாச்சிகுறிச்சி அல்லித்துறை அதவத்தூர் இனாம்குளத்தூர் தாயனூர் ஆகிய ஆறு இடங்களில் இருந்துஅனுப்பப்பட்டது.

**தஞ்சாவூர்:** தஞ்சாவூர் மாநகரில் கீழவாசல், சத்யா நகர்,சேப்னாவாரி, திருவையாறு, பாபநாசம், கும்பகோணம், திருவிடைமருதூர், திருபுவனம், திருப்பனந்தாள், ஒரத்தநாடு, பாப்பாநாடு, ஆம்லாபட்டு, பட்டுக்கோட்டை, பேராவூரணி, மதுக்கூர், அதிராம்பட்டினம் கக்கரைக்கோட்டை உள்ளிட்டு 50 க்கும் மேற்பட்ட இடங்களில் இருந்து தபால் அட்டைகள் அனுப்பி வைக்கப்பட்டன.

இந்த இயக்கத்தில் கட்டுமான சங்க மாவட்ட செயலாளர் ஆர். தில்லைவனம், மாவட்ட தலைவர் சேகர், ஏஐடியூசி தேசிய நிர்வாக குழு உறுப்பினர் சி.சந்திரகுமார், மாவட்ட தலைவர் வெ. சேவையா, மாவட்ட செயலாளர் துரை .மதிவாணன், தெரு வியாபார சங்க மாவட்ட செயலாளர் ஆர்.பி.முத்துக்குமரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**கோவை:** கோயமுத்தூரில் வஉசி சிலைக்கு மாலை அணிவித்து விட்டு அஞ்சல் அட்டை அனுப்பும் போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்த நிகழ்ச்சிகளில் தமிழ் நாடு ஏஐடியுசி கட்டட தொழிலாளர் சங்கத்தின் மாநில பொதுச் செயலாளர் என்.செல்வராஜ், மாநிலத் துணைத் தலைவர் ஆர்.பாலகிருஷ்ணன், மாநில செயலாளர் சி.நந்தினி, மாவட்ட துணை பொது செயலாளர் கோட்டை நாராயணன், சென்ட்ரிங் பிரிவு மாவட்ட செயலாளர் வேடப்பட்டி கிருஷ்ணன், மாவட்டத் துணைத் தலைவர் ஜே.கலா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

கரூர் தபால் நிலையத்தில் சங்க மாவட்டச் செயலாளர் தோழர் நிறிஷி.வடிவேலன் தலைமையில் நடைபெற்றது.போராட்டத்தில் கிமிஜிஹிசி மாவட்ட துணை செயலாளர் ரி.கலாராணி, கிமிசீதி மாவட்ட துணைசெயலாளர் ரி.கலாராணி விசி,கிமி சீதி மாவட்ட செயலாளர் வி.லட்சுமி காந்தன்,வி.தொ.ச மாவட்ட செயலாளர் ஸி.தங்கவேல்,கட்டிட சங்க நிர்வாகிகள் கந்தசாமி, சக்திவேல், வி.சௌந்தர் ராஜன் உள்ளிட்ட ஐம்பதுக்கும் மேற்பட்ட தோழர்கள் கலந்துகொண்டனர்

---

6 ஆம் பக்கத் தொடர்ச்சி

ஏராளம். அவை அனைத்தும் அரசியல் சட்டப்பணிகள் தொடர்பானவை அல்ல. அந்த சர்ச்சை பேச்சுகளுக்கும் ஆளுநர் ஆற்ற வேண்டிய பணிகளுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. மாறாக ஆர்.எஸ். எஸ் அரசியலை, ஆர்.எஸ்.எஸ் புகுத்த நினைக்கும் பாசிச சித்தாந்தங்களையே அவர் தொடர்ந்து பேசி வருகிறார்.

நீட் தேர்வு, புதிய கல்விக்கொள்கை, சனாதனம், கால்டுவெல், திராவிடம், மார்க்சியம், டார்வினியம், பெரியாரியம், வள்ளலார், போப்பின் திருக்குறள் மொழிபெயர்ப்பு, தமிழ்நாடு சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட சட்ட மசோதாக்களை நிலுவையில் போட்டிருப்பது, ஸ்டெர்லைட் போராட்டம், கூடங்குளம் போராட்டம்.. இப்படி ஆளுநர் ஆர்.என்.ரவி பேசியிருக்கும் சர்ச்சைப் பேச்சுகள் ஏராளம்.

இவற்றை மறுத்தும் விமர்சித்தும் பேசக்கூடிய கருத்துக்கள்; எதிர்ப்புப் போராட்டங்கள் அனைத்தும்..

ஆளுநர் மீதான ‘‘வாய்மொழித் தாக்குதல்கள் என்றோ உயிருக்கு விடுக்கும் அச்சுறுத்தல் என்றோ’’ கூற முடியுமா?

ஜனநாயகத்தின் உயரிய கருத்து சுதந்திரம் உள்ளிட்டப் பண்புக் கூறுகளையே ‘‘அரசியல் சட்டப் பணிகளை செய்யவிடாமல் தடுக்கும் நோக்கம் கொண்டவை’’ என்று ஆளுநர் கூறுவது சரியானதா?

ஆளுநர் பேசுவதை தமிழ்நாட்டு மக்கள் அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டும். அதற்கு யாரும் மாற்றுக் கருத்துக்களை சொல்லக் கூடாது என்று எதிர்பார்ப்பது சரியா?

‘‘நான் மாநிலத்தின் ஆளுநராக இருக்கிறேன். என்னை யாரும் ‘‘எதிர்க்கக் கூடாது’’ என்கிற மமதை மனநிலையில் அவர் இருக்கலாமா?

பிரிட்டனுக்கு அடிமைப்பட்டிருந்த போது, இந்த நாட்டை ஆண்ட கவர்னர்களும் கவர்னர் ஜெனரல்களும் அதிகாரம் செலுத்தியது போன்று; அடக்குமுறைகளை ஏவி விட்டது போன்று இன்றைய கவர்னர்களும் அதிகாரம் செலுத்தவும் அடக்குமுறைகளை ஏவி விடவும் அதிகாரம் இருப்பதாக ஆர்.என்.ரவி நினைக்கிறாரா?

அப்படி அவர் நினைத்தால்.. அது சாத்தியமில்லை என்பதை முதலில் புரிந்து கொள்ள வேண்டும். இன்றைக்கு இருப்பது மன்னராட்சி கால; மனுதர்ம கால இந்தியா அல்ல. அரசியலமைப்பு சட்டத்தின்படி ஆட்சி நடக்கும் இந்தியா. இங்கு கருத்துரிமையும் பேச்சுரிமையும் அனைவருக்கும் இருக்கின்றன.

அவர் ஆர்எஸ்எஸ் சித்தாந்தத்தை, அரசியலை பரப்ப நினைத்தால்; செல்லும் இடமெல்லாம் அதனைப் பேசிக்கொண்டிருந்தால்.. அதற்கு உரிய பதிலும் விமர்சனமும் எழுவது தவிர்க்க முடியாதது. அவற்றை ஆளுநர் எதிர்கொண்டுதான் ஆக வேண்டும்.

இப்படி அவர் பேசிய முத்துக்கள்தான் என்ன?:

- **“நமது தேசிய வளர்ச்சிக்கு பாதிப்பை ஏற்படுத்துவது நான்கு முக்கிய மேற்கத்திய சித்தாந்தங்கள். அவை இறையியல், டார்வீனிய கோட்பாடு, காரல் மார்க்ஸ் கோட்பாடு, ரூசோவின் சமூக ஒப்பந்தக் கோட்பாடு ஆகியவை.”**
- **“காரல் மார்க்ஸின் கோட்பாடு என்பது, இருப்பவர்களுக்கும் இல்லாதவர்களுக்கும் இடையே நிரந்தர மோதல்களைக்கொண்டது. அந்தக் கோட்பாட்டின்படி, ‘இல்லாதவர்கள்’ மேலோங்க வேண்டும். இந்த யோசனை வைரஸாகப் பரவுகிறது. இந்த மாதிரியானது வெவ்வேறு பிரிவுகளுக்கிடையேயும், அதற்குள்ளும் பிளவுகளை உருவாக்கியது.”**
- **“புதிய கல்விக் கொள்கையை அரசியல்ரீதியாகப் பார்க்கக் கூடாது. நம் கலாசாரம், பாரம்பர்யம், வரலாறு ஆகியவை பல அரசுகளால் மறைக்கப்பட்டிருக்கின்றன. மறைக்கப்பட்ட அந்த வரலாற்றைப் புதிய தேசிய கல்விக் கொள்கையால் மீட்டெடுக்க முடியும். நாட்டை முன்னேற்றப் பாதையில் கொண்டுசெல்ல முடியும்“**
- **“சனாதன தர்மம்தான் நம் பாரதத்தை உருவாக்கியது; ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இந்திய அரசியலமைப்புச் சட்டம், சனாதன தர்மத்தில் கூறப்பட்டிருக்கிறது. வேற்றுமையில் ஒற்றுமை என நாட்டைப் பற்றி கூறுகிறோம். சனாதன தர்மமும் அதையேதான் கூறுகிறது”**
- **“முனிவர்களாலும் சனாதன தர்மத்தின் ஒளியாலும் இந்த நாடு உருவானது”**
- **“கிடப்பில் வைத்திருக்கும் மசோதாக்கள் நிராகரிக்கப்பட்டதாகவே அர்த்தம். நிறுத்திவைக்கப்படும் மசோதாக்களை குறிப்பிடுவதற்கு வார்த்தை அலங்காரத்துக்காகவே நாகரிகமாக நிறுத்திவைப்பு என்கிறோம். நிறுத்திவைத்தாலே அது நிராகரிக்கப்பட்டதாகத்தான் பொருள்”**
- **“நீட் வருவதற்கு முன்பிருந்த நிலையைவிட நீட் வந்த பிறகு அரசுப் பள்ளி மாணவர்களின் மருத்துவப்படிப்பு சேர்க்கை அதிகரித்திருக்கிறது. நீட் விலக்கு மசோதா கிராமப்புற மாணவர்களின் நலனுக்கு எதிரானது”**
- **“சில பிராந்தியங்கள் மட்டும் முன்னேறுவது சரியல்ல. அது ‘டார்வினியன் மாடல்!’ சில புத்திகூர்மையுள்ளவர்கள் எல்லாப் பலன்களையும் எடுத்துக்கொண்டு மற்றவர்களை விட்டுவிடுகிறார்கள்”**




இவை ஆளுநர் ஆர்.என்.ரவியின் பேச்சுக்கள். முரண்பாடாகவும் சர்ச்சையை தூண்டக்கூடியதாகவும் இந்தப் பேச்சுக்கள் உள்ளன. இவை அறிவியலுக்கும் சமூக வளர்ச்சிக்கும் மட்டுமல்ல, மக்களின் நலன்களுக்கும் எதிரானவை. இந்தப் பேச்சுகளுக்கு எதிர்ப்பு வராமல் எப்படி இருக்கும்?

ஆங்கிலேயர் காலத்திய ஆளுநர் என்ற பதவி இன்றைக்குத் தேவை இல்லை. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசுகளே போதுமானது என்ற ஜனநாயக சிந்தனையை உரத்து முழங்கிய மாநிலம் தமிழ்நாடு. ஆட்டுக்குத் தாடியும் நாட்டுக்கு ஆளுநரும் அவசியமில்லை என போர்க்கொடி தூக்கிய மாநிலம்.

இந்த மாநிலத்துக்கு வந்திருக்கும் ஆர்.என்.ரவி அவர்கள், ஆளுநருக்கு உரிய பணிகளை செய்வதை விட்டுவிட்டு ஆர்எஸ்எஸ் அரசியலை, சித்தாந்தத்தை பரப்ப நினைத்தால், அதற்கு உரிய எதிர்வினைகள் எப்படி வராமல் இருக்கும்?

மன்னராட்சி காலத்திலும் வெள்ளையர் ஆட்சி காலத்திலும் அடிமைகளாக, குடிபடைகளாகத் தான் மக்கள் நடத்தப்பட்டனர். இந்த குடிபடைகள் (Subject) என்பது அரசுக்கு கட்டுப்பட்டு, அரசு கூறுவதை செயல்படுத்துபவர்கள். அரசை இவர்களால் கட்டுப்படுத்த இயலாது. அரசு சொல்வது தான் வேத வாக்கு. அரசை கேள்வி கேட்கும் அதிகாரம் யாருக்கும் கிடையாது. அப்படி கேள்வி கேட்டால் அது தேசத் துரோகம். மன்னராட்சி காலத்திலும் வெள்ளையர் ஆட்சி காலத்திலும் இந்திய மக்கள் இப்படித்தான் வாழ்ந்தனர். அன்றைய ஆளுநர்களும் மக்களை குடிபடைகளாக, அடிமைகளாகத் தான் நடத்தினர்.

இந்தியா விடுதலை பெற்று குடியரசான போது, மக்கள் அனைவரும் குடியுரிமை பெற்றவர்களாக, குடிமக்களாக (Citizen) ஆயினர்.இந்தகுடிமக்கள்என்பது அடிப்படை உரிமைகளுடன்; பொறுப்புகளுடன் செயல்பட்டு அரசாங்கத்தை தங்களுக்குப் பணி செய்ய வைப்பதாகும்.

இந்த ஆளுநர் ஆர்.என்.ரவியும் அவருடைய எஜமானர்களான ஆர்எஸ்எஸ் அமைப்பும் நாட்டு மக்களை குடிபடைகளாக (Subject) கருதுகின்றன. குடிபடைகளாக மாற்றத் துடிக்கின்றன.

‘‘நாம் யார்க்கும் குடியல்லோம்’’ என மன்னராட்சி காலத்திலேயே எதிர்ப்புக் குரல் எழுப்பிய வரலாறு கொண்டது தமிழ்நாடு. இதனை ஆளுநர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

ஆர்எஸ்எஸ் பாஜகவை வளர்க்க வேண்டும்; தேர்தல்களில் வெற்றி காண வேண்டும் என்பது ஆர்.என். ரவி அவர்களின் அக்கறையாகவும் விருப்பமாகவும் இருக்கலாம். அதற்காக அவர் பேசலாம், செயல்படலாம். அதற்கு ஆளுநர் பதவி பொருத்தமற்றது. அதனை கிண்டி ராஜ்பவனில் இருந்து கொண்டு செய்ய முடியாது.

**தொடர்புக்கு: 9500001224**

# பாஜகவை ஆட்சியில் இருந்து அகற்றுவதே நாட்டின் எதிர்கால திசை வழி!



கே.முருகன்

**2023 நவம்பரில் ராஜஸ்தான், மத்திய பிரதேசம், சத்திஸ்கர், தெலுங்கானா மற்றும் வடகிழக்கு மாநிலமான மிசோராம் உள்ளிட்ட ஐந்து மாநில தேர்தல் தேதி தேர்தல் ஆணையத்தால் அறிவிக்கப்பட்டு உள்ளது.**

### ராஜஸ்தான்

ராஜஸ்தான் மாநிலத்தில் 200 சட்ட மன்ற தொகுதிகள் இருக்கின்றது. காங்கிரஸ் கட்சி ஆட்சிப் பொருப்பில் இருக்கிறது. காங்கிரஸ் கட்சிக்கும் பாரதிய ஜனதா கட்சிக்கும் நேரடி போட்டி நிலவுகின்றது. இவர்களோடு ஆம் ஆத்மி கட்சியும் களத்தில் வேட்பாளர்களை நிறுத்துகின்றது.

இம்மாநிலத்தில் பிக்கானேர் உள்ளிட்ட சில மாவட்டங்களில் விவசாயிகளை அனிதிரட்டுவதில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் முன்னின்று செயல்பட்டுள்ளனர்.

### மத்திய பிரதேசம்:


230 சட்டமன்ற உறுப்பினர்கள் கொண்ட மத்திய பிரதேசத்தில் காங்கிரஸ், பாரதிய ஜனதா கட்சி இடையே கடும் போட்டி நிலவுகிறது. இந்தியாவின் மையப் பகுதியாக விளங்கும் இந்த மாநிலத்தில், 1980 ஆம் ஆண்டுகளில் காங்கிரஸ் கட்சியின் செல்வாக்கு மிக்க தலைவராக அர்ஜுன் சிங் இருந்தார். இங்குதான் 1984 ஆண்டு போபால் விஷ வாயு கசிவு விபத்து யுனிகான் கார்பைடு கம்பெனியில் நடந்தது.

இந்த விபத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இழப்பீடு பெறவும் விஷவாயு கசிவிலிருந்து மக்கள் காக்கப்படவும், அவர்களின் மறுவாழ்வு திட்டங்களை வலியுறுத்தியும் மக்கள் இயக்கங்கள் வலுவாக நடைபெற்றதை நாடு அறியும். 2018 சட்டமன்ற தேர்தலில் இங்கு காங்கிரஸ் கட்சி வெற்றிபெற்று ஆட்சி பொருப்பில் அமர்ந்தது. ஆனால் மோடி அரசு அதிகாரத்தைக் கொண்டு காங்கிரஸ் கட்சியை பிளவுப்படுத்தி பாரதிய ஜனதா கட்சியை ஆட்சியில் அமர்த்தி உள்ளது.

### தெலுங்கானா;

தெலுங்கானா மாநிலத்தில் இருக்கும் 119 சட்டமன்ற தொகுதிகளுக்கு தேர்தல் நடத்தப்படுகின்றது. ஒன்றுபட்ட ஆந்திர மாநிலத்திலிருந்து பிரிந்த தனி மாநிலமாகும். பாரதிய ராஷ்டிர சமிதி கட்சியின் தலைவர் சந்திர சேகர ராவ் முதல் அமைச்சராக இருக்கின்றார். ஆரம்பத்தில் தெலுங்கானா தனி மாநில கோரிக்கைக்காக தொடங்க பட்ட தெலுங்கானா ராஷ்டிர சமிதி கட்சியைத்தான் தேசிய அரசியலில் கால் பதிக்கும் நோக்கத்தோடு பாரதிய ராஷ்டிர சமிதி என அதன் தலைவர் சந்திர சேகர ராவ் மாற்றியுள்ளார். தெலுங்கானா மாநிலம் உருவாக காரணமே நாங்கள் தான் என்று பிரச்சாரத்தை வலுப்படுத்தி வருகிறார். ஆனால், 2009 ல் ஒன்றிய ஆட்சியில் இருந்த ஐக்கிய முற்போக்கு கூட்டனி 2 ஆட்சியில் காங்கிரஸ் கட்சியின் முயற்சியால்தான் தெலுங்கானா மாநிலம் உருவானதாக காங்கிரஸ் கட்சி தனது பிரச்சாரத்தை முன்னெடுத்துள்ளது.

பாரதிய ராஷ்டிர சமிதி, காங்கிரஸ் கூட்டனி, பாரதிய ஜனதா கட்சிகள் இடையே மும்முனை போட்டி உள்ளது. ஐதராபாத் நிசாமை எதிர்த்து வீரம் செறிந்த ஆயுதம் தாங்கிய போராட்டத்தின் மூலம் ஆந்திர மாநில மக்களை காத்ததோடு, ஏழை மக்களின் நிலங் களை மீட்டெடுத்த மாபெரும் வரலாற்று பாரம்பரியம் கம்யூனிஸ்டுகளுக்கு இங்கு இருக்கிறது. தற் போதும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் ஒன்றுபட்டு நிலச்சீர்திருத்த கோரிக்கையை வலியுறுத்தியும், ஏழை மக்களின் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள நிலங்களை மீட்டு மக்களுக்கு வினி யோகிக்கும் போராட்டத்தோடு, வேலை வாய்ப்பு திட்டங்களை வலியுறுத்தியும், விலைவாசி உயர்வுக்கு எதிராகவும் தொடர்ந்து போராடி வருகின்றன. வெகுமக்களிடையே நம்பிக்கையை பெற்று வலுவாக இருக்கின்றனர்.



### சதீஸ்கர்:

மத்திய பிரதேசத்தில் இருந்து பிரிந்து தனி மாநிலமாக இருக்கும் சத்திஸ்கர் மாநிலத்தில் 90 சட்டமன்ற உறுப்பினர்கள் தேர்வு செய்ய வேண்டும். பழங்குடி மக்கள் அதிக எண்ணிக்கையில் வாழும் மாநிலம். தொடக்கத்தில் இங்கு காங்கிரசின் செல்வாக்கு மிக்க தலைவராக இருந்த அஜித் ஜோகி முதல் அமைச்சராக இருந்தார். பின்னர் காங்கிரஸ் கட்சி யுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டால் அக்கட்சியில் இருந்து வெளியேறி தனிக் கட்சி தொடங்கி செயல் பட்டார். இங்கு அடுத்தடுத்து பாரதிய ஜனதா கட்சி ஆட்சியில் இருந்தது. கடந்த சட்டமன்ற தேர்தலில் காங்கிரஸ் கட்சி வெற்றி பெற்று ஆட்சியில் இருக்கிறது.பழங்குடி மக்கள் மத்தியில் கம்யூனிஸ்ட்டுகள் செல்வாக்கு பெற்றுள்ளனர்.

### மிசோரம்:

வடகிழக்கு மாநிலமான மிசோராம் மாநிலத்தின் 40 சட்டமன்ற உறுப்பினர்களை தேர்வு செய்வதற்கு தேர்தல் நடைபெறுகின்றது. வட கிழக்கு மாநிலமான மனிப்பூரில் வன்முறை கலவரத்திற்கு பிறகு நடை பெற உள்ள மிசோராம் தேர்தல் முடிவுகள் வடகிழக்கு பகுதியில் மட்டுமல்ல தேசிய அளவிலும் எதிர்ப்பார்பை ஏற்படுத்தியுள்ளது. இம் மாநிலத்தில் மிசோராம் தேசிய முன்னனி ஆட்சிப் பொருப்பில் இருக்கிறது. இந்த கட்சி 2014 முதல் தேசிய ஜனநாயக கூட்டனியில் அங்கம் பெற்று வருகின்றனர். தற்போது பாரதிய ஜனதா கட்சியுடன் மோதலில் இருந்து வருகின்றது.

பாரதிய ஜனதா கட்சியில் வலிமையான பாரதம் என்றும், இந்து மக்களின் பிரதிநி தியாக தங்களை அடையாளப்படுத்திக் கொள்ளும் வகையில் பிரச்சாரங்கள் கட்டவிழ்த்துவிடப் படுவதோடு ஒரே நாடு ஒரே தேர்தல் என்றும், வலுவான தலைவர் மோடி என்ற பிம்பத்தையும் ஊடகங்கள் மூலம் ஏற்படுத்தி வருகின்றது.

2014 ல் மோடி தலைமையில் பாரதிய ஜனதா ஆட்சி அமைந்த பிறகு, இந்தியாவில் பெரும்பான்மை மாநிலங்களில் பாரதிய ஜனதா கட்சி ஆட்சியில் இருப்பது போன்று ஒரு தோற்றத்தை செயற்கையாக உருவாக்க வேண்டும் என்பதற்காக பல மாநிலங்களில் ஆட்சியில் இருந்த கட்சிகளை தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி உடைத்து பாரதிய ஜனதா கட்சியின் ஆட்சி அல்லது பாரதிய ஜனதா அங்கம் பெறும் கூட்டனி ஆட்சி நடைபெறுவதாக காட்டுவதற்கு திட்டமிட்டு செயலாற்றியது.

மத துவேச அரசியலை முன்னெடுத்து இந்துக்களின் பிரதிநிதியாக தங்களை அடையாளப் படுத்திக்கொள்ளும் பாரதிய ஜனதா கட்சி. இந்துக்களில் பெரும்பான்மையாக இருக்கும் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் பயன் பெறும் வாய்ப்பாக உள்ள சாதி வாரியான கணக்கெடுப்பு நடத்தாமல், திட்டமிட்டு தள்ளிப் போடும் தந்திரங்களை தொடர்ந்து செய்து வருகின்றது.

மோடி கறைபடாதவர். ஒன்பது ஆண்டு பாரதிய ஜனதா ஆட்சியில் ஊழல் இல்லை என சொல்லி வந்தது. பாரதிய ஜனதா கட்சிக்கு, நன்கொடைகள் வழங்கியவர்களுக்கும், கட்சிக்கு வேண்டியவர்ளுக்கும் சாலை மேம்பாட்டு திட்டங்கங்களில் ஒப்பந்தங்களின் உண்மை மதிப்பை விட பல மடங்கு உயர்த்தி வழங்கி, அரசுக்கு பல ஆயிரம் கோடி ரூபாய் இழப்பு ஏற்படுத்தி உள்ளனர். பிரதமரின் சுகாதார காப்பீடு திட்டம், பிரதமர் வீடு கட்டும் திட்டங்கள் தகுதி இல்லாதவர்களுக்கும், ஒரே கைப்பேசி எண்ணில் பல ஆயிரம் நபர்களுக்கும் வழங்கி உள்ள இதை இந்திய கணக்கு தணிக்கை அதிகாரிகளின் அறிக்கை அம்பலபடுத்தி உள்ளது. இதன் மூலம் மோடி மற்றும் பாரதிய ஜனதா கட்சியின் மாயப்பிம்பம் உடைந்துள்ளது. அறிக்கையை அளித்த அதிகாரிகள் உடனடியாக மாற்றப்பட்டுள்ளனர்.

இத்தகைய நிலையில்தான், பாரதிய ஜனதாவின் மோடி அரசு தோற்கடிக்கப்பட்டு அரசியல் சட்டத்தின் மேன்மைகளும் நாடும் பாதுகாக்கப் பட வேண்டும் என்ற இலக்கோடு இந்தியா கூட்டனி உருவாக்கப்பட்டுள்ளது. இதில் பல மாநில கட்சிகளும் இடம் பெற்றுள்ளது. பாரதிய ஜனதா கட்சி இந்தியா கூட்டனியில் குழப்பம் ஏற்படுத்த எடுத்த முயற்சிகளும் தோல்வி அடைந்து விட்டது. இந்தியா கூட்டனியில் காங்கிரஸ் கட்சியும் முக்கிய அங்கம் பெற்றுள்ளது. மேலும் அனைவரையும் ஒருங்கிணைத்து செல்லும் பொருப்பும் அதற்குள்ளது.

இந்தியா கூட்டனி அமைக்கப்பட்டதன் அச்சத்தில் நாட்டின் பெயரையும், கோப்புகளிலும் இந்தியா என்பதை மாற்றி பாரதம் என்று பயன்படுத்த மோடி அரசு செயலாற்றி வருகிறது. இந்தியா கூட்டனி உருவாக்கம் ஜனநாயக முற்போக்கு எண்ணம் கொண்டவர்களிடையே வரவேற்பையும், நம்பிக்கையையும் அதிகரித்துள்ளது. இதன் காரணமாக கலக்கமடைந்த மோடி அரசு, அரசியல் ஆதாயம் பெற்று விட வேண்டும் என்ற நோக்கத்தில் 2014 முதல் பெரும்பான்மை இருந்த நிலையிலும் கிடப்பில் போடப்பட்ட பெண்கள் இட ஒதுக்கீடு மசோதாவை உடனடியாக நிறைவேற்றி குடியரசு தலைவர் ஒப்புதலைப் பெற்றுள்ளது.

அதிலும் பாரதிய ஜனதா கட்சி தனது சித்து வேலையாக அடுத்த மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தப்பட்டு தொகுதி மறு சீரமைப்பு செய்யப்பட்ட பிறகு 2029 ல் செயல் படுத்தப்படும் வகையில் சட்டத்தில் பிரிவுகளை சேர்த்துள்ளது.

இடையிடையே ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன் பகவத் மக்களை குழப்பும் வகையில் கருத்துக்களை வெளியிட்டு வருவதும் ஊடகங்கள் மூலம் அறிந்து கொள்ள முடிகின்றது. இந்தியா கூட்டணியின் முக்கிய அங்கமாக விளங்கும் காங்கிரஸ் கட்சி, இந்தியா கூட்டணியில் அங்கம் பெற்றுள்ள கட்சிகளையும் மேலும் சில கட்சிகளையும் ஒருங்கிணைத்து ஐந்து மாநில தேர்தலில் பாரதிய ஜனதா கட்சி வீழ்த்தப்பட வேண்டும். இதுதான் அடுத்த வருடம் நடைபெறும் மக்களவைத் தேர்தல் மதச்சார்பற்ற இந்தியாவுக்கான கட்டமைப்பை உருவாக்கும் நம்பிக்கையை மக்களிடையே விதைக்கும். அதுவே இந்திய நாட்டின் திசைவழியாக கொண்டு செல்ல வேண்டும்.

தொடர்புக்கு: 7603930397

### சத்தீஸ்கர்

சத்தீஸ்கர் மாநில சட்டப்பேரவைத் தேர்தலில் 20 தொகுதிகளில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி போட்டியிடுகிறது. ஐந்து தொகுதிகளில் சிபிஐ(எம்) மற்றும் சிபிஐ எம்எல் (விடுதலை) கட்சிகளுக்கு ஆதரவளிக்க முடிவெடுத்துள்ளது. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களின் முதல் பட்டியல் வெளி யிடப்பட்டுள்ளது.

1. கொன்டா: மனீஷ் குஞ்சம் (கட்சியின் சத்தீஸ்கர் மாநிலச் செயலாளர்)
2. தண்டேவாடா: பீம்சென் மந்தாபி
3. பிஜப்பூர்: பி. லக்ஷ்மிநாராயண்
4. சித்ரகூட்: ராமுராம் மௌரியா
5. கொண்டகான்: ஜெய்பிரகாஷ் நேதம்
6. கேஷ்கல்: தினேஷ் மார்க்கம்
7. நாராயண்பூர்: புல்சிங் கச்லம்

### ராஜஸ்தான்

ராஜஸ்தான் மாநில சட்டப்பேரவைத் தேர்தலில் 10 தொகுதிகளில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி போட்டியிடுகிறது. இதில் 7 தொகுதிகளில் போட்டியிடும் முதல் வேட்பாளர் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

1, சவாய் மாதோபூர்: ப்ரத் லால் மினா
2, கோகுண்டா: லஹர் தாஸ் பில்
3, சலும்பர்: களு லால் மினா
4, உதய்பூர் புறநகர்: காபி லால்
5, சஹாரா: கைலாஷ் கெலாட்
6, ரத்தன் கர்: மதன் லால்
7, மவ்லி: ஜிவ்ராஜ்

நுகர்பொருள் வாணிபக் கழக

## சுமைதூக்கும் தொழிலாளர்களுக்கு தீபாவளி போனஸ் ரூ.5000 வழங்குக!

**ஏஐடியூசி கோரிக்கை!!**

நுகர் பொருள் வாணிபக் கழக தொழிலாளர் சங்கம் மற்றும் சுமை தூக்கும் தொழிலாளர் சங்கத்தின் மாநில நிர்வாக குழு கூட்டம் தஞ்சாவூரில் சங்கத்தின் மாநில தலைவர் அ.சாமிக்கண்ணு, மாநில செயலாளர் சி.பாலையன் தலைமையில் நடைபெற்றது. மாநில பொதுச் செயலாளர் சி.சந்திரகுமார், ஏஐடியூசி தேசிய, மாநில குழு முடிவுகள் பற்றியும் விரிவாக பேசினார். கூட்டத்தில் நுகர்பொருள் வாணிபக் கழக பணியாளர்களுக்கு 20% போனஸ் வழங்க வேண்டும், சுமை தூக்கும் தொழிலாளர்களுக்கு ரூ5000 போனசும், ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கு ரூ4000 கருணை ஓய்வூதியம் வழங்க தமிழக முதலமைச்சர் அறிவிப்பை வெளியிட வேண்டும் என்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

ஒன்றிய அரசு

## காவிரியில் சட்டப்படியான நீரை பெற்றுத்தர வேண்டும்!

**பி.எஸ்.மாசிலாமணி வலியுறுத்தல்**

தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் தஞ்சை தெற்கு மாவட்ட குழு கூட்டம் ஏஐடியூசி மாவட்ட அலுவலகத்தில் விவசாய சங்கத்தின் மாவட்ட தலைவர் ஆர்.இராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட செயலாளர் சோ. பாஸ்கர் நடைபெற்ற பணிகள் குறித்து பேசினார்.தமிழ்நாடு விவசாய சங்கத்தின் மாநில பொதுச் செயலாளர் பி.எஸ். மாசிலாமணி குருவைப் பயிர்கள் காவிரி தண்ணீர் இல்லாமல் காய்ந்து கருகாகிவிட்ட நிலைமையும், அதனால் விவசாயிகள் துன்பங்களையும், நடப்பு சம்பா பருவத்தில் சட்டப்படியான காவிரி நீர் பெற்றுத் தர அரசுகள் நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி பேசினார். கூட்டத்தில் கட்சி மாவட்ட செயலாளர் முத்து உத்திராபதி, தேசிய குழு உறுப்பினர் அ.பன்னீர்செல்வம், மாவட்ட பொருளாளர் நா.சௌந்தர்ராஜன், மாவட்ட துணை தலைவர் அ.கலியபெருமாள், மாவட்ட துணைச் செயலாளர்கள் துரை.பன்னீர்செல்வம், சி.ஜெயராஜ் உள்ளிட்ட பொதுக்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலத்தில்

## ஓஎன்ஜிசி எண்ணெய் கிணறுகளை தோண்டாதீர்

**சிபிஐ தஞ்சை தெற்கு மாவட்ட குழு வலியுறுத்தல்**

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தெற்கு மாவட்டக்குழு கூட்டம் ம.விஜயலெட்சுமி தலைமையில் நடைபெற்றது. கட்சியின் தேசிய குழு உறுப்பினர் வை. சிவபுண்ணியம் அரசியல் விளக்கவுரை யாற்றினார். மாவட்டசெயலாளர் முத்து உத்திராபதி வேலை அறிக்கை முன்வைத்தார். இதில் மாவட்ட குழு, நிர்வாக குழு உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அறிவிக்கப்பட்டுள்ள டெல்டா மாவட்டங்களில் ஓ.என.ஜி.சி. புதியதாக 10 எண்ணெய் கிணறுகள் தோண்டப் போவதாகவும், அதற்காக கருத்துக் கேட்பு கூட்டங்கள் நடத்தப்போவதாகவும் அறிவித்துள்ளதை இக் கூட்டம் வன்மையாக கண்டிப்பதுடன் ஓ. என். ஜி. சி. தனது முடிவை திரும்ப பெற வலியுறுத்துகிறது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## பசும்பொன் முத்துராமலிங்கம் தேவர் சிலைக்கு மரியாதை

மதுரையில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநகர் மாவட்ட குழு சார்பாக, மதுரை கோரிப்பாளையம் பகுதியில் அமைந்துள்ள முத்துராமலிங்கத் தேவர் முழு உருவ சிலைக்கு மாநகர் மாவட்ட செயலாளர் எம்.எஸ்.முருகன், மாவட்ட துணை செயலாளர் சி.தாமஸ், மாவட்ட பொருளாளர் இருளாண்டி, மதுரை தெற்கு பகுதி குழுவின் நிர்வாகிகள் வெங்கடேசன், அய்யனார், மத்திய கிழக்கு பகுதி குழு செயலாளர் ரவிச்சந்திரன் உள்ளிட்டோர் மாலை அணிவித்து மரியாதை செய்தனர்.

### வினாடி - வினா விடைகள்

1. அறிவியல் முறைப்படியான ஆய்வின்படி கி.மு.950
2. 15 லட்சம் (1.51 மில்லியன்) ஆண்டுகள் பழமையானவை
3. யூகோஸ்லோவியா
4. 1919 ஜனவரி 15 அன்று பெர்லினில் சுட்டுக்கொல்லப்பட்டார்.
5. மாமிச உண்ணிகள் (Carnivores)
6. வியாழன் (Jupiter), பூமியின் விட்டத்தைவிட 11 மடங்கு பெரியது.

## தலித் உரிமைகளை பாதுகாக்க நாடு தழுவிய மாபெரும் கையெழுத்து இயக்கம்



தலித் மக்களின் உரிமைகளை மீட்க சம உரிமையை நிலைநாட்ட அரசியல் சட்டத்தை பாதுகாக்க நாடு தழுவிய கையெழுத்து இயக்கம், தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்கம் மற்றும் தலித் அமைப்புகள் சார்பாக நடைபெற்றது.

**கிருஷ்ணகிரி:** கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரையில் தலைவர் சி.குப்பன் தலைமையில் நடைபெற்றது. நிகழ்ச்சியை துவக்கிவைத்து தி.மு.க ஒன்றிய செயலாளர் எக்கூர் டி.செல்வம் சிறப்புரை நிகழ்த்தினார்.

வி.சி.க. மண்டல துணை செயலாளர் க.ஜிம் மோகன், தி.மு.க. ஒன்றிய செயலாளர் ரஜினி செல்வம், தொ.வி.மு மாநில துணை செயலாளர் வி.சி.க. எஸ்.அசோகன், மாநில செயலாளர் காங்கிரஸ் ஜெ.எஸ்.ஆறுமுகம் ஆகியோர் முன்னிலையில் கிருஷ்ணகிரி பாராளுமன்றம் உறுப்பினர் டாக்டர்.செல்லக்குமார் எம்.பி. முதல் கையெழுத்திட்டு சிறப்புரை ஆற்றினார். வி.சி.க மாவட்ட செயலாளர் வே.குபேந்திரன், இந்திய குடியரசு கட்சி மாநில செயல் தலைவர் எம்.சிவா, தி.மு.க நகர செயலாளர் பாபு சிவக்குமார், காங்கிரஸ் மாவட்ட தலைவர் எஸ்.நடராஜ், வி.தொ.ச. மாவட்ட செயலாளர் இரா.சேகர், மதிமுக கணேசன் ஆகியோர் விளக்கவுரை ஆற்றினர்.

**தர்மபுரி:** தருமபுரி பி.எஸ்.என்.எல் அலுவலகம் முன் தமிழ்மாநில விவசாய தொழிலாளர் சங்க மாநில செயலாளர் ஜெ. பிரதாபன் தலைமையில் கையெழுத்து இயக்கம் நடைபெற்றது. இதனை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தருமபுரி மாவட்ட செயலாளர் எஸ். கலைச்செல்வன் முதல் கையெழுத்திட்டு துவக்கி வைத்தார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில நிர்வாகக்குழு உறுப்பினரும் சங்க மாவட்ட செயலாளர் எஸ். தேவராஜன் சிறப்புரயாற்றினார், இதில் ஏஐடியுசி மாவட்ட செயலாளர் கே.மணி, சங்க மாநில பொதுக்குழு உறுப்பினர்கள் ஜி.மாதையன், அல்லிமுத்து, இ.அலமேலு, மாவட்டக்குழு உறுப்பினர்கள் வெ.பை.மாதையன் உள்ளிட்டோர் கலந்துக் கொண்டனர். இறுதியாக சங்க தருமபுரி ஒன்றிய செயலாளர் ஜி.பச்சாகவுண்டர் நன்றி கூறினார்.

**திருவாரூர்:** தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்கம், ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கம் திருத்துறைப்பூண்டி ஒன்றிய, நகர குழுக்களின் சார்பில் வி.தொ.ச.மாநில துணை தலைவர் கா.மாரிமுத்து எம்.எல்.ஏ. தலைமையில் திருத்துறைப்பூண்டி நகராட்சி அலுவலகம் எதிரில் துவக்க நிகழ்ச்சி கே. உலகநாதன் எக்ஸ்.எம்.எல்.ஏ., மாநில பொதுச் செயலாளர் அ.பாஸ்கர் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் வி.தொ.ச. மாவட்ட செயலாளர் கே.ராஜா, சிபிஐ ஒன்றிய செயலாளர் வி. ஜவகர், சிபிஐ நகரச் செயலாளர் டி.பி.சுந்தர், எம்.மகாலிங்கம், அ.மூர்த்தி ஆகியோர் பங்கேற்றனர்.

இதில் கட்சியின் மாநில கட்டுபாட்டுக்குழு உறுப்பினனர் கோ. பழனிச்சாமி எக்ஸ்.எம்.எல்.ஏ., முதல் கையெழுத்திட்டு துவக்கி வைத்தார்கள்.

## உடலுழைப்பு தொழிலாளர் ஓய்வூதியத்தை மாதம்தோறும் வழங்க கோரி ஆர்ப்பாட்டம்

திருச்செங்கோடு அண்ணா சிலை முன்பு நாமக்கல் மாவட்ட பொது தொழிலாளர் சங்கத்தின் சார்பாக கண்டன மாவட்ட செயலாளர் எஸ்.ராமகிருஷ்ணன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. கட்டட சங்க மாவட்ட செயலாளர் ஏ.குமார் முன்னிலை வகித்தார்.

ஏஐடியுசி மாநில தலைவர் எஸ்.காசிவிஸ்வநாதன், ஏஐடியுசி மாநில செயலாளர் எஸ்.சின்னச்சாமி, சிபிஐ மாவட்ட செயலாளர் கே.அன்புமணி, பி.தனசேகரன் மாவட்ட பொதுச் செயலாளர், சங்க மாவட்ட குழு சி.முருகேசன் எக்ஸ்.எம்.சி. உள்ளிட்டோர் கண்டன உரையாற்றினர்.

உடலுழைப்பு தொழிலாளர்கள் ஓய்வூதியத்தை மாதம் தவறாமல் வழங்க வேண்டும். உடலுழைப்பு மற்றும் கட்டிட பெண் தொழிலாளர்கள், இந்திரா காந்தி முதியோர் ஓய்வூதிய திட்டம், விதவைகள் ஓய்வூதியம் மற்றும் ஊனமுற்றோர் உதவி தொகை பெரும் அனைவருக்கும் மகளிர் உரிமைத் தொகை அமல்படுத்த வேண்டும். நாமக்கல் மாவட்ட தொழிலாளர் துறை உதவி ஆணையர் ஓய்வூதிய விண்ணப்பங்களை காலம் தாழ்த்தாமல் பரிசீலனை செய்து ஆணை வழங்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

## பத்திரப்பள்ளி அணைக்கட்டும் பணியை மீண்டும் துவக்க வேண்டும்

**விவசாயிகள் சங்க வேலூர் மாவட்ட பேரவை வலியுறுத்தல்**

தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் வேலூர் மாவட்ட பேரவை கூட்டம் குடியாத்தத்தில் நடந்தது. இக்கூட்டத்திற்கு மாவட்ட அமைப்பாளர் ஏ.டி.எஸ். மகேஷ்பாபு தலைமை தாங்கினார். இதில் விவசாயிகள் சங்க மாநில துணைத்தலைவர் கே. லகுமய்யா, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் முன்னாள் எம்எல்ஏ. ஜி லதா, மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் எல். மணி, அமைப்புசாரா தொழிலாளர் சங்கம் துரை செல்வம், விவசாய தொழிலாளர்கள் சங்க மாவட்ட செயலாளர் கே. சி. பிரேம் குமார் உள்ளிட்டோர் சிறப்புரை ஆற்றினர்.

மாவட்ட தலைவராக எம். கோபி, மாவட்ட செயலாளராக ஏ. டி. எஸ். மகேஷ்பாபு, மாவட்ட பொருளாளர் எஸ். சண்முகம், துணைத் தலைவர்கள் எம். இந்திரன், வி .கோபால், ஆர். வேலாயுதம், துணைச் செயலாளர்கள் ஆர். ராஜேந்திரன், கே. குலசேகரன், ஏ. சீனிவாசன் உள்ளிட்ட மாவட்ட குழு உறுப்பினர்கள் 37 பேர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.

பாதியில் நிற்கும் பத்திரப்பள்ளி அணைக்கட்டும் பணியை உடனே துவைக்கிட அரசு நிதி ஒதுக்கிட வேண்டும்.

குடியாத்தம், பேரணாம்பட்டு பகுதிகளில் காட்டு விலங்குகளால் பாதிக்கப்படும் விவசாயிகளுக்கு நஷ்ட ஈடு வழங்க வேண்டும்.

மழைக்காலங்களில் பாலாற்றில் வெள்ள நீர் வீணாக கடலில் கலக்கிறது இதனை பயன்படுத்தும் வகையில் ஐந்து இடங்களில் பாலாற்றில் தடுப்பணைகள் கட்ட வேண்டும்.

உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## கைத்தறி நெசவு தொழிலைபாதிக்கும் ஜி.எஸ்.டி. வரியை நீக்க வேண்டும்!

ஏஐடியூசி கைத்தறி சம்மேளனம் வலியுறுத்தல்

தமிழ்நாடு கைத்தறி நெசவுத் தொழிலாளர் ஏஐடியூசி சம்மேளனத்தின் மாநில நிர்வாக குழு கூட்டம் தஞ் சாவூர் மாவட்ட ஏஐடியூசி அலுவலகத்தில் மாநிலத் தலைவர் ஜி.மணிமூர்த்தி தலைமையில் நடைபெற்றது. மாநில பொதுச் செயலாளர் எஸ. பி.ராதா நடைபெற்ற பணிகள் குறித்து, தொழிலாளர்கள் படும் வேதனைகள் குறித்தும் விரிவாக பேசினார்.

கூட்டத்தில் மாநில துணைச் செயலாளர் என்.எஸ். பெருமாள், ஏஐடியூசி தேசிய நிர்வாக குழு உறுப்பினர் சி.சந்திரகுமார், மாவட்ட பொதுச் செயலாளர் ஆர்.தில்லைவனம், மாவட்ட செயலாளர் துரை. மதிவாணன் உள்ளிட்டார் கலந்து கொண்டனர்.

கைத்தறி நெசவுத் தொழிலை பாதுகாக்க ஒன்றிய அரசு விதித்துள்ள ஜி. எஸ். டி. வரியை முற்றிலுமாக நீக்க வேண்டும், நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் தயாராகும் துணிகளுக்கு வழங்கும் ரிபேட் மானியத்தை மாற்றி அமைத்து, சேலையின் உற்பத்தி விலைக்கு 20 சதவீதம் ரிபேட் தமிழ்நாடு அரசு வழங்க வேண்டும், முதியோர்களுக்கு ஓய்வூதியம் 6000 ரூபாய் வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

# பாலஸ்தீனம் மீதான தாக்குதலை நிறுத்த கோரி ஆர்ப்பாட்டம்



பாலஸ்தீன் மீதான போரை இஸ்ரேல் உடனே நிறுத்தவேண்டும் எனக்கோரி இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உள்ளிட்ட வெகுஜன இயக்கங்கள் தமிழகம் முழுவதும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

**இராமநாதபுரம்:** இராமநாதபுரம் மாவட்டத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளர் என். எஸ். பெருமாள் ஆர்ப்பாட்டத்தை துவக்கி வைத்தார். மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் எஸ் முருகபூபதி, மாவட்டக் குழு உறுப்பினர் தர்வேஸ்கான், ராமநாதபுரம் நகர் செயலாளர் கே களஞ்சியம், ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர், அப்துல் ரகீம், அப்துல் இஸாஹ், சர்புதீன் உள்ளிட்ட தோழர்கள் பங்கேற்றனர்.

**மதுரை:** மதுரையில் எல்.பி.எஃப், சி.ஐ.டி.யு., ஹெச்.எம்.எஸ்., ஐ.என்.டி.யு.சி., ஏ.ஐ.டி.யு.சி., எம்.எல்.எஃப். உட்பட அனைத்து தொழிற்சங்கங்கள் இணைந்த மாபெரும் ஆர்ப்பாட்டம் பெத்தானியாபுரம் பைபாஸ் ரோட்டில் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்திற்கு ஏ.ஐ.டி.யு.சி. யின் மதுரை மாவட்ட செயலாளர் கே.சேது தலைமை ஏற்க, தமிழ்நாடு ஏ.ஐ.டி.யு.சி. மாநில தலைவர் எஸ். காசி விஸ்வநாதன், சி.ஐ.டி.யு. சார்பாக கண்ணன், லெனின், ஹெச்.எம்.எஸ். சார்பாக பாதர்வெள்ளை, எல்.பி.எஃப் சார்பாக கருணாநிதி, எம்.எல்.எஃப் சார்பாக மகபூப்ஜான் பேசினார்கள்.

**தென்காசி:** தென்காசி மாவட்டம் செங்கோட்டையில் சிபிஐ, சிபிஎம் இணைந்து இஸ்ரேல் பாலஸ்தீனம் போரை நிறுத்த வலியுறுத்தி எஸ்.மாரியப்பன். வேல்மயில் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஏஐடியூசி மாவட்ட பொதுச் செயலாளர் டி.சுப்பையா சிறப்புரையாற்றினார். ஜனசக்தி செய்தியாளர் கே. பழனிச்சாமி, தாலுகா உதவி செயலாளர் எஸ். சுந்தர், ஏஐடியூசி மாவட்ட தலைவர் சி.சுப்பிரமணியன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### அனைவருக்கும் 25% போனஸ் வழங்குக!

# தஞ்சாவூர் போக்குவரத்து ஏஐடியுசி சம்மேளனம் வலியுறுத்தல்

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக ஏஐடியூசி தொழிலாளர்கள் சங்கத்தின் 40 வது ஆண்டு பேரவை கூட்டம் தஞ்சாவூர் மாவட்ட அலுவலகத்தில் சங்கத் தலைவர் என்.சேகர் தலைமையில் நடைபெற்றது. சங்க துணைத் தலைவர் டி.சந்திரன் அனைவரையும் வரவேற்று பேசினார். ஏஐடியூசி மாநில செயலாளர் ஆர்.தில்லைவனம் துவக்க உரையாற்றினார். பொதுச் செயலாளர் எஸ்.தாமரைச்செல்வன் வேலை அறிக்கை வாசித்தார். பேரவையில் சம்மேளன துணைத் தலைவர் துரை. மதிவாணன், மாவட்ட தலைவர் வெ.சேவையா ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். புதிய நிர்வாகிகளாக தலைவர் என்.சேகர், பொதுச் செயலாளர் எஸ்.தாமரைச்செல்வன், பொருளாளர் சி.ராஜமன்னன் அகியோர் ஒரு மனதாக தேர்வு செய்யப்பட்டனர். தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக தொழிலாளர் சம்மேளனத்தின் மாநில பொருளாளர் கே நேருதுரை பேரவையை முடித்து வைத்து நிறைவுரை ஆற்றினார். திருத்தப்பட்ட போனஸ் விதிகளின்படி பஸ்பாடி கிளீனர்,கேன்வாசர் உள்ளிட்டு அனைவருக்கும் 25% போனஸ் அறிவிக்க வேண்டும், கடந்த ஒப்பந்தம் நான்காண்டாக நீட்டிக்கப்பட்டு 31.8.2023 அன்று முடிவடைந்து விட்டது, தற்போது 15வது ஊதிய ஒப்பந்தத்தை உடனடியாக பேசி செப்டம்பர் ஒன்றாம் தேதி முதல் அமல்படுத்த வேண்டும் உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

# விவசாயத் தொழிலாளர்களுக்கு பண்டிகை பணமாக ரூ.5,000 வழங்குக!

விவசாயத் தொழிலாளர்களுக்கு பண்டிகை பணமாக ரூ. 5 ஆயிரம் வழங்க தமிழ் மாநில விவசாயத் தொழிலாளரசங்கத்தின் மாநில பொதுச்செயலாளர் அ.பாஸ்கர் தமிழ்நாடு முதல்வர்க்கு அனுப்பிய மனுவில் கூறியுள்ளதாவது.

வறட்சியும், வேலையின்மையும் அதிகரித்து வரும் சூழலில், விவசாயத் தொழிலாளர் குடும்பங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. மூன்று மாதங்களுக்கு மேலாக ஊதியமும் வழங்கப்படவில்லை. நூறு நாள் வேலை வழங்க வேண்டிய சட்டப்பூர்வ கடமைப் பொறுப்பையும் நிறைவேற்றவில்லை.

கடந்த ஆண்டில் சராசரியாக 42 நாட்களுக்கு மட்டுமே வேலை வழங்கப்பட்டுள்ளது. இந்தப் பரிதாபகரமான நிலையை கருத்தில் கொண்டு. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத் தொழிலாளர் குடும்பங்களுக்கு தலா ரூ 5 ஆயிரம் வீதம் பண்டிகை பணம் வழங்கிட மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர்கள் அவர்கள் ஒன்றிய அரசை வலியுருத்த வேண்டும்

தமிழ்நாட்டில் உள்ள ஒரு கோடிக்கும் அதிகமான விவசாயத் தொழிலாளர்களுக்கு சமூக பாதுகாப்புத் திட்டத்தை உறுதிசெய்யும் முறையில் தொழிற்சங்கப் பிரதிநிகள் உள்ளிட்ட முத்தரப்பு பிரதிநிகள் கொண்ட தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் நல வாரியம் அமைத்திட வேண்டும் என தமிழ் மாநில விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் சார்பில் முதல்வருக்கு கோரிக்கை மனு அனுப்பட்டுள்ளது.

# ஏஐடியுசி மாநில பயிலரங்கம் நடத்த முடிவு

செங்கல்பட்டு மாவட்ட குழு கூட்டம் மறைமலைநகர் மக்கள் இல்லத்தில் மாவட்ட தலைவர் எம். சங்கையா தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாநில பொதுச் செயலாளர் எம். ராதாகிருஷ்ணன் கலந்து கொண்டு தேசிய குழு முடிவுகள், மாநில நிர்வாக குழு, முடிவுகளையும், பெருந்திரள் அமர்வு இயக்கங்கள், பரப்புரைகள் குறித்தும், கூட்டமைப்பு முடிவுகள் குறித்து பேசினார். மாவட்ட பொதுச் செயலாளர் எம்.ஜஹாங்கீர் வேலை அறிக்கையை முன்வைத்தார். இக்கூட்டத்தில் அக்டோபர் 31 ஏஐடியுசி 104 வது அமைப்பு தினம் பாலஸ்தீனத்தில் யுத்தம் இல்லாத. அமைதியை திரும்ப வேண்டும் அதற்கான நாளாக நமது அமைப்பு தினம் மாவட்டம் முழுவதும் கொண்டாடப்பட வேண்டும். தமிழ்நாடு ஏஐடியுசி பொதுக்குழு உறுப்பினர்களுக்கான மூன்று நாள் பயிலரங்கம் மாமல்லபுரத்தில் நடத்துவது என்ற மாநில நிர்வாக குழு முடிவினை ஏற்று அதனை சிறப்பாக நடத்துவது என தீர்மானிக்கப்பட்டது.

# விருதுநகரில் மாணவர்கள் சந்திப்பு

விருதுநகர் மாவட்டம் திருவில்லிபுத்தூரில் அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தின் சார்பில் மாணவர் சந்திப்பு நடைபெற்றது.

இதற்கு மாவட்ட செயலாளர் ஸ்ரீராம் தலைமை வகித்தார். திருவேங்கடம் வரவேற்றார். மாநில செயலாளர் பா.தினேஷ் விளக்கவுரை நிகழ்த்தினார். கருப்பசாமி நன்றி கூறினார். மாவட்டம் முழுவதும் உறுப்பினர் பதிவு நடத்துவது என முடிவு செய்யப்பட்டது.

# கட்சி வளர்ச்சி நிதி

◆ மதுரை புறநகர் மாவட்டம், திருப்பரங்குன்றம் முனுசு மா.சுப்பிரமணியம் இல்லத் திருமணவிழா 25.10.2023 ஆம் தேதி திருப்பரங்குன்றத்தில் நடைபெற்றது.

கட்சியின் கிழக்கு பகுதி செயலாளர் முனுசு செந்தில் – எஸ்.காஞ்சனா தம்பதியரின் மகன் எஸ்.மணிபாரதி எஸ்.புளியங்குளம் எஸ்.சோமு எஸ்.அனிதா தம்பதியரின் மகள் சோ.திவ்யா ஆகியோர் மணவிழாவில் கலந்து கொண்ட கட்சியின் மாநில துணைச் செயலாளர் நா.பெரியசாமி அவர்களிடம் கட்சி வளர்ச்சி நிதியாக ரூ.5000 மணமக்கள் வழங்கினர். இந்நிகழ்வில் கட்சியின் புறநகர் மாவட்டச் செயலாளர் பி.முத்துவேலு, மாநிலக்குழு உறுப்பினர் மகாமுனி, திருப்பரங்குன்றம் இடைக்குழுச் செயலாளர் விஜயா, துணைச் செயலாளர் நாகஜோதி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

◆ இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பவானி நகரக்குழு உறுப்பினர் பி.இ.குணசேகரன் அவர்களின் மூத்த மகனும் 20 வது வார்டு சிபிஐ நகர மன்ற உறுப்பினர் கு.கல்பனா எம்.சி. அவர்களின் தம்பியும் 15 வது வார்டு கட்சி உறுப்பினர் கு.சிரஞ் சீவி – எஸ்.அமிர்தவள்ளி என்கிற சித்ராதேவி திருமணம் 27. 10.2023 குமாரபாளையம் புளியம்பட்டியில் நடைபெற்றது.



இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில கட்டுப்பாட்டு குழு தலைவர் கே.சுப்பராயன் எம்.பி., சிபிஐ மாநில துணை செயலாளர் நா.பெரியசாமி எக்ஸ்.எம்.எல்.ஏ., மாநிலக்குழு உறுப்பினர் பி.எல்.சுந்தரம் எக்ஸ்.எம்.எல்.ஏ ஆகியோர் பங்கேற்று மணமக்களை வாழ்த்தினர். மணமக்கள் கட்சி வளர்ச்சி நிதி ரூ.5000 யாக கே.சுப்பராயன் எம்.பி. அவர்களிடம் வழங்கினர். சிபிஐ வடக்கு மாவட்ட செயலாளர் எஸ்.மோகன்குமார், மாநிலக்குழு உறுப்பினர்கள் டி.ஏ.மாதேஸ்வரன், எஸ்.சின்னச்சாமி உள்ளிட்ட நிர்வாகிகள் மணமக்களை வாழ்த்தினர்.

# நூறு நாள் வேலை: கூலி பாக்கி கோரி விதொச ஆர்ப்பாட்டம்



திருப்பூர் புறநகர் மாவட்டம் உடுமலைப்பேட்டை கமிட்டி மடத்துக்குளம் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு, தமிழ் மாநில விவசாய தொழிலாளர்கள் சங்கத்தின் சார்பில் நூறுநாள் வேலை திட்ட பணியாளர்களுக்கு சம்பள பாக்கியை உடனடியாக வழங்க வேண்டும் என்று கோரி முத்துசாமி தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்பாட்டத்தில் கட்சி மாவட்ட செயலாளர் கே.எம்.இசாக், வி.தொ.ச.மாவட்ட செயலாளர்.வி.பி.பழனிசாமி, கட்சிமாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் சி.சுப்பிரமணியம், கட்சி தாலூகா கமிட்டி செயலாளர் வி.சௌந்தரராஜன், மாவட்டகுழு உறுப்பினர் ரணதேவ், கட்சி நிர்வாகிகள் என்.கிருஷ்ணசாமி,தம்பிராஜ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். இறுதியாக சங்கத்தின் செயலாளர்.எம்.ரமேஷ் தலைமையில் வட்டார வளர்ச்சி அலுவலரிடம் மனு கொடுக்கப்பட்டது.

## இந்த வார தம்பிக்குறள்

### 137. அளவுக்கு மிஞ்சிய ஊக்கம்

**அளவுக்கு மிஞ்சிய ஊக்கம் அளவுக்கு**
**மிஞ்சிய தாஅகும் சோர்வு.**


ஒரு செயலைச் செய்யும் போது ஊக்கத்தோடுதான் செய்ய வேண்டும். ஊக்கமே அளவுக்குமிஞ்சினால் சோர்வை உண்டாக்கும்.

**ஆற்றலில் எல்லாஅம் ஆற்றல் அளவறிந்து**
**போற்றிப் பொருத்தல் புலம்.**

திறமைகளில்எல்லாம்திறமைஎன்பதுசெயல்புரிகையில் அளவறிந்து, இடமறிந்து, பொருத்தம் அறிந்து, செயல் படுவதாகும்.(பொருள்,இடம்,காலத்துடன் அளவும் அறிக).

# நூல் நயம்

## தமிழகத்தின் பகத்சிங்




சமுதாயத்தின் முன்னேற்றத்திற்காக எந்தவித பிரதிபலனும் பாராமல் உழைக்கிறவர்கள் மாவீரர்கள். அப்படிப்பட்ட மகத்தான மாவீரன் தான் பகத்சிங். பகத்சிங் வழியில் தமிழ்நாட்டில் எடுத்துக்காட்டத்தக்க இளைஞராக வாழ்ந்து, தூக்குமடையில் உயிர்நீத்த ‘தூக்கு மேடை பாலு’ அவர்களை இன்றைய இளைஞர்களுக்கு அடையாளம் காட்ட , தமிழகத்தின் பகத்சிங் என்கிற இந்நூலை ஆசிரியர் கணேசன் எழுதி உள்ளார்

மதுரை உசிலம்பட்டி அருகில் உள்ள ஒரு கிராமத்தில் வாழ்ந்த பாலு, பெரிய படிப்பு ஏதும் இல்லாததால் வேலை தேடி மதுரைக்கு வந்தார். மதுரை ஹார்வி மில்லில் வேலையில் சேர்ந்தார். பின்னர் விடுதலை போராட்டத்தில் நாட்டம் கொண்ட பாலு. அந்நிய ஹார்வி மில்லில் இருந்து வேலையை ராஜினாமா செய்து விடுகிறார். பின்னர் தொழிற்சங்க வேலைகளை செய்து வருகிறார். சிறிது காலம் கழித்து போலீஸ் வேலையில் சேருகிறார்.

காவல்துறை பணியில் இருந்தாலும் நியாயத்தின் பக்கம் நிற்க அவர் மனம் தூண்டுகிறது. இதனால் தேச பக்தர்களிடத்திலும், கம்யூனிஸ்டுகளிடத்திலும் கரிசனையோடு நடந்து கொள்கிறார். இதுவே அவருக்கு வினையாகி விடுகிறது. கம்யூனிஸ்ட்டுகளை வேவு பார்த்த செண்பகம் சேர்வை என்கிற ஏட்டையா இறந்து விடுகிறார். சந்தர்ப்பத்தை எதிர்பார்த்த காவல்துறை பாலு மீதும், அவருடைய தோழர்கள் மருதை, மொட்டையன், டேவிட் ,ராஜாமணி, வீரய்யா, ஜோசப் உள்ளிட்ட ஆறு பேர் மீது கொலை குற்றம் சாட்டி தூக்கு தண்டனை விதித்து விடுகிறது. உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்ததில் ஐவருக்கு ஆயுள் தண்டனையும். பாலுவுக்கு தூக்கு தண்டனையும் உறுதியானது. பாலுவை பார்க்க சிறைக்கு கூட்டம் கூட்டமாக தொழிலாளர்களும் விவசாயிகளும் திரண்டனர். பாலுவின் உயிரைக் காப்பாற்ற அன்றைய கம்யூனிஸ்ட் கட்சியின் பெருந்தலைவர்கள் எல்லாம் எவ்வளவோ முயன்றும் இயலாமல் போய்விட்டது.

சுட்டுப் பொசிக்கினாலும், தோழர்களை தூக்கில் ஏற்றினாலும், விட்டுப் பிரியாது செங்கொடி, வீரம் குறையாது என்று பாடியபடி தூக்கு மேடை ஏறினார் பாலு. அந்த மகத்தான மனிதனின் வரலாற்றோடு வேறு சில கட்டுரைகளும் அடங்கி தொகுப்பு இது. அனைவரும் வாங்கி படிக்கவும்.

– இன்சுவை பாரதி

| | | | |
|---|---|---|---|
| நூலாசிரியர் | : எஸ். கணேசன் | | |
| பக்கம் | : 64 | விலை: | 50 |
| வெளியீடு | : நியூஸ் மேன் பப்ளிகேஷன், 43, யூனிகார்ன் காம்ப்ளக்ஸ், குருவிக்காரன் சாலை, அண்ணாநகர், மதுரை–625020 | | |

## சனாதன தர்மமும் சமூக நீதியும்




தர்மம் என்கிற பெயரில் ஒரு அதர்மம் தலை விரித்து ஆடுகிறது என்றால் அதுதான் சனாதன தர்மம். இந்தியாவில் சனாதன தர்மத்தின் பெயரால்தான் பல்வேறு சமூக அடக்குமுறைகள், ஏற்றத்தாழ்வுகள் இன்னமும் நிலவிக் கொண்டிருக்கின்றன . எனவே இவற்றை ஒழித்து, சமத்துவ சமுதாயத்தை காண வேண்டும் என்று முயலுகிற போது, பல்வேறு கூப்பாடுகள் எழுப்பப்படுகின்றன.

சென்னையில் நடைபெற்ற சனாதான ஒழிப்பு மாநாட்டில் பங்கேற்ற அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் “சனாதன எதிர்ப்பு மாநாடு என்று போடாமல், சனாதன ஒழிப்பு மாநாடு என்று போட்டிருக்கிறீர்கள். அதற்கு என்னுடைய வாழ்த்துக்கள். சிலவற்றை நாம் ஒழிக்கத்தான் வேண்டும். எதிர்க்க முடியாது. கொசு, டெங்கு காய்ச்சல், மலேரியா, கொரோனா ஆகியவற்றையெல்லாம் நாம் எதிர்க்க கூடாது. ஒழித்துக் கட்ட வேண்டும். அப்படி தான் இந்த சனாதனம்“ என்று கூறியிருக்கிறார்.

இதற்குத்தான் ஆதிக்க வாதிகள் வானத்திற்கும் பூமிக்கும் விழுந்து குதிக்கிறார்கள். இந்த சனாதன தர்மத்தின் பெயரால்தான் வர்ண பேதங்களை சொல்லி, மனிதர்களை நான்கு வர்ணங்களாக பிரிக்கிறார்கள். பெரும்பான்மை மனிதர்களை சூத்திரர்கள் என்கிறார்கள். சிலரை தீண்ட தகாதவர்கள் என்கிறார்கள். சாலையில் நடக்கக்கூடாது, குளங்களில் நீர் அருந்தக்கூடாது, பள்ளியில் படிக்க கூடாது, ஏன் பெண்கள் மேலாடை அணியக் கூடாது என்றெல்லாம் கட்டுப்பாடுகள் விதித்து மனிதர்களை மனிதர்களே தாழ்த்தியது இந்த சனாதன தர்மம் தான் என்கிற பொழுது, இதை ஒழிக்காமல் எவ்வாறு வேடிக்கை பார்க்க முடியும்?

சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்பது இந்திய அரசியல் சாசன சட்டம். அந்த அரசியல் சாசன சட்டத்தை ஏற்றுக் கொண்டவர்கள் பிறவி யிலேயே ஏற்றத்தாழ்வுகளை கற்பிக்கும் சனாதன தர்மத்தை எவ்வாறு ஏற்றுக் கொள்ள முடியும். அவ்வாறு ஏற்றுக் கொண்டால் அது தங்கள் ஏற்றுக் கொண்ட அரசியல் சாசனத்திற்கு முரணானது அல்லவா? இது கூட உணராத சங்கீகள் தான் இப்போது பெரும் கூச்சலிடுகிறார்கள்

எனவேதான் தமிழகத்திற்கும், இந்தியாவிற்கும் தேவை சனாதன தர்மம் அல்ல, சமூக நீதி என்கிற கருத்தை வலியுறுத்தும் இந்த நூலை டாக்டர் ஜி. ஆர். ரவிந்திரநாத் எழுதி உள்ளார். அனைவரும் வாங்கி படிக்கவும்.

–சமரன்

| | | | |
|---|---|---|---|
| நூலாசிரியர் | : டாக்டர் ஜி.ஆர். ரவிந்திரநாத் | | |
| பக்கம் | : 40 | விலை : | 25 |
| வெளியீடு | : நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 41 பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை – 50 | | |

# ஏஐடியுசி 104வது அமைப்பு தினம்



**மணப்பாறை:** அரசு போக்குவரத்து கழக பணிமனை அலுவலகம் முன்பு மண்டல பொதுச் செயலாளர் சுந்தர்ராஜ் தலைமையில், ஏ ஐ டி யு மாவட்டத் துணைத் தலைவர் ஜனசக்தி உசேன் கொடி ஏற்றி உரை நிகழ்தினார். மறைந்த குரு தாஸ் தாஸ் குப்தா வின் நான்காம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு, அவரின்திருவுருவப் படத்திற்கு மாநில துணைப் பொது செயலாளர் சுப்ரமணியன் மலர் தூவி புகழ் அஞ்சலி உரை நிகழ்தினார். கிளை செயலாளர் மாசிமலை கண்ணன் உள்ளிட்ட அனைத்து நிர்வாகிகளும் கலந்து கொண்டனர்.

நகராட்சி அலுவலகம் முன்பு ஆட்டோ ஆம்புலன்ஸ் தொழிலாளர் சங்க தொடக்கவிழாவிற்கு ஏஐடியூசி மாவட்ட செயலாளர் சுப்ரமணியன் தலைமை வகித்தார். சங்க தலைவர் வேளங்கண்ணி, செயலாளர் கிருஷ்ணபெருமாள், பொருளாளர் பூமிநாதன் முன்னிலை வகித்தனார்.

நகராட்சி அலுவலகம் தூய்மை பணியாளர்கள் சங்க கொடியோற்று நிகழ்வுக்கு ஏஐடியுசி மாவட்ட துணைச் செயலாளர் ஜனசக்தி உசேன் தலைமை வகித்தார். துணைச் செயலாளர் அருணகிரி, துணைத் தலைவர் குமார், காளியப்பன், தமிழரசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஏஐடியூசி மாவட்ட செயலாளர் சுப்ரமணியன் சிறப்புரை நிகழ்தினார்.

விராலிமலை சாலையில் அமைப்பு சாரா தொழிலாளர் சங்க பொது செயலாளர் நல்லுச்சாமி தலைமையில், சங்கத்தின் தலைவர் பழனிச்சாமி கொடி ஏற்றினர்.

**திருச்சி:** திருச்சி துவாக்குடி அரசு போக்குவரத்து கழக பணிமனை முன்பு, ஏஐடியுசி 104 வது அமைப்பு தின கொடி ஏற்றி, ஏ ஐ டி யு சி அகில இந்திய முன்னாள் பொதுச் செயலாளர் குரு தாஸ் தாஸ் குப்தா வின் நான்காம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு அவரின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி புகழ் அஞ்சலி செலுத்தப்பட்டது.

நிகழ்வுக்கு கிளை செயலாளர் பழனிச்சாமி தலைமை வகித்தார். கொடியை சாமிநாதன் ஏற்றிவைத்தார். கௌரவ தலைவர் மாரியப்பன் சங்க வரலாறை எடுத்துரைத்தார். முத்துசெல்வன், சுந்தரவேல் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

# மூத்ததோழர் எம்.ஏ. பழனியப்பன் அவர்களுக்கு பாராட்டு, பரிசளிப்பு

மூத்த தோழர் எம்.ஏ. பழனியப்பன் அவர்களுக்கு கோவையை அடுத்த கைக்கோளபாளையம் கிளையில் பாராட்டு விழா நடைபெற்றது.

எம்.ஏ.பழனியப்பன் கோவை மாவட்டம் எஸ்.எஸ்.குளம் ஒன்றியம் மயிலம்பட்டி கிராமத்தில் பிறந்தவர். 1968 முதல் 72 வரை கோவை ஜில்லா மில் தொழிலாளர் சங்கத்தில் பணியாற்றினார். 1972ல் மாஸ்கோவில் அரசியல் கல்வி பயின்றார். பின்னர் அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் கோவை மாவட்ட செயலாளர், மாநில தலைவர். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் கோவை மாவட்ட துணை செயலாளர் என பல்வேறு பொறுப்புகளை வகித்தார். ஜனசக்தி ஆசிரியர் குழுவில் நீண்ட காலம் பணியாற்றியுள்ளார். முதுமை கால பிரச்சனைகளால் தற்போது ஓய்வில் இருக்கிறார். அவருக்கு கைகோளபாளையம் கிளையின் சார்பில் மக்கள் நல போராளி எம்.ஏ.பழனியப்பன் என்று பாராட்டி நினைவு பரிசு வழங்கப்பட்டது.

இதில் கலந்துகொண்டு பேசிய கவிஞர் கே. ஜீவபாரதி எம்.ஏ. பழனியப்பன் 130 புத்தகங்கள் எழுதியுள்ளார். தற்போது உடல் நல குறைவு ஏற்பட்டு சரியாக பேச முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. ஆனாலும் அவரால் பேனா பிடித்து எழுத முடியும். பேசத்தானே முடியாது. எனவே, தொடர்ந்து எம்.ஏ. பழனியப்பன் எழுத வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன் என்று கூறினார்.

இந்தப் பாராட்டு விழா நிகழ்ச்சிக்கு ஆர்.ரங்கராஜு தலைமை தாங்கினார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் எஸ்.எஸ். குளம் ஒன்றிய குழு செயலாளர் சி.மோகன் வரவேற்புரை நிகழ்த்தினார். டி.எம்.டி. ஆர்.ராமசாமி, பி.முத்துசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் வி.எஸ்.சுந்தரம், மாவட்ட செயலாளர் சி.சிவசாமி, இந்திய கலாச்சார நட்புறவுக் கழகம் மாநில பொது செயலாளர் எஸ்.ராதாகிருஷ்ணன், தமிழ்நாடு ஏ.ஐ.டி.யூ.சி. கட்டட தொழிலாளர் சங்கம் மாநில செயலாளர் ஆர்.துரைசாமி, ஆர்.ஏ.தங்கராஜா, ஆசிரியர் பெ.நடராஜன் ஆகியோர் வாழ்த்தி பேசினர். கைகோளபாளையம் கட்சி கிளை செயலாளர் சி.விஸ்வநாதன் நன்றி கூறினார்.

# இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகம் மீது தாக்குதல் கண்டனம்



இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு தலைமை அலுவலகம் சென்னை மாநகரில், 43 செவாலியே சிவாஜி கணேசன் சாலை, தியாகராயர் நகர், சென்னை 600 017 என்ற முகவரியில் 50 ஆண்டுகளுக்கு மேலாக இயங்கி வருகிறது. 1973 ஆண்டு விமான விபத்தில் இறந்து போன கட்சி தலைவர் கே.பாலதண்டாயுதம் நினைவாக “பாலன் இல்லம்” என்ற பெயரில் அமைந்த கட்சி அலுவலகம் எட்டு மாடிக் கட்டமாக புதுப்பித்து, வலுவான சுற்றுச் சுவர் கொண்ட வளாகத்தில் செயல்பட்டு வருகிறது.

இந்த அலுவலகத்தின் கிழக்கு பகுதியில் உள்ள தாமஸ் சாலையில் நேற்று (27.10.2023) இரவு 7.45 மணி முதல் 9.30 மணி வரை சமூக விரோத விஷமிகள் கற்களையும், பாட்டில்களையும் வீசி தாக்குதல் நடத்தியுள்ளனர். கட்சி அலுவலக பாதுகாவலர் உள்ளிட்ட பணியாளர்கள் தாக்குதல் நடத்தும் நபர்களை கண்டறியும் முயற்சிக்கும் போது, எங்கோ பதுங்கி விடுகின்றனர். அக்கம், பக்கம் இருந்தவர்களிடம் விசாரித்தால் அவர்கள் எதுவும் தெரியாது என்று கூறுகின்றனர்.

இது தொடர்பாக காவல்துறைக்கு புகார் கொடுத்து, விசாரணை நடந்து வந்த நிலையில், காவல்துறையினர் இருந்த இடம் நோக்கி கற்களும், பாட்டிலும் வீசப்பட்டன. இதனை தொடர்ந்து விசாரணையை தீவிரப்படுத்திய காவல்படையினர் ஐந்து நபர்களை விசாரணைக்கு அழைத்து சென்றுள்ளனர். கட்சி அலுவலகத்தின் மீது தாக்குதல் நடத்திய சமூக விரோதிகளின் சட்ட விரோதச் செயலை இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வன்மையாகக் கண்டிக்கிறது.

இந்த குற்றச் சம்பவத்தில் ஈடுபட்ட குற்றவாளிகள் அனைவரும் கைது செய்து, சட்டத்தின் பிடியில் இருந்து தப்பிவிடாமல் தண்டிக்கும் வகையில் உறுதி நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்துவதுடன், தாக்குதலின் பின்னணி குறித்து முழுமையாக விசாரிக்க வேண்டும் என தமிழ்நாடு அரசை கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு இரா.முத்தரசன் அறிக்கையில் கூறியுள்ளார்.

# சென்னை பல்லவன் சாலையில் போக்குவரத்து தொழிலாளர்கள் பெருந்திரள் அமர்வு போராட்டம்

அனைத்து சங்க கூட்டமைப்பு சார்பில் சென்னை பல்லவன் சாலையில் 301023 அன்று ( AITUC, CITU, INTUC, HMS, TTSF, MLF, AALLF, DWU ) அரசு போக்குவரத்து கழகங்களில் ஏற்பட்டுள்ள 20 ஆயிரம் காலி பணியிடங்கள் நிரப்பிட வேண்டும். சட்டவிரோத ஒப்பந்த முறை பணி நியமனம் தவிர்த்து நேரடி நியமனம் செய்திட வேண்டும். பணியாளர் பற்றாக்குறை காரணமாக இயக்காமல் நிறுத்தி வைத்துள்ள சுமார் 3000 பேருந்துகள் இயக்கிட வேண்டும். சென்னையில் நாள் ஒன்றுக்கு 30 லட்சம் பயணிகள் பயணிக்கின்றனர். ஒரு பயண நடையின் போது பேருந்து கொள்ளளவுக்கும் அதிகமாக சுமார் 160 பயணிகளை ஏற்றி சென்னை மாநகர பேருந்துகள் சேவையாற்றி வருகின்றன. கடந்த ஆண்டில் தேசிய அளவில் அதற்கான வெகுமதியும் கிடைத்துள்ளது. குறைவான பேருந்துகளை இயக்குவதால் பேருந்துகளில் அதிக கூட்டம் இருப்பதால் இடையில் உள்ள நிறுத்தங்களில் பேருந்தில்



பயணிகள் ஏற முடியவில்லை. அன்றாடம் பணி செய்து சம்பளம் பெரும் பாமர மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது.

போக்குவரத்து கழகங்களில் நாளொன்றிற்கு 16 கோடி ரூபாய் வருவாய் இழப்பு ஏற்படுவதாக சொல்லப்படுகிறது. பேருந்து இயக்காமல் நிறுத்துவதால் ஏற்படும் வருமான இழப்பும் இதனுடன் சேர்ந்துள்ளது.

தமிழக அரசின் நிதி அமைச்சர் 98 21 போக்குவரத்து கழகங்கள் பற்றிய வெள்ளை அறிக்கையை வெளியிட்டிருந்தார். போக்குவரத்து கழகங்களை மேம்படுத்துவதற்கான பொருளாதார நிபுணர் குழு துரித நடவடிக்கை எடுக்க வேண்டும்

அரசு பணியாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ள அகவிலைபடி உயர்வு 4% தொழிலாளர்களுக்கு வழங்கப்படவில்லை. எட்டு ஆண்டு காலமாக 90,000 அரசு போக்குவரத்து ஓய்வூதியர்களுக்கு நிறுத்தி வைக்கப்பட்டுள்ள அகவிலைப்படி உயர்வு தேர்தல் வாக்குறுதி மற்றும் சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவின் படி வழங்கிட வேண்டும்.142003க்கு பின்பு பணியில் சேர்ந்தவர்களை பழைய ஒய்வூதியத் திட்டத்தில் இணைத்திட வேண்டும். 15 ஆவது ஊதிய ஒப்பந்த பேச்சு வார்த்தையை உடனடியாக துவக்கிட வேண்டும். இவைகளை வலியுறுத்தி வரும் காலங்களில் கூட்டமைப்பு சங்கங்களின் சார்பில் வேலை நிறுத்தம் உள்ளிட்ட போராட்டங்கள் நடத்தப்படும்.

## வடசென்னையில் டாஸ்மாக் கடை மூப்பட்டது, போராட்டம் வெற்றி

NFIW,AISF,AIYF சார்பாக கல்வி கூடம் அருகே உள்ள டாஸ்மாக் கடை எண்.57 யை நிரந்தரமாக மூட வலியுறுத்தி கையெழுத்து இயக்கம், தியாகராய கல்லூரிக்கு முன்பாக நடைபெற்றது.




இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் 42வது வார்டு மாமன்ற உறுப்பினரும் இந்திய மாதர் தேசிய சம்மேளனத்தின் மாவட்டத் தலைவருமான மோ.ரேணுகா துவக்கி வைத்தார்.

எம்.எஸ்.மூர்த்தி, த.கு.வெங்கடேஷ் வேம்புலி, மாவட்ட துணை செயலாளர் எம்.ஜெய்சங்கர், இராஜசேகர், ஹேம்பிரியா, ஏ.இராமலிங்கம், ஜெ.ரவி, எம்.நத்தானியேல், ஜி.எல்.சீனிவாசலு, மா.மாணிக்கராஜ், கே.ஆர்.சிவா உள்ளிட்ட தோழர்கள் பங்கேற்றனர்.

போராட்டத்திற்கு பிறகு டாஸ்மாக் வடக்கு மண்டல மேலாளர் டாஸ்மாக் கடை 10 நாட்களுக்குள் அகற்ற என்று கூறினார்.

அதன் படி 31.10.2023 அன்று டாஸ்மாக் கடை 57 நிரந்தரமாக மூடப்பட்டது.

நமது மாமன்ற உறுப்பினர் ரேணுகா அவர்களின் தொடர் முயற்சியாலும், போராட்டத்தின் விளைவாகவும் பல ஆண்டுகால மாணவர்கள் மற்றும் மக்கள் கோரிக்கை வெற்றி பெற்று உள்ளது.

## தென்சென்னையில் கட்சிக் "குடும்பங்களின் சங்கமம்"

தென்சென்னை மாவட்ட இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, அரசு ஒய்வூதியர் கிளையின் சார்பாக ஒரு வித்தியாசமான கிளைக் கூட்டம் "பாலன் இல்லத்தில்" குடும்பங்களின் சங்கமம் வெகு சிறப்பாக நடைபெற்றது.

அதாவது கட்சிக் கிளை உறுப்பினர்கள் தங்கள் இணையருடன் கலந்துகொண்டனர். கட்சித் தோழரின் இணையரில் அநேகமாக பலரும் கட்சியின் தலைமையகம் பாலன் இல்லத்திற்குள் வருவது இதுதான் முதல் முறை! கிளைச் செயலர் தோழர் டி.பி.ஜெயராமன் தலைமையில் நடைபெற்ற இந்த சிறப்புக் கூடலில் சுய அறிமுகம் பரஸ்பர அறிமுகமும் அனுபவங்களும் பகிர்ந்துகொள்ளப்பட்டன. புத்தகங்களும் பரிசுப் பொருட்களும் பரிமாற்றமாயின.

மாநில செயற்குழு உறுப்பினரும் ஏஐடியூசி தேசிய செயலாளருமான வஹிதா நிஜாம் வாழ்த்திப் பேசி பாராட்டினார். மாநிலக் குழு துணைச் செயலாளர் மு.வீரபாண்டியன் இந்த முயற்சியைப் பாராட்டி தனது மகிழ்ச்சியைப் பகிர்ந்துகொண்டார்.

மாவட்டச் செயலர் எஸ்.கே.சிவா, ஏஐஒய்எஃப் மாவட்டத் தலைவர் வித்யா, விகேஜியின் மகள் ப்ரீதிலதா ஆகியோர் உடனிருந்து அத்துணை உதவிகளையும் நல்கினர். இந்த நிகழ்வு மதிய உணவுடன் இனிதே நிறைவுற்றது.

## போதைப் பொருள் விற்பனையைத் தடுக்க உறுதியான நடவடிக்கை எடுத்திடுக!

### இளைஞர் பெருமன்றம் மாநிலக்குழு வலியுறுத்தல்



அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் தமிழ்நாடு மாநிலக் குழுக் கூட்டம் திருப்பூரில் மாநில துணைத்தலைவர் கு.ராஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது. மாநில செயலாளர் க.பாரதி செய்ய வேண்டிய பணிகள் குறித்து பேசினார்.

திருப்பூர் நாடாளுமன்ற உறுப்பினர் கே.சுப்பராயன் அரசியல் விளக்கவுரையாற்றினார்.

கூட்டத்தில், இந்தியாவில் அதிகரித்து வரும் வேலையின்மையைப் போக்க ஒன்றிய, மாநில அரசுகள் உறுதியான நடவடிக்களை மேற்கொள்ள வேண்டும், நீட் தேர்வில் இருந்து தமிழகத்திற்கு ஒன்றிய பாஜக அரசு நிரந்தர விலக்கு அளிக்க வேண்டும், தமிழ்நாட்டில் இளைஞர்கள், மாணவர்களை குறிவைத்து நடத்தப்படும் போதைப் பொருள் விற்பனையை தடுத்து நிறுத்த, உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும்; துணை போகும் அதிகாரிகளை நீக்கம் செய்ய வேண்டும்; மேலும், ஆளுநரின் அரசியலமைப்புச் சட்ட விரோத நடவடிக்கைகளைக் கண்டித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்தில், இளைஞர் பெருமன்றத்தின் மாநில துணைச் செயலாளர்கள் துரை. அருள்ராஜன், வே.வசந்தகுமார், இரா.தமிழ் பெருமாள், தேசியக் குழு உறுப்பினர்கள் மு.பார்த்திபன், ஆர்.பவிதாரணி, மாணவர் பெருமன்ற மாநிலச் செயலாளர் பா.தினேஷ், திருப்பூர் மாநகர் மாவட்ட அமைப்பாளர் அரவிந்த் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

## கலை இலக்கிய செய்திகள்

### நூல் அறிமுக விழா

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் திண்டுக்கல் மாவட்டக்குழு மற்றும் மாவட்ட மைய நூலகம் இணைந்து நடத்திய புக்கர் விருது பெற்ற எழுத்தாளர் அருந்ததி ராயின் "பெருமகிழ்வின் பேரவை" நூல் அறிமுகம் மாவட்ட மைய நூலகத்தில் முனைவர் ஆ.ச.சேரிவாணன் தலைமையில் நடைபெற்றது. சு.பிரபாகரன், மாவட்டச் செயலாளர், த.க.இ.பெ வரவேற்புரை ஆற்றினார்.

மாநிலச் செயற்குழு உறுப்பினர் கவிஞர் கோ.கலியமூர்த்தி "பெருமகிழ்வின் பேரவை" நூல் குறித்து அறிமுக உரையாற்றினார். கோவிந்தராஜ், முனைவர் ஸ்ரீ.பாலசுந்தரி, கவிஞர் கா.பிரபாகரன், கவிஞர் திண்டுக்கல் திலகவதி ஆகியோர் கருத்துகளை கூறினர். கவிஞர் கோ. கலியமூர்த்தி அவர்களுக்கு கவிஞர் ச.சிவக்குமார் நினைவுப் பரிசு வழங்கினார். த.சுகுமார் நன்றி கூறினார்.

### கவியரங்கம்

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் காஞ்சிபுரம் மாவட்டக் குழுவின் சார்பாக காந்தி என்ற தலைப்பில் கருத்தரங்கம் பல்லாவரத்தில் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு மாவட்ட செயலாளர் கவிஞர் சி.ராமலிங்கம் தலைமை தாங்கினார். மன்ற வாழ்த்துப் பாடலை டி எஸ் நடராஜன் பாடினார். கண்டோண்மெண்ட் எம்ப்ளாயீஸ் யூனியன் பொதுச் செயலாளர் பாலகிருஷ்ணன் வரவேற்புரை நல்கினார்.

காந்திக்கு ஒரு கடுதாசி என்கின்ற தலைப்பில் கவியரங்கம் நடைபெற்றது. கவிஞர்கள் ஆ.பாஸ்கர், கல்லை ஜெயராமன், எம். யாஸ்மின் ஆகியோர் கவிதை அரங்கேற்றினர்.

கவிஞர் செங்கை கிருட்டிணன் எழுதி அனுப்பிய கவிதையை கந்தசாமி வாசித்தார். காந்தியை மிகவும் தேடுகிறது என்ற தலைப்பில் புதுடில்லி தேசிய காந்தி அருங்காட்சியக இயக்குனர் அ.அண்ணாமலை கருத்துரை வழங்கினார். கருத்துரையாளர் அ.அண்ணாமலை அவர்களுக்கு மாவட்ட தலைவர் ஜீவா மணிக்குமார் கதராடை அணிவித்தார். மாநில செயற்குழு உறுப்பினர் சாத்தூர் நவநீதகிருஷ்ணன் புத்தகம் பரிசளித்தார். சென்னை காந்தி கல்வி நிலைய தலைவர் மோகன் அவர்களுக்கு தேசிய செயலர் டி.எஸ்.நடராசனும், காந்தி கல்வி நிலைய சென்னை பொறுப்பாளர் முனைவர் பிரேமா அவர்களுக்கு ஏஐடியுசி மாநில செயலர் சங்கையாவும் புத்தகங்கள் பரிசளித்தனர். கிளைச் செயலர் மருத்துவர் கி.ஸி சாந்தி கவிதை வாசித்து நன்றி கூறினார்.

### நூல் அறிமுக விழா

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம், கோவை மாவட்ட தலைவர், வெ.சுப்பிரமணியன் எழுதிய அரசாட்சியில் மனசாட்சி மற்றும் வழக்கறிஞர் கே.எஸ். எழுதிய பால்ராஜ் சஹானி ஆகிய நூல்களின் அறிமுக விழா கோவையில் சிறப்பாக நடைபெற்றது. விழாவிற்கு வழக்கறிஞர் இராதாகிருஷ்ணன் தலைமை ஏற்றார். எம்.வி. இராஜன், ப.பா.ரமணி, முகம்மது ரஃபி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். மாநிலத் தலைவர் தோழர் எஸ்.கே.கங்கா நூலைப் பற்றி விரிவாக எடுத்துரைத்தார்.

JANASAKTHI Tamil Weekly Phone: 044 - 28480201
Day of Publication: Every Thursday
Regd. No. TN / CH (C) / 551 / 2021-2023
WPP No: TN / PMG (CCR) /WPP/596/ 2021-2023
**Posted on 04.11.2023 at Egmore RMS 1 / Patrika Channel.**
Registered with Registarar of Newspapers for India, Under Regd No: 1222/57

# ‘போராடுவோம்! வெற்றி பெறுவோம்!’
# ஏஐடியுசி அமைப்பு நாள் கருத்தரங்கம்

**இந்திய தொழிலாளர்கள் தாய் சங்கமான அகில இந்திய தொழிற்சங்க பேராயத்தின் (ஏஐடியுசி) 104 ஆவது அமைப்பு நாளான 31.10.2023 அன்று, ‘போராடுவோம் ! வெற்றி பெறுவோம் !’என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடைபெற்றது.**








உழைக்கும் மக்கள் மாமன்ற வளாக கூட்ட அரங்கில்நடந்தஇக்கருத்தரங்குக்கு தமிழ்நாடு ஏஐடியூசி செயலாளர் ஆர். ஆறுமுகம் தலைமையேற்றார்.

இந்த அமைப்பு தினத்தை பாலஸ்தீன மக்களுக்கு ஒருமைப்பாடு தெரிவிக்கும் நாளாக கொண்டாட ஏஐடியுசி முடிவு செய்திருந்தது. கருத்தரங்கில் பங்கேற்ற அனைவரும் பாலஸ்தீன மக்களோடு ஆதரவு தெரிவித்து உறுதிமொழி ஏற்ற பின்பு கூட்டம் தொடங்கியது.

தமிழ்நாடு ஏஐடியூசி பொதுச் செயலாளர் ம. ராதாகிருஷ்ணன் அனைவரையும் வரவேற்று பேசினார். தமிழ்நாடு ஏஐடியுசி என்ற வலைத்தளத்தை அகில இந்திய வங்கி ஊழியர் சங்க பொதுச் செயலாளர் சி. எச். வெங்கடாசலம் துவக்கி வைத்து உரை நிகழ்த்தினார்.

தமிழ்நாடு இதுவரை பிளாக்கர் மூலம் செய்திகளை பகிர்ந்து வந்தது. “வருங்கால தேவை அறிந்து வலைத்தளம் துவக்கப்பட்டுள்ளது. ஏஐடியுசி அமைப்பு நாளில் துவக்கப்பட்டது மிகவும் சிறப்பானது. பல்வேறு போராட்டங்கள் தியாகங்கள் மூலமாக பெறப்பட்ட உரிமைகள், சட்டங்கள், சலுகைகள் பறிபோய் கொண்டிருக்கின்றன. சட்டங்களை உருவாக்குவதற்காக போராடிய தலைமுறை இப்போது இல்லை. பொருளாதார கோரிக்கைகளை வென்றெடுப்பது தொழிற்சங்கத்தின் பணிதான். ஆனால் அதற்கான அரசியல் சூழல் இருந்தாக வேண்டும். தொழிலாளர்களுக்கு சாதகமான அரசியல் சூழலை உருவாக்கியாக வேண்டும். அனைத்துமே கார்ப்பரேட்டுகளுக்கு சாதகமாக அரசு கொள்கைகள் இருக்கும்போது, அதனை முறியடிக்காமல் பொருளாதார போராட்டங்கள் வெற்றி பெற முடியாது. உரிமைகளுக்கான உறுதிமிக்க போராட்டங்களை முன்னெடுக்க இந்த நாளில் சபதம் ஏற்போம் என்று அவர் பேசினார்.

தனது உடல் நலக்குறைவையும் பொருட்படுத்தாமல் உழைக்கும் மக்கள் மாமன்ற தலைவர் மூத்த தொழிற்சங்க தலைவர் ஆர் குசேலர் நேரில் வந்திருந்து கருத்தரங்கத்தை துவக்கி வைத்து சுமார் ஒரு மணி நேரம் பேசினார்.

ஏஐடியுசி தலைவர்களான மோகன் குமாரமங்கலம், கே.வி. சங்கரன் ஆகியோரின் ஜூனியராக வழக்கறிஞர் பணியை தொடங்கினேன். அவர்களுக்கு நிறைய தொழிற்சங்க பணியில் இருந்ததால், என்னையும் இதில் இழுத்து விட்டார்கள் என்று துவக்கிய குசேலர், பிறகு அவர் தலைமையேற்ற போராட்டங்கள் பற்றியும், 1970ல் ஏஐடியுசி யாரால், எதற்காக பிளவுபடுத்தப்பட்டது என்ற விபரங்களையும் எடுத்துரைத்தார்.

தொழிற்சங்கங்களுக்குள் ஜனநாயகம் நிலவ வேண்டிய அவசியத்தை வலியுறுத்திய குசேலர், ஒரு தொழிற்சாலைக்கு ஒரே ஒரு சங்கம் மட்டுமே இருக்க வேண்டும் என்ற நிலைமையை எட்ட வேண்டும் என்றார்.

ஏஐடியுசி சங்கங்களுக்கு தான் தலைமையேற்றது பற்றியும், அதன் மாநில, தேசிய தலைமைகளோடு தனக்கு இருந்த நெருக்கம் பற்றியும் எடுத்துரைத்தார். டெல்லியில் ஏஐடியுசிக்கு தலைமை அலுவலகம் கட்ட முடிவு செய்தபோது, உழைக்கும் மக்கள் மாமன்றம் ஒரு லட்ச ரூபாயை உடனே தந்தது என்பதையும் தெரிவித்தார்.

பல்வேறு மாநிலங்களில் இயங்கும் தனிச்சங்கங்களளை இணைத்து என்டியுஐ என்ற அமைப்பை உருவாக்கியதையும், அண்மையில் அதிலுள்ள தொழிற்சங்கங்கள் அனைத்தையும் ஏஐடியுசியில் இணைக்க வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றி இருப்பதையும் சொன்னபோது அரங்கில் பெருத்த கைதட்டல் ஆரவாரம் எழுந்தது.

நமது முந்தைய தலைமுறைகள் இத்தனை சட்டங்களை உருவாக்கி வைத்திருக்கும் போது, குறைவான நிரந்தர தொழிலாளர்கள், எந்த உரிமைகளும் அற்ற கான்ட்ராக்ட், கேசுவல், அவுட்சோர்சிங் தொழிலாளர்கள் என்ற கொடுமை உருவாக்கப்பட்டு இருப்பது, தொழிற்சங்க இயக்கத்துக்கு கேவலம் என ஆவேசத்தோடு முழங்கினார்.

பின்னர் “போரிடும் எமக்கு புத்துயிர் தாரீர்” என்ற தலைப்பில் தேசிய செயலாளர் டி.எம்.மூர்த்தி சுருக்கமாக நமது முன்னோர்கள் ஆற்றிய அரும்பெரும் தியாகங்களை எடுத்துரைத்தார். போர்க் குணமிக்க ஊழியர்களை வளர்த்தெடுக்க வேண்டும். அதற்கு இப்பொழுது உள்ள தலைவர்கள் அவர்களுக்கு செயல் பூர்வமான வழிகாட்டிகளாக அமைய வேண்டும். உழைக்கும் மக்களின் உரிமைகளுக்காகவும், சங்க அமைப்பைப் பாதுகாப்பதற்காகவும், கொடும் அடக்குமுறைகளை எதிர் கொண்டு அர்பணிப்போடு வாழ்ந்த மாவீரர்களின் இயக்கத்தின் இன்றைய பிரதிநிதிகள் என்ற உணர்வு நமக்குள் இருக்க வேண்டும் என அவர் வலியுறுத்தினார்.

“தகர்த்தெறிவோம் ஜனசக்தியினாலே” என்ற தலைப்பில் தேசிய செயலாளர் வகிதா நிஜாம் பேசினார். பாலஸ்தீனத்தை நடைபெறும் கொடுமைகளை விளக்கினார்.

உலக நிதி மூலதனம், நாடுகளில் இறையாண்மையையும் தொழிலாளர் உரிமைகளையும் அடிமைகளைப் போல் தொழிலாளர்கள் வேலை வாங்கப் படுகிறார்கள்.

வேலை இழப்பு, பொதுத்துறை அழிப்பு, புதிய வேலைவாய்ப்புகள் இல்லாத சூழ்நிலை உருவாக்கப்படுகிறது. இதனை எதிர்த்து தொழிலாளர்கள் வர்க்க ரீதியாக ஒன்றுபட்டு உறுதிமிக்கப் போராட்டங்களை தொடர்ந்து இடைவிடாது நடத்திட வேண்டும். இன்று தொழிற்சங்கங்கள் உணர்வு ரீதியாக ஒன்றுபட்டு செயல்பட்டாக வேண்டும். அதற்கான ஒருங்கிணைப்பு செய்யும் பணியை ஏஐடியூசி உளமாற செய்து வருகிறது என்றார்.

வடசென்னை மாவட்ட செயலாளர் அருள், மத்திய சென்னை மாவட்ட செயலாளர் மு சம்பத், தென் சென்னை மாவட்ட செயலாளர் அழகேசன், திருவள்ளூர் மாவட்ட செயலாளர் மயில்வாகனன், செங்கல்பட்டு மாவட்ட செயலாளர் எம் ஜஹாங்கீர் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தமிழ்நாடு ஏஐடியுசி வலைதளத்தை உருவாக்கித் தந்த செல்வகுமார், சதீஷ் கார்க்கி ஆகியோருக்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

தமிழ்நாடு ஏ ஐ டி யு சி செயலாளர் ஆ. பாஸ்கர் நன்றியுரைத்தார்.





வெளிவந்துவிட்டது!
மு.வீரபாண்டியன் எழுதிய
இஸ்ரேல் - ஹமாஸ்
போரும் விடுதலையும்
விலை: ரூ.25
NCBH அனைத்து விற்பனை நிலையங்களிலும் கிடைக்கும்
வாங்கிப் படியுங்கள்!


Janasakthi Tamil Weekly Published by **R. Mutharasan** and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliye Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: **K.Subbarayan .,**
Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by **A.Sivakumar** at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.